தர்மசக்கரம்



துந்துபி ௵ ஆனி ௴ சக்கரம் 31 ஆரம் 6

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை, எலமனூர் ஸ்டேஷன், திருச்சி ஜில்லா.

திருநெல்வேலி ஜில்லா

பாபநாசத்தில் அந்தர்யோகம்-19

16, 17 & 18—7—82

பொதியமலை அடிவாரத்தில் இருக்கும் பாபநாசம் க்ஷேத்திரத்தில் 1982ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம் தேதி வெள்ளி, 17ஆம் தேதி சனி, 18ஆம் தேதி ஞாயிறு ஆகிய மூன்று நாட்களிலும் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்கள்** தலைமையில் அந்தர்யோகம் நடைபெறும். அம்பாசமுத்திரம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆறுமைல் தூரத்தில் பாபநாசம் க்ஷேத்திரம் இருக்கிறது.

அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் நபர் ஒன்றுக்கு ரூ. 30-00 விதம், திருநெல்வேலி ஜில்லா, அம்பாசமுத்திரம், நூல் ஜவுளி வியாபாரம், திரு. Sv. Rm. A. நடராஜ முதலியார் அவர்களுக்கு மணியார்டர் மூலமோ, நேரிலோ செலுத்திப் பெயர்களைப் பதிவுசெய்து, அனுமதிகார்டு பெற்றுக்கொள்ளவேண்டும். பதிவு பெற்ற முதல் 200 பேர்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுவார்கள். கலந்துகொள்ளாத அன்பர்களுக்குத் தொகை வாபஸ் செய்ய இயலாது. பதிவு செய்யப் பெற்றவர்களுக்குப் பதிலாக வேறு ஒருவர் எடுத்துக்கொள்ளப்படமாட்டார். பதிவு செய்துகொண்டவர்கள் அனைவரும் ஜூலை மாதம் 15ஆம் தேதி வியாழக்கிழமை மாலையே பாபநாசத்திற்கு வந்துசேரவேண்டும்.

தாய்மார்களும் இதில் கலந்துகொள்ளலாம். பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள். தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான படுக்கை முதலியவற்றைத் தாங்களே கொண்டுவரவேண்டும்.

சென்னை, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், திருக்குற்றாலம், தென்காசி, சங்கரன்கோவில் முதலிய இடங்களிலிருந்து பாபநாசத்திற்குப் போக பஸ்கள் கிடைக்கும். அம்பாசமுத்திரத்திலிருந்து பாபநாசத்திற்கு அடிக்கடி பஸ்கள் கிடைக்கும்.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்	5-00	
எல்லாரும் ஒன்றுகூடி நாமஜபம்	5-30	6-00
நீராடல் முதலியன	6-00	7-30
காலை தியானம்	7-30	8-00
சிற்றுண்டி	8-00	9-00
காலை உபந்யாசம்	9-00	10-00
மௌனம், உழவாரப்பணி	10-00	11-00
பஜனை	11-00	11-45
கோவில் வழிபாடு	11-45	12-30

மாலை

	மணிமுதல்	மணிவரை
போஜனம், ஓய்வு	12-30	3-00
மாலை உபந்யாசம்	3-00	4-00
தனியாக வாசித்தல்	4-00	4-30
பானம், உலாவல், நீராடல் முதலியன	4-30	6-15
நாம ஜபம்	6-15	6-45
தியானம்	6-45	7-15
இரவு போஜனம்	7-15	8-30
சத் சம்பாஷணை	8-30	9-30

குறிப்பு:— மூன்றுவது நாள் ஞாயிறு மாலை 5 மணியுடன் அந்தர்யோகம் முடிவு பெறும்.

காரியதரிசி
Sv. Rm. A. நடராஜ முதலியார், அம்பாசமுத்திரம்.

ஸதானந்த
ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

பாபநாசம் அந்தர்யோகத்தில் தபோவன வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும்.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 31	துந்துபி ௵ ஆனி ㎡	ஆரம் 6

பொருளடக்கம்

			பக்கம்
1.	பிரார்த்தனை		201
2.	அருள்விருந்து		202
3.	பரமஹம்சர் புகட்டிய பெருநெறி விளக்கம்		203
4.	எங்நாள் கண்ணி		206
5.	வேதாந்தம் அனைவரையும் உயர்த்துகிறது		208
6.	யோக வாழ்வு		209
7.	சுவாமி விவேகானந்தரின் கடிதம்		215
8.	ஸ்ரீ லலிதா வியாக்கியானம் - 166		217
9.	ஸத் ஸம்பாஷணை		220
10.	ஆத்ம போதம்	திரு. V.S. நரசிம்மன்	222
11.	பொருளாதாரக் கொள்கைகள்	சுவாமி ஸதானந்தர்	225
12.	அனுமன் கண்ட சீதை	திரு. K. ராமமூர்த்தி M.Com.	229
13.	குறிப்புகள்		233
14.	செய்திகள்		240

வருட சந்தா:	உள்நாடு ரூ. 15-00	வெளிநாடு	ரூ. 35-00
தனி இதழ்	,, ரூ. 1-50	,,	ரூ. 3-00

அந்தர்யோக விவரங்கள்

கோவை ஜில்லா—அன்னூரில் 20—6—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்; காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—பள்ளத்தூரில் 20—6—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா சேவாஸ்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்
உணவு வசதி: பகல் உணவுக்குரு.1-50 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருச்சி ஜில்லா—கரூரில் 27—6—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பசுபதிபாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

உணவுவசதி: பகல் உணவுக்கு ரூ. 1-50 செலுத்திச் சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

சென்னை—புரசவர்க்கத்தில் 27—6—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸர் M. C.T. முத்தையா செட்டியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் [P.T.O.]

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

வடஆர்காடு ஜில்லா—வேலூரில் 27—6—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம், பாலாற்றின் தென்கரை (பழையபாலம் அருகில்)
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சங்கரானந்தர்
உணவுவசதி: பகல் உணவுக்கு ரூ. 1-50 செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜில்லா—சிவத்னதயாபுரத்தில் 27—6—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: முத்து மாலை அம்மன் இந்து தொடக்கப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நிர்வ்யானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—கோவில்பட்டியில் 27—6—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ரயில்வே ஸ்டேஷனுக்கருகிலுள்ள லாயல் மில் ஆரம்பப் பாடசாலை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—முக்காணியில் 4—7—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நிர்வ்யானந்தர்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 11—7—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: விவேகானந்த கல்லூரி
நேரம்: காலை 10-00 மணிமுதல் 4-30 மணிவரையில்
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-50ம் மாலை சிற்றுண்டிக்கு ரூ. 1-00ம் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

தர்மபுரி ஜில்லா—பாப்பாரப்பட்டியில் 10—5—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பழைய சுப்பிரமணிய சுவாமி கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலியில் 11—7—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ம. தி. தா. ஹிந்து கலாசாலை மேல்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரையில்
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

தர்மபுரி ஜில்லா—பாலஜங்கமனஹள்ளியில் 12—7—82 திங்கட்கிழமை

இடம்: அருள்மிகு பச்சையம்மன் தேவஸ்தானம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சேலத்தில் 18—7—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா கல்லூரி பிரார்த்தனை கொட்டகை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்
உணவு வசதி: பகல் உணவுக்கு ரூ. 1-50 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 31 | துந்துபி ௵ ஆனி ீ | ஆரம் 6

பிரார்த்தனை

तस्माच्च सूक्ष्मादिविशेषणानामगोचरे यत्परमार्थरूपम् ।
किमप्यचित्यं तव रूपमस्ति तस्मै नमस्ते पुरुषोत्तमाय ॥

— विष्णुपुराणम्

தஸ்மாச்ச ஸூக்ஷ்மாதிவிசேஷணனுமகோசரே
யத்பரமார்த்தரூபம் ।
கிமப்யசித்யம் தவ ரூபமஸ்தி தஸ்மை
நமஸ்தே புருஷோத்தமாய ॥

— விஷ்ணுபுராணம்

புருஷோத்தமா, உன்னுடைய நிஜசொரூபம் இந்திரியங்களுக்கு எட்டாதது. அத்தகைய பெரிய பொருளாகிய உனக்கு வணக்கம்.

வாயினுல் பேசா மவுனத்தை வைத்துஇருந்தும்
தாய்இலார் போல்நான் தளர்ந்தேன் பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

அருள்தாகம் ஆற்றலை வளர்க்கிறது.

பரஞானம் என்றும் பழுதுபடுவதில்லை.

குறைகூறுவது உறுதிப்பாடில்லாதார் செயலாம்.

மனக்கோணல்களை விலக்கினுல் மனிதன் முனி ஆவான்.

எளிமையும் தூய்மையும் நிறைவும் பண்பட்டார்க்கு அணிகளாம்

நல்வழியில் நடப்பவனுக்குக் கஷ்டதசை கஷ்டமாகத் தென்படுவதில்லை.

பிரார்த்தனையின் பயனை அறிகிறவன் ஒரு பொழுதும் அதைக் கைவிட மாட்டான்.

குழந்தை தாய்ப்பால் அருந்தி வளர்வது முறை. ஆனுல் பெரியோர் அப்படிச் செய்வது பாபம்.

அச்சத்தையும் போராட்டத்தையும் சண்டையையும் தவிர்; அப்பொழுது ஆத்மபோதம் தலையெடுக்கிறது.

உலகனைத்தும் பயன்படாது ஒழிந்துபட்டுப் போயினும் உண்மை ஒருவனுக்கு யாண்டும் துணைபுரிகிறது.

செய்த குற்றத்துக்குத் தண்டனையை முழுமனதோடு ஏற்றுக்கொள்ளுபவன் அதிவிரைவில் மேலோன் ஆகிறுன்.

சூரியன் முன்னிலையில் இருள் இல்லை. அங்ஙனம் தத்துவ ஞானியின் முன்னிலையில் தவறு ஏதும் நிகழ்வதில்லை.

மகப்பேற்றையோ, செல்வத்தையோ, ஆதிக்கத்தையோ நாடுவது உலகத்தவர் போக்கு. சான்றோர் அங்ஙனம் செய்யார்.

மேலோர் கீழோர் ஆவதும், கீழோர் மேலோர் ஆவதும் மனதின் சீர்கேட்டையோ, ஒழுங்குப்பாட்டையோ பொறுத்ததாம்.

உண்பதும் உறங்குவதும் உயிர்கள் அனைத்துக்கும் சொந்தம். விவேகமோ மனிதனுக்குரியதாம் விவேகமில்லாதவன் விலங்குக்குநிகர்.

ஒருவனுடைய பாங்கு அவனுடைய பேச்சினின்று வெளியாவதைவிடப் பன்மடங்கு அவனுடைய பழக்கவழக்கங்களினின்று வெளியாகிறது.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பக்தர்களோடு பரமஹம்சதேவர் உரையாடிக்கொண்டிருக்கிருர்.

சீனிலால்: "மகேந்திரர் சிறுவர்களுடைய மனதைப் பாழ்படுத்துகிருர் என்னும் வதந்தியை மக்கள் கிளப்பி வருகின்றனர். இளைய நரேந்திரனும், பாபுராம் என்பவனும் மகேந்திருடைய பள்ளிக்கூடத்து மாணக்கர்கள் ஆவார்கள். அதே பாங்கில் நரேந்திரன், பால்த்து, பூரணன், தேஜ்சந்திரன், ஆகியவர்களும் பள்ளியில் கல்வி பயின்று வரும் மாணக்கர்களாம். இந்த இளைஞர்களுடைய மனது பரமஹம்சதேவரிடம் கவரப்பட்டிருப்பதற்குப் பொறுப்பாளி மகேந்திரநாதர் என்று இச்சிறுவர்களுடைய பெற்றோர்களும், காப்பாளர்களும் குறைகூறுகின்றனர்."

பரமஹம்சதேவர்: "அப்படியே வைத்துக்கொள்வோம். அப்பெரியவர்கள் சொல்லுக்கு யார்தான் செவிசாய்த்து அதை நம்பப்போகிருர்கள்."

இங்ஙனம் இவர்கள் பேசிக்கொண்டிருந்த பொழுது நரேந்திரன் அறைக்குள்ளே வந்து பரமஹம்சதேவரின் முன்னிலையில் வீழ்ந்து வணங்கினன். கல்விச் சாலையில் அவன் கல்வி பயின்று வந்தான். அவனுக்கு வயது சுமார் பதினேழு அல்லது பதினெட்டு இருக்கும். அவன் கட்டழகே வடிவெடுத்தவன். பரமஹம்சதேவர் அன்னவனிடத்துப் பேரன்பு பூண்டிருந்தார். தன் கைப்பட அவனுக்குப் புசிப்பதற்குப் பட்சணங்கள் வழங்கப் பரமஹம்சதேவர் ஆவல் கொண்டிருந்தார். நரேந்திரனிடத்துப் பரமஹம்சதேவர் பூண்டிருந்த பேரன்பை அவர் விளம்பரப்படுத்திக் கொள்ளவில்லை. அவனைப் பரத்துக்குரியவனுக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் பல தடவைகளில் பரமஹம்சதேவர் அன்னை பராசக்தியிடம் பரிந்து பிரார்த்தித்தது உண்டு. இந்த இளைஞனைப் பரமஹம்சதேவர் நாராயணனுடைய அம்சமாகவே கருதி வந்தார்.

கிரீஷ் (நரேந்திரனைப் பார்த்து): "அதோ பாருங்கள்! இந்த இளைஞன் இங்கே வந்துள்ளான். பரமஹம்சதேவர் இங்கே இப்பொழுது வந்திருக்கிருர் என்னும் செய்தி இந்த இளைஞனுக்கு எப்படித் தெரிய வந்தது? இதெல்லாம் மகேந்திரர் செய்துள்ள சூழ்ச்சியாம்." (இதைக் கேட்டு எல்லாரும் நகைக்கிருர்கள்)

பரமஹம்சதேவர் (புன்னகை பூத்தவராக): "அப்பேச்சை நிறுத்து. ஒன்றும் பேசாதே. மகேந்திரன் இளைஞர்களுடைய மனதைக் கெடுத்து வருகிருன் என்னும் பொருந்தாத வதந்தி ஒன்று ஏற்கனவே பரவிக்கொண்டிருக்கிறது."

அடுத்தபடியாகச் சம்பாஷணை நரேந்திரனேடு நிகழ்வதாயிற்று.

பக்தர் ஒருவர்: "இவ்விளைஞன் முன்பு செய்தது போன்று இந்நாட்களில் ஏன் அடிக்கடி தங்களிடம் வருவதில்லை?"

பரமஹம்சதேவர்: "பசி வந்தால் பத்தும் பறந்துபோம் என்பார்கள். உண்ண உணவில்லாத பொழுது மனிதன் படும்பாடுதான் என்னே! கவிஞன் காளிதாசனே பசிப்பிணி வந்து வாட்டிய பொழுது அவன் படைத்திருந்த நுண்ணறிவு கலங்கிற்ரும்."

பலராம்: "நரேந்திரன் இந்நாட்களில் தன்னுடைய நண்பனுகிய அன்னதா குஹாவைச் சென்று காண்கிருன். அவன் சிவா குஹா குடும்பத்தைச் சேர்ந்தவன்."

பரமஹம்சதேவர். "ஆம், அதைப்பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். நரேந்திரனும் அவனுடைய நண்பர்களும் அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவர் வீட்டில் சந்தித்து அங்கே பிரம்ம சமாஜத்து வழிபாடு நிகழ்த்துகிருர்கள்."

பக்தர் ஒருவர்: "தரபாதம் என்பது அந்த உத்தியோகஸ்தரின் பெயர்."

பலராம் (புன்னகை பூத்தவராக): "அன்னதா குஹன் அகங்காரம் மிகப் படைத்தவன் என்று பிராமணர்கள் அவன் மீது குறை கூறுகின்றனர்."

பரமஹம்சதேவர்: "அன்னவர்களுக்குச்செவி சாய்க்காதே. கொடுப்பவனைப் போற்றுவ

தும், கொடாதவனைத் தூற்றுவதும் அவர்களுடைய இயல்பு. (இதைக் கேட்டு எல்லாரும் நகைக்கிறார்கள்.) அன்னதாவை நான் நேரில் பார்த்திருக்கிறேன். அவன் மிக நல்லவன்."

கூடத்திலே பக்தர்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர். சங்கீர்த்தனங்கள் சிலவற்றிற்குச் செவிசாய்க்கப் பரமஹம்சதேவர் விரும்பினார். அவர் விருப்பத்துக்கு இணங்கித் தரபாதம் என்னும் பெயர் படைத்துள்ள பக்தர் ஸ்ரீ கிருஷ்ணனைக் குறித்து இங்ஙனம் பாடினார்:

'ஓ கேசவா, தௌர்ப்பாக்கியசாலிகளாகிய இங்கே கூடியிருக்கும் உன் தொண்டர்கள் மீது உனது கிருபா நோக்கத்தை நாட்டியருள்வாயாக. பிருந்தாவனத்தின் மைதானங்களின் மீதும் சோலைகளின் உள்ளும் சஞ்சரிப்பதில் நீ பெருமகிழ்வு கொண்டுள்ளாய்.

'எங்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு போகின்ற மாதவா, குழலோசையை மீட்டி இன்பத்தைச் சொரியும் இனிய மூர்த்தியே,

'ஓ மனமே! ஹரியின் நாமத்தை ஓது. ஹரியின் நாமத்தை உரக்கப்பாடு. ஹரியின் நாமத்தைப் போற்று.

'விரஜையின் கண் எழுந்தருளியுள்ள நித்திய குமாரா, பயங்கரமான காளியனை வென்றவனே, மருண்டுபோனவர்களின் அச்சத்தை அகற்றுபவனே.

'வளைந்த கண்ணா, மயில்பீலியைச் சூடாமணியில் அணிந்துள்ளவனே, ஸ்ரீ ராதையின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு போகிறவனே.

'கோவர்த்தன மலையைத் தூக்கிப் பிடித்தவனே, வனமாலை அணிந்தவனே, கம்சனை ஒழித்த தாமோதரா, ஓ கிருஷ்ணா, பிருந்தாவனக் கோபியர்களோடு ஆனந்தப் பரவசம் அடைந்திருப்பவனே.

'ஓ மனமே! ஹரியின் நாமத்தை ஓது. ஹரியின் நாமத்தை உரக்கப் பாடு. ஹரியின் நாமத்தைப் போற்று.'

பரமஹம்சதேவர் (கிரீஷரைப் பார்த்து): "ஹா இனிய பாடல். நீ தான் அதை இயற்றியவனோ?"

பக்தர் ஒருவர்: "ஆம் ஐயனே. சைதன்ய தேவரின் லீலை என்னும் நாடகத்துக்காக இப்பாடல்களை யெல்லாம் பாடியவர் இவரே."

பரமஹம்சதேவர்: " இப் பாடல்களுள் இதைத் தலை சிறந்தது எனலாம்."

பரமஹம்சதேவரின் வேண்டுதலுக்கிணங்கித் தரபாதம் இன்னும் இரண்டு பாடல்களைப் பாடினான். முதல் பாடலில் கிருஷ்ணன்மீது ராதை பூண்டிருந்த பக்தியிலே பங்கு கொள்ளும்படி மக்களை நித்தியானந்தர் தூண்டுகிறார். "வாருங்கள் அனைவரும் வாருங்கள்! ராதையின் பக்தியிலே பங்கு கொள்ளுங்கள். அவளின் அன்பு என்னும் நீர்ப்பெருக்கு விரைந்து பாய்கிறது. நெடுநேரம் அது நிலைத்திருக்கமாட்டாது; எனவே வாருங்கள். அனைவரும் வாருங்கள். எண்ணிறந்த கிளைகளாகப் பிரிந்து அப்பேரன்பு பெருக்கெடுத்துப் பாய்கிறது. வேண்டியவாறு நீங்கள் அதில் பங்கு கொள்ளுங்கள்.

"பேரன்பே வடிவெடுத்துள்ள அக்காரிகை அதை அனைவருக்கும் உரியதாக்குகின்றாள். அளப்பரிய அவளது அன்பு உள்ளத்தை அறவே கவர்கிறது. பேரானந்தத்தை ஊட்டி உயிரை உய்விக்கிறது. ஓடி வாருங்கள். ஹரியின் நாமத்தை ஓதிப்பாருங்கள். அவள் அன்புக்கு இணங்கி அனைவரும் வாருங்கள்."

அடுத்தபடியாக அவர் கௌராங்கரை வர்ணிக்கின்றார்.

"கௌராங்கா, பொன்னார் மேனியனே, நீ யார்? உன் காட்சி என் அருள்தாகத்தை அகற்றுகிறது. அன்புக் கடலிலே நீ கொந்தளிப்பைக் கிளப்புகின்றாய். அதனால் நான் தடுமாற்றமடைகிறேன்.

"அன்றொரு நாள் பிருந்தாவனத்திலே நீ கோபாலனாகப் பசுக்களை வளர்த்தாய். வேணுகானம் மீட்டிய அதே கரங்களைக் கொண்டு அப்பசுக்களை நீ தடவிக்கொடுத்தாய். அதே பாங்கில் கோபியர்களுடைய உள்ளத்தை நீ கொள்ளை கொண்டு போனாய்.

"கோவர்த்தன மலையை உன் கரங்களால் தூக்கிப் பிடித்துக்கொண்டு, பிருந்தாவனத்தை ஆபத்தினின்று நீ காப்பாற்றினாய். ஊடல் கொண்ட கோபியர்களுடைய திருவடிகளில் நீ பணிவுடன் வணங்கினாய்."

இப்பொழுது பக்தர்கள் பாடல் ஒன்று பாடும்படி மகேந்திரரைத் தூண்டினார்கள். அடங்கிய குரலிலே தம்மை மன்னிக்குமாறு அவர் பணிவுடன் வேண்டிக்கொண்டார்.

கிரீஷ்: (பரமஹம்சதேவரிடம் முறையிடுகிறார்) "ஐயனே, நாங்கள் எவ்வளவுதான் வற்புறுத்தினாலும் இந்த மகேந்திரர் வாய்திறந்து பாடல் எதையும் பாடமாட்டேன் என்று பிடிவாதம் பண்ணுகிறார்."

பரமஹம்சதேவர்: (சிறிது ஏமாற்றம் அடைந்த பாங்கில்) "ஆம். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கிடையில் தங்கு தடையின்றி அவன் தன் பல்லைத் திறந்து காட்டுவான். ஆனால் கடவுளைப் புகழ்ந்து பாடு என்று கேட்டாலோ அவன் நாணத்தால் மௌனம் சாதிக்கிறான்."

இதைக் கேட்டு மகேந்திரர் மனத்தகத்துப் பெரிதும் வேதனைப்படுகிறார். அந்த வேதனைக்கிடையில் அவர் வாய் பொத்தியிருக்கிறார்.

சிறிது எட்ட சுரேந்திரமித்திரர் அமர்ந்திருந்தார். அவர் பரமஹம்சதேவரின் பேரன்புக்கு இலக்காகிய சிஷ்யர் ஆவார். அவர் இல்லறத்தைத் தழுவியவர். அன்போடு பரமஹம்சதேவர் அந்த இல்லற பக்தரிடம் இயம்பியதாவது, "பொருந்தாத சிறு நெறியில் நீ சென்றிருந்ததாகக் குறை கூறுகின்றாய். ஆனால் இதோ பார். இங்கு ஒரு பேர்வழி அமர்ந்திருக்கிறான். இவ்விஷயத்தில் உனக்கும் இவனுக்கும் எவ்வளவு தூரம் என்பது உனக்குத் தெரியுமா?"

(முகமலர்ச்சியுடன் சுரேஷ் விடுத்த விடையாவது): "ஆம் ஐயனே, இவ்விஷயத்தில் இவர் என்னுடைய போற்றுதலுக்குரிய அண்ணா ஆவார்." (இதைக்கேட்டு எல்லாரும் நகைக்கின்றனர்.)

பரமஹம்சதேவரிடம் கிரீஷ் பகர்ந்ததாவது: 'ஐயனே, இளமையில் நான் கல்வி ஏதும் கற்றவனல்லன். ஆயினும் என்னைக் கற்றவன் என்று மற்றவர்கள் போற்றுகின்றனர்."

பரமஹம்சதேவர்: "மகிமசரண் நூல்கள் பல கசடறக் கற்ற மேதாவி ஆவார். அது அப்படி அல்லவா?" என்று மகேந்திரனிடம் பரமஹம்சதேவர் கேட்டார்.

மகேந்திரர். "ஆம் ஐயனே."

கிரீஷ்: "என்ன? ஏட்டுக் கல்வியா? அதை நான் வேண்டியவாறு பார்த்திருக்கிறேன். அந்த ஏட்டுச் சுரைக்காய் மேலும் என்னை ஏமாற்றிவிடாது."

பரமஹம்சதேவர்: (புன்னகை பூத்தவராக) "ஏட்டுக் கல்வியைப்பற்றி நான் கொண்டுள்ள கருத்து யாது என்பது உங்களுக்குத் தெரியுமா? புஸ்தகங்கள், சாஸ்திரங்கள் இவை போன்ற ஏடுகள் யாவும் பரமனை அடைதற்கான வழி யாது என்றுமட்டுமே எடுத்துக்காட்டுகின்றன. அவைகளைப் படித்தான பிறகு மனிதன் அவைகள் காட்டுகிற வழியைத் தெரிந்தான பிறகு சாஸ்திரங்களாலும் கிரந்தங்களாலும் ஆவதுதான் என்ன? சாதனத்தில் ஈடுபடுவதற்கான தருணம் அதைத் தொடர்ந்து வருகிறது.

"பட்டணத்திற்குச் சென்றிருந்த மனிதன் ஒருவனுக்குச் சொந்த வீட்டினின்று கடிதம் ஒன்று வந்தது. இன்னின்னபொருள்களை இன்னாருக்கு வெகுமதியாக அனுப்பி வைத்தல் வேண்டும் என்னும் விஷயம் அக்கடிதத்தில் கண்டிருந்தது. சாமான்களை வாங்குவதற்குக் கடைக்குப் போவதற்கு முன்பு அக்கடிதத்தை மீண்டும் ஒருமுறை பார்க்க அவன் எத்தனித்தான். ஆனால் அக்கடிதமோ அவன் கைக்கு அகப்படவில்லை. ஆவலோடு அக்கடிதத்தை அவன் தேடினான். வேறு சிலரும் அம்முயற்சியில் அவனோடு கலந்துகொண்டனர். நெடுநேரம் தேடிப்பார்த்தார்கள். கடிதமும் அகப்பட்டது. அதை அடையப்பெற்ற அம்மனிதன் அகமகிழ்வு மிக அடைந்தான். ஆவலோடு அக்கடிதத்தைத் திறந்து அவன் படித்தான். ஐந்து சேர் மிட்டாய் வகைகளும் வேஷ்டி ஒன்றும்மேற்கொண்டு இன்னின்ன வஸ்துக்களும் வாங்கியனுப்பவேண்டும் என்று அதில் குறிக்கப்பட்டிருந்தது. அதைப் படித்துப் பார்த்த பிறகு அக்கடிதம் அவனுக்குத் தேவைப்படவில்லை. ஏனென்றால் அதன் வாயிலாக அவன் அறிந்துகொள்ளவேண்டியதை அறிந்தாயிற்று. அக்கடிதத்தை ஒரு பக்கம் வைத்துவிட்டு அதில் சொல்லியுள்ள பொருள்களை வாங்குதற்கு அவன் கடைக்குச் சென்றான். அதுபோன்ற கடிதத்திற்கு அவசியம் எவ்வளவு காலத்துக்கு? அதில் குறித்துள்ள விஷயங்களை அறிந்துகொள்ளாதிருக்கும் வரை அக்கடிதத்திற்குத் தேவை ஏற்படுகின்றது. குறித்துள்ள விஷயங்களை அறிந்தான பிறகு அவைகளைச் செயல்படுத்தப் போகிறான்."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

**7-1. உடம்புஅறியும் என்னும்அந்த ஊழல்எல்லாம்
தீரத்
திடப்பெறவே எம்மைத் தெரிசிப்பது எந்நாளோ.**

சமயங்களுக்கு அடிப்படையில் உள்ள கோட்பாடுகளைப் பற்றிய கருத்துக்கள் எண்ணிக்கையில் அடங்காதவைகளாம். சிருஷ்டி என்பதற்குப் பொருள் வேற்றுமை என்பதாம். பிரளயம் என்பதற்குப் பொருள் வேற்றுமைகள் யாவும் அடங்கி ஒடுங்கியுள்ள தோன்றாத நிலையாம். தோற்றத்துக்கு வரும்பொழுது ஒவ்வொரு பொருளும் உயிரும் அதனதன் பாங்கை வெளிப்படுத்துகின்றன. ஆனால் அயர்ந்து உறங்குகின்ற பொழுது அவ்வுயிரினங்களுக்கிடையிலுள்ளவேற்றுமைகள் யாவும் மறைந்துபட்டுப் போகின்றன. அபேதமாய் உள்ள அறிவுநிலை ஒன்றே அவை யாவுக்கும் பொதுவாக எஞ்சியிருக்கிறது.

தோற்றத்துக்கு வந்திருக்கிறபொழுது, அதாவது ஜாக்ரதாவஸ்தையில் ஜீவர்கள் தம் தம் வியக்தியை அடையப் பெறுகின்றன. அதைத் தொடர்ந்து கருத்துக்களும் எண்ணிக்கையில் அடங்காதவைகளாக வேறுபடவும் மாறுபடவும் செய்கின்றன. எத்தனை மனிதர்களோ அத்தனை கருத்துக்கள் என்னும் கோட்பாடு முற்றிலும் பொருத்தமானதேயாம்.

மானுட அமைப்பில் ஜீவாத்மனும், அந்த ஜீவாத்மன் எடுத்துள்ள உடலும் ஆகிய இரண்டு கூறுகள் இருக்கின்றன. அறியும் பாங்குடையது ஜீவாத்மன். அந்த ஜீவாத்மன் வாழ்ந்து வருகிற வாழ்க்கைக்குக் கருவியாக இருப்பது உடல். இந்த உடல் பஞ்சபூதங்களால் ஆனது. இதற்கு அறியும் தன்மை இல்லை. வண்டியை வண்டிக்காரன் ஓட்டுகிறான். அவன் ஓட்டுகிறபடி வண்டி நகர்ந்து போகிறது. நகர்ந்து போகிறேன் என்கிற உணர்ச்சி அவ்வண்டிக்கு இல்லை. அதை ஓட்டுபவனுக்கு அந்த உணர்ச்சி உண்டு. வண்டிக்காரன் நிலையிலிருப்பது உடலில் வாழ்ந்து வரும் ஜீவாத்மன். வண்டியின் நிலையிலிருப்பது அவன் பேணிவரும் உடல். க்ஷேத்ரம், க்ஷேத்ரக்ஞன் என்னும் இரண்டு பதங்களைக் கொண்டு உடலையும் உடலில் வாழ்ந்து வரும் ஆத்மனையும் சான்றோர்கள் விளக்கியுள்ளார்கள். க்ஷேத்ரமாயிருப்பது உடல். க்ஷேத்ரக்ஞனாயிருப்பது அதனுள் வசித்து வரும் ஜீவாத்மன். அயர்ந்து உறங்குகின்றபொழுது ஜீவாத்மாவாகிய க்ஷேத்ரக்ஞன் தான் பயன்படுத்தி வரும் உடல் என்னும் க்ஷேத்திரத்தினின்று விலகியிருக்கின்றான். அப்பொழுது அயர்ந்த உறக்கத்தில் உடல் பிணம்போன்று உணர்ச்சியற்றுக் கிடக்கிறது. உணரும் தன்மை உடலுக்கு இல்லை என்பதற்கு அயர்ந்த உறக்கமே பிரமாணமாகிறது. இப்பிரமாணம் உயிர்களனைத்திற்கும் பொதுவானதேயாம். பறவைகள், விலங்குகள், மக்கள் ஆகிய உயிர்கள் அனைத்தும் ஜீவாத்மாக்கள் ஆகின்றன. க்ஷேத்ரக்ஞன் என்னும் பதம் இத்தனை உயிர்களுக்கும் பொதுவானது. அயர்ந்து உறங்குகின்ற பொழுது அந்தந்த க்ஷேத்ரக்ஞனுடைய க்ஷேத்ரம் அல்லது உடல் உணர்ச்சியற்றுக் கிடக்கிறது. அத்தகைய உடலுக்கு உணரும்தன்மை உண்டு என்று வாதிப்பது யுக்திக்கும் அனுபவத்துக்கும் ஒவ்வாது.

எனவே, நான் வாழ்ந்திருக்கிறேன் என்னும் உணர்வு படைத்துள்ள ஜீவாத்மன் வேறு, தன்னுடைய வாழ்க்கைக்கு அவன் பயன்படுத்தி வருகின்ற உடல் வேறு. உடல் ஜடப்பொருள்; உணரும் தன்மை அதனிடத்தில் இல்லை. ஆத்மாவோ யாண்டும் உணரும் பாங்குடையது. சைதன்யம் என்றும் சேதனம் என்றும் பிரக்ஞை என்றும் அறியும் பாங்குடைய ஜீவாத்மனைப் பற்றிப் பகருகிறோம். ஜடம் என்றும் அசேதனம் என்றும் உணர்வற்ற பூதம் என்றும் உடலைப்பற்றி இயம்புகிறோம்.

இதுவே இக்கண்ணியில் அடங்கியிருக்கும் கருத்தாம். சேதன, அசேதன விவேகம் ஆத்ம சாதனத்துக்கு இன்றியமையாததாம்.

**7-2. செம்மைஅறி வால்அறிந்து தேகாதிக் குள்
[இசைந்த
எம்மைப் புலப்படவே யாம்அறிவது எந்நாளோ.**

பிரபஞ்சம் முழுதுமே தத்துவத்துக்கு விளக்கமாக அமைந்திருக்கிறது. சேதனம்,

அசேதனம்—அறிவு படைத்துள்ள உயிர் வகை, அறிவற்ற ஜடப்பொருள் ஆகிய இரண்டையும் இயற்கையில் காண்கிறோம். இனி, துருவி ஆராய்ந்து பார்க்கப் பார்க்கச் சேதனம் அசேதனம் ஆகிய இரண்டுக்குமிடையில் எல்லை கட்ட முடியாத நெருக்கடி நேர்கிறது. அசேதனமே, சேதனமாகப் பரிணமிக்கிறது. சேதனத்தை உயிர்வகைகள் என்கிறோம். சிற்றுயிர் பேருயிராகப் பரிணமிப்பது யாண்டும் இயற்கையின் திட்டமாம். பரிணமித்து வரும் உயிர்வகைகளுள் உச்சநிலை அடைந்திருப்பவன் மனிதன். இனி, மனிதனுடைய அமைப்பை ஆராய்ந்து பார்த்தால் உயிர்வகைகளுள் எத்தனை எத்தனை வேறுபாடுகள் இருக்கின்றனவோ அத்தனை அத்தனை வேறுபாடுகளை மானுட உலகில் காணலாம். கல் போன்று கல்லுக்கு நிகரான மனிதன், ஸ்தாவரம் போன்று ஸ்தாவரத்திற்கு நிகரான மனிதன், ஜங்கமங்களுள் பல படித்தரங்களில் உள்ள பலவிதமான உயிர்வகைகளுக்கு நிகரான மனிதர்களை உலகில் காணலாம். அங்ஙனம் அமைந்துள்ள மனிதன் பிறகு நிறை மனிதனுகிறான். ஒழுக்கம், சீலம், ஆற்றல், அறிவு ஆகிய பண்புகளில் உச்சநிலை எட்டியிருப்பவன் நிறை மனிதன் ஆகிறான். இந்த நிறைமனிதனுக்கு ஞானக்கண் பெறுவது சாத்தியமாகிறது. ஊனக்கண் கொண்டு மனிதன் உலகை உள்ளபடி பொருள்படுத்துகிறான். அதற்கு மேல் ஞானக்கண் கொண்டு அவன் பரவஸ்துவைக் காண வல்லவனுகிறான். எங்ஙனம் சேதனம் அசேதனம் ஆகிய இரண்டுக்குமிடையில் எல்லை போட முடியாதோ, பாகுபடுத்தமுடியாதோ அங்ஙனம் இகம் பரம் ஆகிய இரண்டுக்குமிடையில் வேற்றுமை காண்பது அரிதிலும் அரிதாம். இரண்டு ஊனக்கண்களைக்கொண்டு காண்பது இகம் அல்லது பிரபஞ்சம். ஞானக்கண் கொண்டு காணுமிடத்து இந்த இகம், தானே பரம்பொருளாய் ஞானிக்கு விளங்குகிறது. இடைநிலையில் அந்தக்கரண சுத்தியடைந்து வரவர இகத்தின் பாங்கே புனிதம் வாய்ந்ததாக மேலோங்குகிறது. சுருங்கச் சொல்லின் காண்போனுகிய மனிதன் அடைந்து வருகிற மனபரிபாகத்துக்கு ஏற்பக் காணப்படுபொருளாகிய பிரபஞ்சத்தின் காட்சியும் மேலோங்குகிறது. சுருங்கச் சொல்லின் த்ருக் அல்லது காண்போனுகிய அகத்தில் அடைகின்ற பண்பாட்டிற்கு ஏற்பப் புறப்பொருளின் காட்சி அவனுக்குத் திருந்தியமைகிறது. மனிதன் சித்தமலம் நீங்கப் பெறுவானுகில் அகம், புறம் என்று பாகுபடுத்தப்படாதபடி சிவத்தையே அல்லது பரம்பொருளையே அவன் யாண்டும் காண்கிறான்.

பரத்தை (Supreme) நோக்கி மானுடன் யாத்திரை போய்க்கொண்டிருக்கிறான். மானுட நிலையை நோக்கிச் சிற்றுயிர்கள் யாத்திரை வந்துகொண்டிருக்கின்றன. அங்ஙனம் யாத்திரை பண்ணுகின்ற சிற்றுயிர்கள் அனைத்துக்கும் உடலமைப்பே நிஜசொருபமாகிறது. ஆகையால் தேகாத்ம புத்தியில் அவை யாவும் தடித்திருக்கின்றன. பண்பட்ட மானுடநிலைக்கு வந்தான பிறகு மனிதன் அடைகிற துன்பங்கள் அனைத்துக்கும் முகாமையாயிருப்பது தேகாத்மபுத்தி அல்லது உடலைத் தான் என்று உணருவதுதான் என அறிய வருகிறான். அப்பொழுது உடல் பற்று தானுக அகலுகிறது. அதற்கு மேல் பாரமார்த்திகப் பெருவாழ்வில் அவன் ஈடுபடுகின்றபொழுது இந்த உடல் இழுக்கு அன்று; இறைவனுக்கேற்ற ஆலயம் என்னும் மேலாம் கருத்து அவன் உள்ளத்தில் உதயமாகிறது.

போகத்துக்குரிய கருவியாக உடலைக் கருதுகின்றபொழுது அதன்மூலம் மனிதன் இன்பத்தையும் துன்பத்தையும் மாறிமாறிப் பெறுகிறான். இதே உடலை மேலான நிலையாகிய யோகத்திற்கேற்ற கருவியாகக் கருதுகின்றபொழுது இந்த ஊனுடல் இறைவனுக்கேற்ற ஆலயமாகக் காட்சி தருகிறது. அதன் பிறகு ஆத்மசாதனம் மிக எளிதாக ஆகிவிடுகிறது.

உடம்பினை முன்னம் இழுக்கென்றி ருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்(று)
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே

என்கிறார் திருமூலர். எனவே உடம்புளே உள்ள உறுபொருளை உள்ளபடி காணும் வண்ணம் போகத்திற்கென்று உடலைப் பயன்படுத்தாது யோகத்துக்கான தூய வாழ்வை மேற்கொள்ளவேண்டும். இகோட்பாடுகள் யாவும் இக்கண்ணியில் வந்தமைகின்றன.

வேதாந்தம் அனைவரையும் உயர்த்துகிறது

(சுவாமி விவேகானந்தர்)

பண்பாட்டில் உயர்வதற்கு வருணபேதங்கள் ஆரம்ப நிலையாக இருக்கின்றன. ஒருவன் கல்வியிலும் பண்பாட்டிலும் உயர்கின்ற அளவு வருணத்தில் மேலோன் ஆகின்றான். ஐரோப்பாவில் வலிவுபடைத்தவன் வாழ்கின்றான்; பலஹீனன் மரணமடைகின்றான். பாரத தேசத்தில் பலஹீனனைப் பாதுகாக்கச் சட்டம் அமைந்திருக்கிறது. சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு சமூகப்பணி அமைந்திருக்கலாம். ஒருவருக்கு ஆட்சிபுரியும் பணி அமைந்திருக்கலாம்; மற்றொருவருக்குச் செருப்புத் தைக்கும் பணி அமைந்திருக்கலாம். தொழிலை முன்விட்டு ஒருவர் பெரியவராகிவிட முடியாது. செருப்புத் தைக்கும் பணியை ஆட்சிபுரிபவர் செய்ய முடியுமா? ஒருவர் வேதம் படிப்பதில் வல்லுனராக இருக்கலாம். அதை வைத்துக் கொண்டு மற்றவரை நசுக்க அவர் முயலக் கூடாது. யார் குற்றம் பண்ணினாலும் அவர் தண்டிக்கத் தகுந்தவரே. ஒருவர் லஞ்சம் வாங்குகின்ற முறையில் மக்களுடைய செல்வத்தைப் பறிக்கிறார்; அவர் புகழுக்குரியவராகின்றார். மற்றொருவர் பிறருடைய செல்வத்தைத் திருடுகிறார்; அவர் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறார். இந்த நிலை இருக்கக்கூடாது. இருவருக்கும் ஒரே மாதிரியான தண்டனை இருக்கவேண்டும். மீன்பிடிப்பவனுக்கு வேதாந்தம் புகட்டினால் அவன் தத்துவ ஞானி போன்று சிறந்த மனிதனாக விளங்குவான். தத்துவஞானியினிடத்து எந்தத் தெய்வம் இருக்கின்றாரோ அதே தெய்வம் தன்னிடத்திலும் இருப்பதை அறிவான். இங்ஙனம் அனைவரையும் உயர்த்தும் கொள்கைதான் நமக்குத் தேவை. யாருக்கும் தனி உரிமை இருக்கக்கூடாது. ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் தெய்விகம் இருக்கிறது என்பதை உணரச் செய்ய வேண்டும்.

பண்டைக்காலத்தில் கிருஷ்ணன், புத்தன் என்ற இரு மேதைகள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இருவரும் ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் பால் வேற்றுமை பாராட்டாமல் அனைவருக்கும் ஆத்மஞானக் கதவைத் திறந்து வைத்தார்கள்.

இந்தியாவில் காலத்துக்கேற்றவாறு ஜாதி முறை வளைந்து தரக்கூடியதாக இருந்திருக்கிறது. சில சமயங்களில் பண்பாட்டில் மேல் நிலைக்குப் போகமுடியாதபடி ஜாதிமுறை கீழானவர்களை வைத்திருந்தது. செல்வம் காட்டிய வழியிலோ, கத்திமுனை காட்டிய வழியிலோ இந்தியா செல்லாமல் ஆத்ம ஞானத்தால் தூய்மை செய்யப்பட்ட அறிவு காட்டிய வழியில் கட்டுத்திட்டத்துக்கு அடங்கி நடக்கும் ஆன்மீக வழியில் இந்தியா சென்று வந்தது.

இந்தியாவைத் தவிர மற்ற நாடுகளில் ஆயுதங்கொண்டு போர்புரியும் க்ஷத்திரியர்களுக்குத்தான் மரியாதை இருந்தது. ஆனால் இந்தியாவில் கடவுள் நெறி செல்லும் தியாகமூர்த்திகளுக்கே பெரிய மதிப்பிருந்தது.

எல்லா நாடுகளிலும் ஜாதிவேற்றுமை இருக்கிறது. இந்தியாவில் ஜாதிவேற்றுமை என்னும் கீழ்நிலையில் துவங்கி ஜாதியைக் கடந்த மேல்நிலையை அடைகின்றோம். ஒவ்வொருவனையும் பிராமணன் ஆக்கவேண்டுமென்பது தான் இந்தியாவின் திட்டம். பிராமணன் தான் மானுட வாழ்வுக்கு இலட்சிய புருஷனாவான். கீழ்நிலையிலுள்ளவர்களை யெல்லாம் மேல் நிலைக்கு உயர்த்தவே இந்தியா பாடுபட்டு வந்திருக்கிறது என்பதை இந்திய வரலாற்றைப் படித்தால் தெரியும்.

ஜாதி என்பது ஒரு சமுதாயப் பழக்கமாகும். ஜாதியை உடைத்துத் தள்ளவே அருளாளர்கள் முயன்றிருக்கிறார்கள். பௌத்த மதமும் அதற்குப் பின் தோன்றிய மதங்களும் ஜாதி வேற்றுமையை எதிர்த்தே பிரசாரம் செய்திருக்கின்றன. ஆனால் அம்முயற்சி ஜாதிவேற்றுமையை உறுதிப்படுத்துகின்ற முறையில் முடிந்தது. இந்தியாவின் அரசியல் ஸ்தாபனங்களிலிருந்து ஜாதிவேற்றுமை வளர்ச்சியடைந்தது. மக்களுடைய முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கும் ஜாதிப் பிரிவினையை ஒழித்துவிட்டு அனைவரும் முன்னேறுவதற்கு வேண்டிய சம உரிமையையும் வாய்ப்பையும் அளிக்கவேண்டும் என்கிறது வேதாந்தம்.

யோக வாழ்வு

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1974ஆம் ஆண்டில் திருவேடகத்தில கல்லூரி ஆசிரியர்களுக்கான கோடைப் பயிற்சி முகாமில் நிகழ்த்திய சொற்பொழிவு)

ஆறு தரிசனங்கள் இருக்கின்றன. யோகம் என்பது அவைகளுள் ஒன்று. உண்மையைத் தரிசிப்பதற்குத் தரிசனம் என்று பெயர். தரிசனம் என்பதற்கு ஆங்கிலத்தில் Philosophy என்கிறோம். பத்து அவதாரங்கள் சொல்லப்படுகின்றன. பத்து அவதாரங்களும் உயிர்களின் பரிணமத்தை விளக்குகின்றன. பத்து அவதாரங்கள் போன்று ஆறு தரிசனங்களும் ஒரு போக்கில் மனிதனுடைய பரிணமத்தை விளக்குகின்றவைகளாக அமைந்திருக்கின்றன. சரியான பாங்கில் தன்னைப் பண்படுத்த முயல்கின்ற ஆத்ம சாதகன் ஆறு தரிசனங்களின் உட்கருத்தைச் சாதனையில் மேற்கொள்ள வேண்டும். அங்ஙனம் செய்கின்ற சாதகன் நிறைநிலை அடைகின்றான்.

நியாயம், வைசேஷிகம், பூர்வமீமாம்சம், சாங்க்யம், யோகம், வேதாந்தம் என்பன ஆறும் ஆறு தரிசனங்களாகும். இவ் ஆறு தரிசனங்களைப்பற்றிய ஆச்சரியம் என்ன என்றால் அவற்றுள் ஐந்து தரிசனங்களில் கடவுளைப்பற்றிய பேச்சே இல்லை. புத்தரும் கடவுளைப்பற்றிப் பேசவில்லை. அப்படிக் கடவுளைப் பற்றிப் பேசாதது குறையன்று. கடவுளாராய்ச்சி பண்ணுவது அவ்வளவு சுலபமான செயலன்று. கிரகங்களின் சஞ்சாரத்தைப்பற்றிக் கணிதமேதையிடத்துப்பேசலாம். ஆனால் ஒரு பள்ளிக்கூடத்துச் சிறுவனிடம் அதைப்பற்றிப் பேசினால் அவனுக்கு ஒன்றும் விளங்காது கடவுளைப்பற்றிய பேச்சு ஆறாவது தரிசனததில்தான் வருகிறது. மற்ற ஐந்து தரிசனங்களில் கடவுள் உண்டு என்றோ இல்லை என்றோ சொல்லப்படவில்லை.

வைசேஷிக தரிசனம் நன்றாகச் சிந்தித்துப் பழகுவதற்குத் தூண்டுதல் தருகிறது. மனிதன் சிந்தனா சக்தி படைததவன். மற்ற உயிர்களுககுச் சிந்தனா சக்தி இல்லை. இதுதான் மனிதனுக்கும் மற்ற உயிர்களுக்கும் உள்ள வித்தியாசம். இப்பொழுதுள்ள கல்வித் திட்டத்தில் சிந்தனா சக்திக்கு இடம் இல்லை. எதைச் சிந்திப்பது, எப்படிச் சிந்திப்பது, எதைச் சிந்திக்கலாகாது என்று சிந்தனா சக்தியை ஒழுங்குபடுத்துவது மனிதனுடைய முன்னேற்றத்துக்கு முதல் படியாகிறது. அங்ஙனம் சிந்தனை செய்வதற்குத் தூண்டுகின்ற கல்வித் திட்டமே சிறந்த கல்வித்திட்டமாகும். சிந்தனா சக்திக்கு இடம் தராது அதை ஒதுககி வைப்பது மனிதன் வளர்ச்சி அடைவதற்குத் துணை புரிவதாகாது. சிந்தனா சக்தியின் மற்றொரு பகுதியாக உணர்ச்சி இடம் பெறுகிறது. உணர்ச்சியை வளர்ப்பதற்குச் சிறுவர்களுக்கு இசையை வழங்கவேண்டும். சிந்தனாசக்தியை வளர்ப்பதற்கும், சிந்தனையைத் தூண்டுவதற்கும் ஏற்ற சூழ்நிலையை உண்டாக்கவேண்டும். சிந்தித்துப் பழகுகின்ற அளவுதான் சிந்தனா சக்தி வளர்கிறது. பசு புல்லை மேய்ந்த பிறகு ஓர் இடத்தில் இருந்துகொண்டு அசைபோடுகிறது. சிந்தித்துப் பழகுவது பசு அசைபோடுவதற்கு நிகர். சிரவணம், மனனம், நிதித்யாசனம் என்பன முறையே கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்று பொருள்படுகின்றன. இவற்றுள்சிந்தித்தல் என்னும பகுதி முக்கியமானது. சிந்தித்தால் அல்லது எண்ணிப் பார்த்தால் தான் தெளிவு கிடைக்கும். சிந்தனையை நன்றாக வளர்த்து வருவதற்குத் தூண்டுதல் தருவது வைசேஷிக தர்சனமாகும்.

எண்ணிப்பார்த்து ஒழுங்காகக் கிரகித்ததை முறையாக மற்றவர்களுக்குப் புகட்டுவதை நியாயம் என்று சொல்கிறோம். சிந்தித்ததை மற்றவர்களுக்கு வழங்கிப் பழகவேண்டும். வழங்குவதன் மூலமாகத்தான் அதில் திறமை ஏற்படுகிறது. ஆசிரியர் புகட்டுவது மாணாக்கனுக்கு விளங்கவில்லை என்றால் அது ஆசிரியருடைய குற்றமேயன்றி மாணாக்கனுடைய குற்றமாகாது. ஆசிரியர் முதலில மாணக்கன் எந்தத்தரத்தில் இருக்கிறான் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். மாணாக்கனுடைய நிலைக்கு இறங்கிவந்து ஆசிரியர் புகட்டவேண்டும். ஆசிரியர்களுள் பேராசிரியராக இருப்பவர் சிவபெருமான் ஆகிறார். அவர் திரிலோக குடும்பியாக இருக்கிறார். அவர் அப்படித்

தன்னைக் குடும்பியாக வைத்துக்கொண்டு தம்முடைய அமைப்பை உலக மக்களுக்கு விளக்கிக் காட்டுகிறார். அதைவிட இன்னும் ஒரு படி மேலே உயர்ந்தது அர்த்தநாரீசுவரத் தத்துவமாகும். அதனினும் ஒருபடி மேலே உயர்ந்து நடராஜ மூர்த்தியாக விளங்குகிறார். அதனினும் மேலாகச் சதாசிவமாக இருக்கின்றார். அவருடைய உச்சநிலை தக்ஷிணாமூர்த்தி சொருபமாகும். அதுதான் முடிந்த நிலை. சிவனார் போன்று நல்லாசிரியர் மாணாக்கனுடைய நிலைக்கு இறங்கிவந்து புகட்டுகின்றார். அப்படிப் புகட்டத் தெரியாதவர்கள் நல்லாசிரியர்கள் அல்லர். ரவீந்திரநாத் தாகூர் முதியோர்களுக்குப் புகட்டுவதற்கு எத்தகைய தயாரிப்பும் இல்லாமல் புகட்டத் தொடங்கி விடுவார். ஆனால் குழந்தைகளுக்குப் பாடம் நடத்தவேண்டியிருந்தால் முன்கூட்டியே நன்கு தயார்செய்துகொண்டுதான் வருவார். குழந்தைகளுக்குப் பாடம் புகட்டுவது சுலபமானதன்று. நாம் அறிந்துகொண்டதை மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படி எடுத்துச் சொல்வதுதான் நியாயம் ஆகும். மற்றவர்களுக்கு விளங்கும் படி எடுத்துச் சொல்லாவிட்டால் அது அநியாயம் ஆகும். கேட்பவர்களுக்குத் தெளிவு ஏற்படும் முறையில் சொல்லுவது நியாயம் எனப்படும்.

மூன்றாவது தரிசனமாகப் பூர்வமீமாம்சம் அமைகின்றது. இவ்வுலகத்தில் நமக்கு வேண்டியதையெல்லாம் நம் முயற்சியின் மூலம் பெறுகின்றோம். பூர்வமீமாம்சம் கர்மகாண்டத்தைப் பற்றிச் சொல்கிறது. பண்பட்ட மனிதன் ஆசையில்லாது கர்மம் புரிகின்றான். அது கர்மயோகம் எனப்படும். அவன் கர்மத்தின் மூலம் மேல்நிலைக்குப் போகின்றான். தம் இச்சைகளைப் பூர்த்தி செய்வதற்கான முறையில் கர்மத்தைச் சரியாகக் கையாண்டுவந்தால் அது பூர்வமீமாம்சம் எனப்படும். மீமாம்சகர்கள் கர்மத்துக்குமேல் கடவுள் இல்லை என்று பகர்கிறார்கள். கர்மத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது பூர்வமீமாம்சம் எனப்படுகிறது.

நான்காவது தரிசனமாகச் சாங்கியம் அமைகின்றது. அது பிரபஞ்சத்தின் அமைப்பை விளக்குகின்றது. பிரபஞ்சத்துக்கு நாம் புறம்பானவர்களல்லர். அலை சமுத்திரத்தின் ஓர் அங்கமாக இருப்பது போன்று நாம் பிரபஞ்சத்தின் ஓர் அங்கமாக இருக்கின்றோம். அலை சமுத்திரத்தை விட்டுப் பிரிந்தால் அதன் தனித்தன்மை போய்விடும். அங்ஙனம் ஜீவன் பரத்தைவிட்டுப் பிரிய முடியாது. புருஷன் பிரகிருதி தத்துவத்தைச் சாங்கிய தரிசனம் தெளிவாக விளக்குகின்றது. ஒருவன் குருடன்; அவனால் நடக்கமுடியும். மற்றொருவன் முடவன்; அவனால் பார்க்கமுடியும். குருடன் முடவனைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டான். முடவன் வழிகாட்டக் குருடன் நடந்தான். குருடனுக்கு நிகர் பிரகிருதி. முடவனுக்கு நிகர் புருஷன். புருஷன் அறிவுப் பொருள். பிரகிருதி செயல் மயமாக இருக்கிறது. அறியும் திறமை பிரகிருதிக்கு இல்லை. இரண்டும் ஒன்று சேர்கிறபொழுது காரியம் நடைபெறுகிறது. நம்மிடத்தில் காண்பவனாக இருப்பது ஆத்ம தத்துவம். செயல்புரிவதாக இருப்பது பிரகிருதி தத்துவம். திருக் திருச்யம் ஆகிய இரண்டினுடைய கூட்டுறவால் நம் வாழ்க்கை நடந்து வருகிறது.

யோகம் ஐந்தாவது தரிசனமாகும். நம்முடைய முயற்சியால் நம்மைப் பூர்ண நிலைக்கு எடுத்துச் செல்ல முடியும். நாம் அடையவேண்டிய பூர்ண நிலையை நமக்கு யாரும் வழங்க வேண்டியதில்லை. நம்மைத் திருத்தியமைப்பது நம் கைவசம் இருக்கின்றது. நாம் பரிபூர்ண நிலையை எட்டும் பரியந்தம் நம்மைத் திருத்தியமைத்துக்கொண்டே இருக்க வேண்டும். நமக்கு நாமே சுற்றம். நமக்கு நாமே விதி வகையுமாக இருக்கின்றோம். நம்மை எடுப்பதும் கெடுப்பதும் நம் கைவசத்தில் இருக்கின்றன. இன்ன பாங்கில் வாழ்ந்தால் நாம் மேன்மையடைய முடியும் என்று புகட்டுவது யோக தரிசனம். இப்பொழுது நாம் இருக்கும் நிலை இது வரையில் நாம் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாகும். இனி நாம் என்ன நிலையை அடைய விரும்புகின்றோமோ அதற்கேற்ற முயற்சி எடுத்துக்கொண்டால் அந்நிலையை அடையலாம் என்று யோகநூல் பகர்கின்றது. பதஞ்சலி முனிவர் யோக சூத்ரத்தின் கர்த்தாவாக இருக்கின்றார். சூத்திரம் என்றால் குறள் என்று பொருள். குறுகிய சொல்லில் பரந்த கருத்து விளக்கப்படுவதா

கும். மனிதன் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி சொரூபமாக இருக்கின்றான். சிந்தனை சக்தியை உறுதிப்படுத்துவது யோக சூத்திரம். உணர்ச்சியைப் பேரன்பு மயமாகச் செய்வது பக்தி சூத்திரம். தத்துவத்தை உள்ளபடி அறிந்துகொள்ள உதவுவது பிரம்ம சூத்திரம் அல்லது வேதாந்த சூத்திரம் இங்ஙனம் பழந்த கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லுவதற்கு மூன்று சூத்திரங்கள் இருக்கின்றன. இவற்றுள் யோக சூத்திரம் ஈண்டு ஆராயப்படுகிறது.

யோக சாஸ்திரத்துக்கு ராஜயோகம், அஷ்டாங்க யோகம் என்ற இரண்டு பெயர்கள் இருக்கின்றன. மக்கள் யாவரும் யோகத்தை அனுஷ்டிக்கலாம். எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அதை அனுஷ்டிக்கலாம்; ஒரு மதத்தையும் சாராதவனாக இருந்தாலும் அதை அனுஷ்டிக்கலாம். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் ராஜயோகத்தைப் பின்பற்றலாம். வைதிக மதம், ஜைன மதம், புத்த மதம் ஆகிய எல்லா மதங்களுக்கும் அது பொதுவானது. இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் அதைப் பின்பற்றலாம். நம்மை எடுத்து விழுங்குவதற்கு இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் இந்தியாவுக்குள் வந்தார்கள். இனி நாம் அவர்களை எடுத்து விழுங்கியாகவேண்டும். இதற்கு அவர்களுக்கு யோகத்தை வழங்கியாகவேண்டும். மனிதனைச் சிறந்த மனிதனாக்குவதே யோகத்தின் குறிக்கோளாகும்.

ஆறாவது தரிசனம் வேதாந்தமாகும். அது எந்தச் சமயத்தையும் அழிப்பதில்லை. எல்லாச் சமயத்துக்கும் ஞானத்தைத் தந்து நல்ல சமயமாக்குகிறது. கிறிஸ்தவமதம் யோக, வேதாந்த தத்துவங்களை எடுத்துக்கொண்டால் சிறந்த கிறிஸ்துவ மதமாக ஆகும். இஸ்லாமிய மதம் யோக, வேதாந்த தத்துவங்களை எடுத்துக் கொண்டால் அது சிறந்த இஸ்லாமிய மதமாகிவிடும். நல்ல எருவும் தண்ணீரும் கொடுத்தால் எந்தச் செடியும் நன்றாக வளரும். யோகமும் வேதாந்தமும் நல்ல எருவுக்கும் தண்ணீருக்கும் நிகராகும். மானுடராகப் பிறந்தவர் அனைவரும் வேதாந்தத்துக்கு அதிகாரிகளாவார்கள். வேதாந்தத்தைக் கையாளாதவன் தௌர்ப்பாக்கியவான் ஆகின்றான். வேதாந்தத்தைக் கையாளுகின்றவன் சௌபாக்கியம் படைத்தவன் ஆகின்றான். தன்னை உயர்நிலைக்குக் கொண்டுவருகின்ற மனிதன் யோக அனுஷ்டானத்தில் ஈடுபடக் கடமைப்பட்டிருக்கின்றான். 'அர்ஜுனா நீ யோகி ஆவாயாக!' என்று கிருஷ்ண பரமாத்மா கீதையில் அடிக்கடி கூறுவார். சாதாரண மனிதனாகிய நீ பெருமகனாவாயாக என்பது அதன் பொருள்.

யோகத்தின் குறிக்கோளை எடுத்துக்கொள்ளலாம். योग: चित्तवृत्तिनिरोध: என்பது பதஞ்சலியின் முதல் சூத்திரமாகும். மனிதனுடைய சித்தவிருத்திகளை அடக்குவதே யோகம். இது அச்சூத்திரத்தின் பொருள். சங்கல்ப விகல்ப மயமாக மனது இருக்கிறது. சங்கல்பம் என்பது நம் இச்சையால் உண்டுபண்ணிக்கொள்கின்ற விருத்தியாகும். உள்ளத்திலிருந்து நாம் முயலாது தானாகவே தோன்றி வருகிற விருத்திக்கு விகல்பம் எனப் பெயர். இப்படி எழுகின்ற இரு விருத்திகளையும் எழாமல் செய்துவிடுவதே யோகமாகும். ஈண்டு கைலாயகிரியையும் அதற்கு நாற்பது மைல் தெற்கே உள்ள மானஸஸரோவரத்தையும் எடுத்துக் கொள்வோம். கைலாயகிரி பனிமூடிய பெரிய சிவஸ்தலம். மானஸ ஸரோவரம் ஐம்பத்தாறுமைல் சுற்றளவுள்ள ஒரு பெரிய தடாகம். மானஸஸரோவரம் மனோதத்துவத்துக்கு விளக்கமாக அமைந்திருக்கிறது. மானஸஸரோவரத்தை விளக்கினால் யோகத்துக்கு விளக்கமாக அமைகிறது. மானஸ ஸரோவரத்தில் காலை 9 மணிவரை காற்று அடிப்பதில்லை. தெளிந்த உருகிய பனிநீர் நிறைந்த தடாகம் அப்பொழுது வரைந்த படம் போன்று அசைவற்று இருக்கின்றது. அதனடியில் வெண்மையான மணல் இருக்கின்றது. நீர் அசைவற்று இருக்கும்பொழுது 75 அடிக்கும் கீழே உள்ள மணல் தெளிவாகத் தெரிகிறது. அப்பொழுது அதனுள் ஒரு கல்லைப்போட்டால் அது தரையைப் போய் எட்டும்பரியந்தம் தெரியும். காலை 9 மணிக்குமேல் காற்று வீச ஆரம்பித்துவிடும். அப்பொழுது அதன் கீழ்ப்பகுதி கண்ணுக்குத் தென்படாது. நீர் அசைவற்று இருக்கும்பொழுது கைலாயம் மானஸஸரோவரத்தில் தலைகீழாகத் தெளிவாய்த் தெரியும். கைலாயம் 22000 அடி உயரத்தில் இருக்கிறது.

14000 அடி உயரத்தில் இருந்து பார்த்தால் மானஸஸரோவரத்தில் கைலாயம் பிரதிபிம்பிப்பதைப் பார்க்கலாம். அது ஓர் அற்புதமான காட்சியாக இருக்கும். காற்றடிக்க ஆரம்பித்து விட்டால், மானஸஸரோவரத்தில் கைலாயத்தின் பிம்பத்தைப் பார்க்கமுடியாது. காற்றடிக்கும்பொழுது தடாகத்தில் அலை வீசும். அலை வீசுவது சித்தவிருத்திக்கு நிகர். மானஸஸரோவரத்துக்குப் பக்கத்தில் மற்றொரு தடாகம் இருக்கிறது. அதற்கு ரக்ஷஸ்தல் என்பது பெயர். பெயருக்கு ஏற்ப அது ராக்ஷசர் அல்லது அரக்கர்களுடைய மனதுக்குச் சான்றுகிறது. மானஸஸரோவரம் முனிவர்கள் அல்லது தேவர்கள் அல்லது யோகிகள் மனதுக்குச் சான்றுகிறது. மானஸஸரோவரம் இனிமையே வடிவெடுத்தது. இயற்கையில் அமைந்துள்ள அதைத் தத்துவவிளக்கத்துக்குப் பயன்படுத்தலாம். நம் மனதில் ஆசை என்கின்ற காற்று வீசிக்கொண்டே இருந்தால் சங்கல்ப விகல்ப மயமான விருத்திகள் வந்துகொண்டே இருக்கும். ஆசையை ஒழிக்கின்ற அளவு விருத்திகள் ஓய்கின்றன. விருத்திகள் முற்றும் ஓய்ந்துபோய் அலையற்ற தடாகம் போன்று மனம் தேக்கமடையும்பொழுது அது தியானத்துக்குத் தகுதியுடையதாகிறது. தடாகத்தில் அலையும் இருக்கக்கூடாது; அழுக்கும் இருக்கக்கூடாது. கடல் நீர் அழுக்குப்படிந்ததாக இருப்பதால் நீருக்குள் இருப்பது ஒன்றும் தெரிவதில்லை. மானஸஸரோவரத்திலுள்ள நீர் தூயதாக இருப்பதால் எழுபத்தைந்து அடிக்குக் கீழும் அது தென்படுகிறது. மானஸஸரோவரத்துக்கு நிகராக அந்தக்கரணத்தைச் சுத்தி செய்தால் ஆத்ம சொரூபத்தைக் காணலாம். அழுக்கும், அலையும் உடைய கடல் போன்று அந்தக்கரணத்தை அழுக்குப் படிந்ததாக வைத்திருப்போமானால் அதில் ஆத்ம சொரூபத்தைக் காணமுடியாது. சித்தமலமும், சித்தவிருத்தியும் நீக்கப்பட்ட மனமே சுத்த மனமாகிறது. சித்தத்திலுள்ள ஆசாபாசங்களும் காமக்குரோதாதிகளும் மலம் என்று சொல்லப்படுகின்றன. மனதில் எழும் எண்ணங்கள் விருத்திகளாகின்றன. அந்தக்கரணம் சுத்தி அடைந்து விருத்திகளில்லாமல் தேங்கி இருக்கும்பொழுதுதான் தியானம் கைகூடும். அந்தக்கரண சுத்திக்கு யம நியமங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. யமநியமங்களை முறையாக அனுஷ்டிப்பதன் மூலம் அந்தக்கரணத்திலுள்ள அழுக்குகளைப் போக்கலாம். நீரிலுள்ள அழுக்கைப் போக்குவதற்குப் பல முறைகள் இருக்கின்றன. அங்ஙனம் மனதிலுள்ள அழுக்கைப் போக்குவதற்கு நான்கு யோகங்களும் துணைபுரிகின்றன. ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காது ஒருவன் யோகி ஆக முடியாது. ஒழுக்கமுடையவன் யோகியாக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. மனிதன் மனதைச் சுத்தப்படுத்துவதன் மூலம் யோக வாழ்வை ஆரம்பிக்கின்றான். யோகத்துக்கு யமநியமங்கள் அடிப்படையாக இருக்கின்றன. அவை அஸ்திவாரம் போன்று அமைந்திருக்கின்றன. யமநியமம் என்ற அஸ்திவாரத்தின்மீது யோக வாழ்வு என்னும் கட்டடத்தை எழுப்பவேண்டும்.

ராஜயோகத்துக்கு அஷ்டாங்க யோகம் என்று மற்றொரு பெயர் உண்டு. அஷ்டம் என்றால் எட்டு எண்ணிக்கை உடையது என்று பொருள். அங்கம் என்றால் பிரிவு எனப் பொருள். அஷ்டாங்கயோகம் என்றால் எட்டுப் பிரிவுகளைக் கொண்ட யோகம் என்பது பொருள். யமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டுப் பிரிவுகளை உடையது அஷ்டாங்கயோகம். யமத்தில் ஐந்து பிரிவுகள் இருக்கின்றன. அவை அஹிம்சை, சத்யம், அஸ்தேயம், பிரம்மசரியம், அபரிகிரஹம் என்னும் பெயர் பெறுகின்றன. கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பொறிவழி செல்லாமை, பொருள் மிகப் படையாமை என்று அவற்றைத் தமிழில் பகரலாம். இவ்வைந்தில் உறுதிபெற்று வருகின்றவன் புற ஒழுக்கத்தில் உறுதி பெற்று வருபவனாகின்றான். ஒழுக்கமில்லாதவன் தத்துவத்தைச் சரியாக அறிந்துகொள்ள முடியாது. யோக வாழ்வில் பிரவேசிப்பவனுக்கு ஒழுக்கம் அஸ்திவாரம் ஆகிறது. வாழ்க்கையில் பெருநிலை அடைந்தவர்களெல்லாரும் ஒழுக்க வாழ்வில் நிலைபெற்றவர்களாக இருந்தார்கள். மஹாத்மா காந்தி அஹிம்சையையும் சத்தியத்தையும் கடைப்பிடித்ததால் அவர் மஹாத்மா ஆனார். அவரு

டைய வாழ்வு யோக வாழ்வுக்கு விளக்கமாக உள்ளது. யோகியாவது வாழ்வின் குறிக்கோள். போகி ஒருவன் யோகியாக முடியாது. யோகிக்குப் போகத்தில் நாட்டம் இருக்காது. மனிதன் வாழ்க்கையில் யோகியாக முயல வேண்டும். மானுட வாழ்வின் குறிக்கோள் போக வாழ்வைத் துறந்து யோக வாழ்வைப் பின்பற்றுவது ஆகும். கிருஷ்ணபரமாத்மா அர்ஜுனனுக்கு "நீ யோகி ஆவாயாக" என்று அடிக்கடி பகர்ந்துள்ளார். யோகி ஆவதற்கு ஒருவனுக்கு உதவுவதே உதவியில் பேருதவியாகும். உடலுக்குத் தேவையானதைக் கொடுத்து உடலை உறுதிப்படுத்தவும், உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளவும் உதவுவது அன்னதானத்தில் அடங்குகிறது. உலகியல் அறிவைத்தந்து உலக வாழ்வைத் திறமையாக நடத்த உதவுவது அறிவுஞானம் ஆகிறது. யோக வாழ்வில் நிலைத்திருப்பதற்கு உதவுவது அருள்தானம் ஆகிறது. மக்களுக்கு இம் மூவித உதவிகளையும் செய்து மக்கள் வாழ்வை உயர்த்துவதற்குப் பாடுபடுவதுதான் நர சேவையாகும். இன்றைக்கு நரசேவை நாட்டுக்குத் தேவைப்படுகிறது. நரர்களை நாராயண சொரூபங்களாகக் கருதி மேற்கூறிய மூன்று உதவிகளையும் நரர்களுக்குச் செய்து வரவேண்டுமென்று சுவாமி விவேகானந்தர் வற்புறுத்தியுள்ளார். சுவாமி விவேகானந்தருக்கு இளமையில் நரேந்திரன் என்பது பெயர். பெயருக்கு ஏற்ப அவர் நரர்களுக்குத் தலைவனாகவே விளங்கினர். நரசேவை புறக்கணிக்கப்பட்டு வருவதால் மக்களுக்கிடையில் சுயநலம் புகுந்துள்ளது. நரசேவை மக்களுக்கிடையில் உயர்ந்த இணக்கத்தை ஏற்படுத்துகிறது. மக்களைத் தெய்வமாகப் பாவித்து மக்கள் தொண்டனாக இருந்து மக்கள் சேவையை மகேசுவர சேவையாகச் செய்து வந்தால் நாம் சிறந்த யோகி ஆகலாம்.

யமப்பகுதியில் அஹிம்சை அல்லது கொல்லாமையை எடுத்துக்கொள்வோம் எந்த உயிர்க்கும் துன்பம் செய்யாதிருப்பது அஹிம்சை எனப்படும். அண்ட அமைப்பில் நாம் வேறு; மற்ற உயிர்கள் வேறு அல்ல. அண்ட அமைப்பில் ஒவ்வோர் உயிரும் ஓர் அங்கமாக இருக்கிறது. ஆகவே ஓர் உயிர்க்குச் செய்கிற துன்பம் மற்ற உயிர்க்கும் உரியதாகிறது. மற்ற உயிர்களுக்குத் தீங்கு விளைவித்து நாம் இன்புற்று வாழ முடியாது. நமக்குத் துயரம் வருகிறதென்றால் பிறர்க்கு நாம் துன்பம் செய்திருக்கிறோம் என்பது பொருள். பிறர்க்குச் செய்த துன்பம் திரும்பி நமக்கே வருகின்றது. நாம் ஒரு கேடு செய்யாதிருக்கும் போதும் நமக்குக் கேடு வருகிறதென்றால் அது முன்பு செய்த வினையின் விளைவாகும். எல்லா உயிர்களையும் நம மயமாகக் கருதிப் பழகவேண்டும். நமக்கு நாமே தீங்கு செய்வதில்லை. நமக்குநாம் தீங்கு செய்ய விரும்புவதில்லை அதேபோன்று பிற உயிர்களுக்கும் தீங்கு செய்யாத மனப்பான்மையைப் பெறவேண்டும். அந்த மன பரிபாகம் வந்துவிட்டால் நம்மை நாம் யோக வாழ்வுக்குத் தயார்படுத்துபவராகின்றோம்.

அஹிம்சையைச் சாதனையில் கடைப்பிடிப்பது எப்படி? முதலில் நம் எண்ணத்தை நல்லெண்ணமாக மாற்றவேண்டும். தியானத்தில் அமரும் பொழுது "பிரபஞ்சத்திலுள்ள உயிர்களெல்லாம் இன்புற்றிருக்கவேண்டும்" என்று எண்ணவேண்டும். लोकाः समस्ता सुखिनो भवन्तु—லோகா:ஸமஸ்தா ஸுகினோ பவந்து—என்பதன் கருத்தை ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். அதை உணர்ந்து சொல்ல வேண்டும். உள்ளூர உணர்ந்து சொல்லும் பொழுது உயிர்களுக்கு வருகிற நலமும் ஆனந்தமும் நமக்குரியன ஆகின்றன. பிறருக்கு நாம் எதை வழங்குகின்றோமோ அது பன்மடங்காக நமக்குத் திரும்பி வருகிறது. அது உடனுக்குடனேயோ காலம் பொறுத்தோ திரும்பி வரலாம். பிறர் கெட்டொழியட்டும் என்று எண்ணினால் நாமே கெட்டுப் போவோம். நல்வாழ்வு வாழ்கின்றவர்களுக்கு எதிர்மறை எண்ணங்கள் எதுவும் இருக்கக் கூடாது. பஸ்மாசுரன் என்னும் ஓர் அரக்கன் இருந்தான். அவன் கைலாயகிரிக்குப் பக்கத்தில் அமர்ந்து சிவனாரை நோக்கித் தவம் புரிந்தான். அவன் தவத்தை மெச்சிச் சிவனார் காட்சி கொடுத்தார். சிவனாரிடம் "நான் யார் தலையில் கை வைக்கின்றேனோ அவர் சாம்பலாகப் போக வேண்டும்" என்று சிவனாரிடம் வரம் கேட்டான். சிவனாரும் அவ் வரத்தை அவனுக்குக் கொடுத்தார். சிவனார் தலையிலேயே கை வைத்து அவ்வரத்தைச்

சோதிக்க எண்ணினன். அவனுடைய கை தலையில் பட்டுச் சிவன் அழிந்துபோனால் சிவன் அழியாப்பொருள் என்பது பொய்யாகிவிடும். அவன் கைபட்டுச் சிவன் அழியாமலிருந்தால் அவர்கொடுத்தவரம் பொய்யாகிவிடும். எனவே அவனிடமிருந்து தப்புவதற்குச் சிவனர் ஓட்டம் பிடித்தார். அவன் சிவனைத் துரத்தினன். இந்த நிலையில் சிவனரைக் காப்பாற்றுவது தம்முடைய பொறுப்பு என்பதை விஷ்ணு உணர்ந்தார். விஷ்ணு மோகினி வடிவம் எடுத்துப் பஸ்மாசுரனை மயக்குகிற பாங்கில் அவன் முன் நின்ளுர். பஸ்மாசுரன் சிவனைத் துரத்துவதை விட்டுவிட்டுத் தன்னை மணந்து கொள்ளுமாறு மோகினி வடிவத்தில் இருந்த விஷ்ணுவைக் கேட்டுக்கொண்டான். "நீ ஸ்நானம் பண்ணிக்கொண்டு வந்தால் உன்னை நான் மணந்துகொள்கிறேன்" என்ளுர்விஷ்ணு. அவனிடம் அப்படிக் கூறிவிட்டு எங்கும் நீர் இல்லாது செய்துவிட்டார். அவன் எங்குத் தேடியும் நீர் அகப்படாததால் விஷ்ணுவிடம் திரும்பி வந்தான். விஷ்ணு ஒரு குழியைக் காட்டி அக்குழியிலுள்ள நீரைக் கையால் எடுத்து உடல் முழுவதும் தேய்த்துக்கொள்வாயானல் நீ குளித்ததற்கு நிகராகும்" என்ளுர். அவன் உடனே அக்குழி இருக்கும் இடத்திற்குச் சென்று அக்குழியிலுள்ள நீரைக் கையால் எடுத்துத் தன் தலையில் வைத்தான். தலைமீது கை பட்டதும் அவன் சாம்பலாகிவிட்டான். பிறருக்குக் கேடு நினைப்பவன் தானே கெட்டொழிவான் என்பதற்குப் பஸ்மாசுரன் சிறந்த எடுத்துக்காட்டு ஆகின்ளுன். ஆகையால் தியானத்தில் அமருவதற்கு முன்பு எல்லா உயிர்களும் இன்புற்றிருக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தை நம்மைச் சுற்றிலும் எங்கும் பரப்பவேண்டும். அந்த எண்ணத்தை எவ்வளவுக் கெவ்வளவு பரப்புகின்ளுமோ அவ்வளவுக் கவ்வளவு நமக்குச் சாந்தியும் ஆனந்தமும் உண்டாகின்றன.

அஹிம்சையில் நிலைபெற்றிருப்பவன் முன்னிலையில் ஓர் உயிர் மற்ளுேர் உயிரை வெறுக்காதும், தீங்கு செய்யாதும் வீற்றிருக்கின்றன. சிவனர் முன்னிலையில் காளையும், சிங்கமும் சாந்தமாக இருக்கின்றன. சிவனர் கழுத்தில் பாம்பு இருக்கிறது. அதன் சத்ருவாகிய கருடன் அப்பக்கம் வந்தபொழுது, "கருடா! சௌக்கியமா" என்று பாம்பு கேட்டது. "இருக்கிற இடத்தில் இருந்தால் எல்லாம் சௌக்கியமாகத்தான் இருக்கும்" என்றது கருடன். எலியைக் கண்டால் பாம்பு விடாது. சிவனர் கழுத்தில் பாம்பும், கணேசன் வாகனமாகிய எலியும் பக்கம் பக்கமாக இருந்தபொழுதிலும் அமைதியாக இருக்கின்றன. கார்த்திகேயன் வாகனமாகிய மயிலும் பாம்புக்குத் தீங்கு செய்யாது அதற்குப் பக்கத்தில் இருக்கிறது. யோகீசுவரன் முன்னிலையில் சத்ருக்களாக இருக்கும் உயிர்களெல்லாம் பகைமையை மறந்துவிட்டு இருக்கின்றன. நாம் அஹிம்சையில் நிலைபெறுகிற அளவு சண்டை சச்சரவு குறைகிறது. நல்லிணக்கம் அதிகரிக்கிறது. அஹிம்சையில் நிலைபெற்றிருந்த மஹாத்மா காந்தி எங்கும் சாந்தபாவனையைப் பரப்பி வந்தார். அக்காலத்தில் இந்தியாவில் வைஸ்ராயாக இருந்த வில்லிங்டன் பிரபு, "நான் காந்தியின் அன்பில் அகப்பட்டுக்கொண்டு விட்டேன்" என்று பகர்ந்துள்ளார். அஹிம்சையை ஆயுதமாகக் கொண்டு மஹாத்மா காந்தி இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்தார். அஹிம்சை முறையில் ஆங்கில ஆட்சியை இந்தியாவிலிருந்து அகற்றினர்.

மன்னுயிர்களினுடைய வளர்ச்சியில் மகிழ்ச்சி அடைகின்றவன் பூரண அஹிம்சையைக் கையாளுகின்ளுன். பிற உயிர்கள் முன்னேற்றமடைவதைப் பார்த்துப் பொருமை கொள்பவன் அவ்வுயிர்களுக்குத் தீங்கிழைக்க முயல்கின்ளுன். பொருமை அல்லது அழுக்காறு ஹிம்சைக்குத் தூண்டுதலாக உள்ளது. மனதிலுள்ள பொருமையை ஒழிக்கவேண்டும். மன்னுயிர்களின் முன்னேற்றத்துக்கு முழு மனதுடன் பாடுபடவேண்டும். அத்தகைபவர்களிடத்து எல்லா உயிர்களும் அன்புடனும் பணிவுடனும் நடந்துகொள்கின்றன. உயிர்கள் நலத்தில் நாட்டம்கொண்டு உயிர்கள் அடையும் இன்பத்தில் தான் இன்பம் அடைந்து உயிர்களை அன்பு வழியில் நடாத்திச் செல்பவன் அஹிம்சா மூர்த்தியாகின்ளுன். ஒன்ருக நல்லது கொல்லாமை என்று வள்ளுவரும் அஹிம்சைக்கு முக்கியத்துவம் தந்து எழுதியுள்ளார்.

(தொடரும்)

சுவாமி விவேகானந்தரின் கடிதம்

(சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் வெற்றியடைந்த செய்தியை அறிந்த சென்னை இந்துக்கள் விவேகானந்தருக்கு அளித்த பாராட்டுரைக்கு அவர் எழுதிய பதில் கடிதம்)

[176ஆம் பக்கத் தொடர்ச்சி]

பண்டைக்கால நவீனகால இந்திய தத்துவங்கள் எல்லாம் ஒன்ருகக் குவியும் மையமாக இருப்பது எது என்ற கேள்வி எழுமானுல் வியாச சூத்திரம் என்பதுதான் அதற்குக் கூறும் பதிலாகவிருக்க முடியும். இந்துமதத்திலுள்ள எல்லாப் பிரிவுகளையும் தன்னுள் அடக்கிக்கொண்டு இந்து மதத்திற்கு முதுகெலும்பு போன்று அமைந்திருப்பது எது என்னும் கேள்வி எழுமானுல் வியாச சூத்திரம் என்றுதான் அதற்குப் பதில் சொல்லியாக வேண்டும்.

இமாலயம் போன்ற கானகத்தில் இதயத்தையே நிறுத்திவிடும் பேருணர்வைத் தட்டி எழுப்பும் புண்ணிய நதிகளின் ஓசையுடன் கலந்து 'அஸ்தி, பாதி, ப்ரிய' என்று அத்வைதிகள் முழங்கும் ஓசையை ஒருவர் கேட்கலாம். பக்திச் சோலையாகிய பிருந்தாவனத்திலிருந்து வரும் 'பியா, பீடம்' என்னும் அழகிய பக்தியூட்டும் ஓசையை ஒருவர் கேட்கலாம். வாரணசியில் உள்ள ஆச்ரமங்களில் நிகழும் அமைதியான தியானத்தில் ஒருவர் கலந்து கொள்ளலாம். நாதியா என்னும் தீர்க்கதரிசியின் சிஷ்யர்கள் பரவசநிலையில் ஆடும் நர்த்தனங்களில் ஒருவர் கலந்து கொள்ளலாம். வடகலை, தென்கலை முதலிய சம்பிரதாயங்களையுடைய விசிஷ்டாத்வைதக் கொள்கையின் ஆச்சாரியராகிய ராமானுஜரின் திருவடிகளில் ஒருவர் சரண்புகலாம். மத்வருடைய சம்பிரதாயத்தைச் சேர்ந்த ஆச்சாரியர்களின் உபதேசத்துக்கு ஒருவர் பக்தி சிரத்தையுடன் மதிப்புத் தரலாம். லௌகீக சீக்கியர்களின் "வாகுருகீ படேல்" என்னும் போர் ஒலியை ஒருவர் கேட்கலாம். கிரந்த சாகிப்பைக் குறித்து உதாசிகளும், நிர்மலர்களும் நிகழ்த்தும் சமய உபந்யாசங்களை ஒருவர் கேட்கலாம். கபீர்தாஸரின் துறவிச் சீடர்களைச் சத்சாகிப் என்று சொல்லி ஒருவர் வணங்கலாம். அவர்களுடைய சாகிகள் என்று சொல்லப்படும் பஜனைகளை ஒருவர் ஆனந்தத்துடன் கேட்கலாம். ராஜபுதனத்தின் சீர்திருத்தவாதியான தாது என்பவரின் அருமையான ஞானநூல்களை ஒருவர் ஆழ்ந்து கற்றுணரலாம். அவருடைய ராஜீய சீடரான சுந்தரதாசரின் நூல்களை ஒருவர் கற்றுணரலாம். அச்சான்றோர்களின் வழிவந்த பெரியோரான நிச்சலதாஸரால் அருளப்பட்டது விசாரசாகரம். முந்நூறு ஆண்டுகளாக இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளிலும் எழுதப்பட்ட நூல்கள் எல்லாவற்றையும்விடச் செல்வாக்கும் புகழும் உடையதாகிய இந்த விசாரசாகரத்தை ஒருவர் ஆழ்ந்து கற்றுணரலாம். வட இந்தியாவிலுள்ள மேதார் வகுப்பைச் சேர்ந்த பங்கியை அவருடைய குருலால்குருவின் உபதேசங்களை எடுத்து விளக்குமாறு ஒருவர் கேட்கலாம். மேற்கூறிய பல்வேறு சமய குரவர்களுக்கும், சம்பிரதாயங்களுக்கும் அடிப்படையாகத் திகழும் கோட்பாடு சுருதியைப் பிரமாணமாகக் கொண்டதாகும். கீதை அதனுடைய தெய்வீக வியாக்கியானமாகும். சாரீரக சூத்திரங்கள் அதனுடைய ஒரு திட்டமான அமைப்பு முறையாகும். பரமஹம்ச பரிவ்ராஜக ஆச்சாரியர்கள் முதல் லால்குருவினுடைய ஏழை மேத்தா சீடர்கள் ஈருக இந்தியாவிலுள்ள எல்லாச் சமயப்பிரிவுகளும் அந்த அடிப்படைக் கோட்பாட்டின் வெவ்வேறு தோற்றங்களாகும்.

உபநிஷதம், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை என்பன மூன்றும் பிரஸ்தானத்திரயம் என்று அழைக்கப்படுகின்றன. இவை மூன்றும் இந்து மதத்துக்குப் பிரமாணங்களாக அமைந்திருக்கின்றன. துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என்னும் வேறுபாடுகளுடனும் விளக்கங்களுடனும் அவை அமைந்திருக்கின்றன. வேதங்களில் சம்ஹிதைப் பகுதிகள் இருக்கின்றன. அவைகளுக்குத் தற்கால விளக்கம் புராணங்களாக அமைந்திருக்கின்றன. வேதங்களிலுள்ள கர்மகாண்டத்துக்குப் பிராமணங்கள் என்று பெயர். அவைகள் கிரியைகளுக்கு ஆதாரமாக இருக்கின்றன. தற்காலத்தில் தந்திரங்களாக அவை வடிவெடுத்திருக்கின்

றன. பிரஸ்தானத்திரயம் எல்லாச் சமயப் பிரிவுகளுக்கும் பொதுவானவை. புராணங்களும் தந்திரங்களும் அவைகளுக்கென்று தனித்தனி பிரிவினையைக்கொண்டிருக்கின்றன.

தற்காலத்தில் தந்திரங்கள் என்று சொல்லப்படுபவை வேதத்திலுள்ள கிரியைகளோடு கூடிய கர்மகாண்டப் பகுதியாகும். தந்திரங்களைப்பற்றிய தவருனமுடிவுக்கு ஒருவன் வருவதற்கு முன்பு பிராமணங்களிலுள்ள முக்கியமான பகுதியாகிய அதவார்யூ பகுதியைத் தந்திரங்களுடன் சேர்த்துப் படிக்கும்படி நான் புத்திமதி கூறுகின்றேன். தந்திரங்களில் பிரயோகித்திருக்கும் மந்திரங்கள் பிராமணங்களிலிருந்து எவ்வித மாறுபாடுகளும் இல்லாமல் எடுத்த வார்த்தைகளேயாகும். இமயமுதல் கன்னியாகுமரி வரையிலும் பழக்கத்திலுள்ள கிரியைகளின் எல்லா முறைகளும் தந்திரங்களிலிருந்து எடுக்கப்பட்டவையேயாகும். சாக்தர்கள், சைவர்கள், வைஷ்ணவர்கள், இன்னும் மற்றுள்ள சமயப் பிரிவினர்களுடைய பூஜை முறைக்குத் தந்திரங்களே வழி வகுத்திருக்கின்றன.

இந்துக்கள் அனைவரும் தங்களுடைய மதத்துக்கு ஆதாரமாய் உள்ள இவைகளைப் பற்றி முற்றும் அறிந்திருக்கிறார்களென்று நான் நினைக்கவில்லை. பலர் முக்கியமாகக் கீழ் வங்காளத்தில் உள்ளவர்கள் இப்பிரிவுகளின் பெயர்களையே கேட்டிருக்கமாட்டார்கள். ஆனால் அவர்கள் அறிந்தோ அறியாமலோ இந்த மூன்று பிரஸ்தானங்களில் வகுக்கப்பட்டிருக்கும் திட்டத்தையே செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்கெங்கு ஹிந்தி மொழி பேசப்படுகிறதோ அங்குள்ள மிகத் தாழ்ந்த வகுப்பினர் கூடக் கீழ் வங்காளத்திலுள்ள உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களை விட வேதாந்த மதத்தைப் பற்றி அதிகஞானம் பெற்றிருக்கிறார்கள். அதற்குரிய காரணமும் உண்டு. வங்காளத்தில் நியாய சாஸ்திரம் நன்கு திகழ்கிறது. மிதிலா பூமியிலிருந்து அது நவதவீபத்துக்குக் கொண்டுவரப்பட்டது. சிரோமணி, கதாதரர், ஜகதீசர் போன்ற பல மேதைகளினால் அது வளர்க்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டது. உலகிலுள்ள மற்ற எல்லாத் தரிசனங்களையும்விட மேலானதாக அது தர்க்க சாஸ்திர ஆராய்ச்சிக்குப் பயன்படுகிறது. அற்புதமான தெளிந்த மொழியில் அது விளக்கப்பட்டிருக்கிறது. அது இந்துஸ்தானமெங்கிலும் பெரிதும் மதிக்கப்பட்டுப் படிக்கப்பட்டு வருகிறது. ஆனால் வேதாந்த பாடம் வங்காளத்தில் வருந்தத்தக்க முறையில் அசட்டை செய்யப்பட்டது. சமீபகாலம் வரையில் பதஞ்சலி முனிவரின் மஹா பாஷ்யத்தைப் போதிப்பதற்கு ஒருவர் கூடக் கிடைக்கவில்லை. ஒரு சமயம் மஹாமேதாவியான ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் அங்குத் தோன்றினர். அவர் காலத்தில்தான் வங்காளத்திலிருந்த சமய சம்பந்தமான மந்தநிலை ஒரு குலுக்கு குலுக்கப்பட்டது. சிறிது காலத்துக்கு இந்தியாவிலுள்ள மற்ற பாகங்களில் சமய வாழ்க்கையுடன் வங்காளம் தொடர்பு கொள்வதாயிற்று. தசநாமிகளுள் ஒரு பிரிவாகிய பாரதி பரம்பரையைச் சேர்ந்த ஒருவரிடம் ஸ்ரீ சைதன்யர் சன்யாச தீக்ஷை பெற்று அவர் ஒரு பாரதியாய்த் திகழ்ந்தாரெனினும் மாதவேந்திர பூரி என்னும் பெரியார் மூலமாகவே ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரின் சமய உணர்வு முதன் முதலாக விழிப்படைந்தது என்பதை அறியும்பொழுது அது வியப்பைத் தருகிறது. வங்காளத்தில் ஆன்மீக உணர்வைத் தட்டி எழுப்புவதற்குப் புரி சன்னியாசிகளுக்கு ஒரு தெய்வீக சக்தி இருப்பதாகத் தோன்றுகிறது. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தோதாபுரி என்னும் பெரியாரிடமிருந்தே சன்யாச ஆச்ரமம் பெற்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

ஸ்ரீ சைதன்யர் எழுதிய வியாக்கியானம் காணமல் போயிருக்கவேண்டும் அல்லது இன்னும் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கவேண்டும். அவருடைய சிஷ்யர்கள் தெலனாட்டு மாத்வ சம்பிரதாயங்களுடன் சேர்ந்துகொண்டார்கள். நாளடைவில் ரூப, சனாதன, ஜீவகோஸ்வாமி ஆகிய பெரியோர்களுடைய ஸ்தானத்தை பாபாஜிகள் வகிக்கலாயினர். ஸ்ரீ சைதன்யருடைய பேரியக்கமானது வேகமாக மறைந்து கொண்டு வந்தது. ஆனால் சமீபத்தில் அதில் மறுமலர்ச்சி ஏற்படும் அறிகுறிகள் தென்படுகின்றன. ஸ்ரீ சைதன்யருடைய இயக்கம் முன்பு பெற்றிருந்த சிறப்பை மீண்டும் பெறும் என்று நாம் நம்புவோம். (தொடரும்)

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-166

937. विरागिणी விராகிணீ— வைராக்கியமே வடிவெடுத்தவள் என்பது இந்த நாமத்தின் பொருள். ராகம் என்னும் சொல் பற்றுதல் என்று பொருள்படுகிறது. விராகம் என்றால் பற்றற்றநிலை. தன்னிடத்தில் இல்லாத பொருள் ஒன்றை அடையப்பெற வேண்டும் என்று ஆசைகொள்ளுவது ராகம். புதியதாக அகப்பட்டபொருள் ஒன்றினிடத்துப் பற்றுதல் வைப்பது ராகம். அன்னை பராசக்தியோ பிரபஞ்சத்திலுள்ள அனைத்துமாயிலங்குகின்றாள். அவளுக்கு அன்னியமாகப் பொருள்ஏதுமில்லை. ஆதலால் தன்னிடத்து இல்லாத ஒன்றை அடையவேண்டும் என்னும் அவா அம்பிகைக்கு இல்லை. அவள் ஆதிக்கத்தில் இல்லாத வஸ்து ஏதுமில்லை. ஆதலால் புதியதாகப் பெறுதற்கு அன்னைக்கு ஏதும் இல்லை. புதியதாகப் பெற்றுள்ள பொருள் ஒன்றனிடத்து அலாதியான பற்றுதல் உண்டாவது இயல்பு. ஆனால் அன்னைக்கோ பிரபஞ்சத்திலுள்ள எப்பொருளுமே புறம்பானதுமன்று; புதியதாக வந்து அமைந்ததுமன்று. எனவே ராகம் பூணுதல் அல்லது பற்றுதல் வைத்தல் என்னும் செயலுக்கும் அம்பிகைக்கும் வெகுதூரம்.

ஒரு பொருளிடத்து அலாதி பற்றுதல் வைப்பதற்கேற்ப மானுடன் ஒருவன் தன் விவேகத்தை இழக்கிறான். 'வேண்டா விருப்பும் வெறுப்பும், இந்த வில்லங்கத்தாலே விளையும் ஜனனம்' என்னும் கோட்பாடு ஆத்மசாதகனுக்கு உரியதாம். விருப்பு, வெறுப்பற்ற மனநிலை நடுநிலை எனப்படுகிறது. மனது நடுநிலையிலிருக்கின்றபொழுதே பார்க்கின்ற பொருள் ஒன்றை உள்ளபடி பொருள்படுத்த அந்த மனதுக்கு இயலுகிறது. விருப்பு அல்லது வெறுப்பால் தூண்டப்பெற்று அதனிடத்துச் சலனம் உண்டாகிற பொழுது பொருளை உள்ளவாறு அறிந்து கொள்ளும் திறமை அதற்கு இல்லாது போகிறது. பற்றுதல் இல்லாத மனது தேங்கியுள்ள தடாகத்திற்கு நிகராகிறது. தடாகத்திலே நீர்ப்பரப்பு தேங்கி இருக்கிறபொழுது அக்கம் பக்கத்திலுள்ள பொருள்களின் பிம்பம் தெளிவுற அந்தத் தடாகத்தில் தென்படுகிறது. அதே பாங்கில் சலனமற்ற மனதில் பொருள்கள் திரிவுபடாது பிரதிபிம்பிக்கின்றன. இக்கோட்பாடு அன்னை பராசக்திக்கும் உரியதாம். அவள் விசுவ மனதை உடையவள். அகண்டாகாரமாயுள்ள அந்த மனதானது யாண்டும் தேங்கி அமைதியுற்றிருக்கிறது. ஆதலால் அவளுடைய சந்நிதானத்தில் அமைந்துள்ள யாவும் உள்ளபடி அவளுக்குப் புலனாய்க்கொண்டிருக்கின்றன.

எவ்வளவுக்கெவ்வளவு விராகம் அல்லது பற்றற்றநிலை ஆத்மசாதகனுக்கு வந்து வாய்க்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவன் ஞானத்தைப் பெறத் தகுதியுடையவன் ஆகிறான். எனவே இந்த நாமம் ஆத்ம சாதகனுக்கு முற்றிலும் இன்றியமையாததாம்.

938. प्रगल्भा ப்ரகல்பா—துணிச்சல் மிக வாய்க்கப்பெற்றவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

துணிச்சல் என்பது மனதில் அமைந்துள்ள தெய்விக சம்பத்தாம். மக்கள் எல்லாரும் மனதை உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அந்த மன அமைப்பில் அவர்களுக்கிடையில் தாரதம்மியம் உண்டு. தாரதம்மியத்திற்கேற்ப மக்களுக்கிடையில் உயர்வு தாழ்வு வந்து அமைகின்றன. மானுடன் ஒருவன் வெறுமனே மனதோடு கூடியவனாய் இருத்தல் போதாது. மனதினிடத்து அளப்பரிய ஆற்றல் புதைந்திருக்கிறது. அந்த ஆற்றலை வளர்ப்பது வாழ்க்கையின் குறிக்கோள்.

குழந்தை ஒன்று பெரியோர் செய்கிற செயலை எல்லாம் தானும் செய்து பழகுகிறது. பெரியவர்கள் ஒரு குடத்தில் ஜலம் எடுத்துச் சென்றால் அதைப் பார்க்கிற சிறுவன் குடத்தின் வடிவெடுத்திருக்கும் சிறிய விளையாட்டுப் பாண்டத்தின் வாயிலாக நீர் சுமந்து பழகுகிறான். இங்ஙனம் பழகப் பழக நீர் சுமக்கும் ஆற்றல் படிப்படியாக அவனிடத்து மேலோங்குகிறது. இயல்வது கரவேல் என்பது கோட்பாடு. தன்னால் செய்து சாதிக்கக்கூடிய ஒன்றைச் சாதிக்க முடியாது என்று அவன் மறுதலிப்பானாகில் ஏற்கனவே அவனிடத்து அமைந்துள்ள ஆற்றல் குன்றிப் போகிறது. அப்படி மறுதலிப்பதற்கு மாறாகச் செயலில்

ஊக்கமே வடிவெடுத்தவனாக மனிதன் அமைதல் வேண்டும். ஊக்கம் ஓங்க ஓங்க வல்லமை அவனிடத்து வளர்கிறது.ஊக்கமதுகைவிடேல் என்னும் கோட்பாடு அதற்காகவென்றே அமைந்திருக்கிறது.

இன்றைக்கு விளையாட்டுச் சாமானாக அமைந்துள்ள குடம் ஒன்றில் நீர் சுமக்கும் சிறுவன் வளர்ந்து வரவர நீர்க்குடத்தைப் பெரியதாக்க வேண்டும். அதற்கேற்றவாறு வல்லமையும் அவனிடத்து வளர்கிறது. பலம் அல்லது வல்லமை ஈசுவர சம்பத்தாகக் கருதப்படுகிறது. பலமசி பலமயி தேஹி என்பது பெரிய பிரார்த்தனையாம். அதை வாயால் சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. அக்கோட்பாட்டைச் செயல்படுத்த வேண்டும். வெறும் வாய் வார்த்தை பிரார்த்தனையாகாது. சொல்லுவதெல்லாம் செயலாகப் பரிணமிக்குமிடத்தே அது நல்ல பிரார்த்தனையாகிறது.

பலத்தைத் தொடர்ந்து தைரியம் உள்ளத்தில் உருவெடுக்கவேண்டும். எதிரியைத் தோற்கடிப்பதற்கு மனிதனுக்கு வாய்த்துள்ள உதவி யாது என்னும் கேள்வி எழுகிறது. தைரியம் அல்லது தளராத உள்ளம் ஒன்றே எதிரியைத் தோற்கடிக்க வல்லதாம். பலம் படைத்துள்ள ஒருவன் கோழை நெஞ்சம் படைத்தவனாக இருக்கலாம். அன்னவருக்குப் பலமிருந்தும் அது பயன்படாது போகிறது. தைரியம் படைத்திருப்பவனே தூக்கி வினை ஆற்றுகிறான். அவனுடைய துணிச்சலின் முன்னிலையில் எதிரியின் முயற்சி பயனற்றதாய்ப் போகிறது. தைரியம் ஒன்றே தெய்வீக சம்பத்தாம். தைரியத்தை வளர்ப்பது தலை சிறந்த அம்பிகையின் வழிபாடாம்.

939. परमोदारा பரமோதாரா — மேலான மகிழ்வை யூட்டுபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

இயற்கையின் கண் பார்க்குமிடமெல்லாம் அன்னை பராசக்தியின் இப்பேர் அருள் பொலிவு வெளியாகிறது. ஜீவர்கள் எடுத்துக் கொள்ளுகிற முயற்சிக்கு ஏற்பக் காரியம் அவர்களுக்கு அநுகூலமாகக் கைகூடுகிறது. அதனால் அன்னையின் அருளை முன்னிட்டு அவர்கள் இன்புறுகின்றனர். இந்த அருள் நோக்கமோ நெடிது நீடித்துக் கொண்டே போகிறது. அது இருக்கும் பரியந்தம் அதை அடையப்பெற்ற மாந்தரும் மிக மகிழ்வுற்று இருக்கின்றனர். மாந்தர்கள் மட்டும் அல்லர்; மற்ற உயிர்களும் பிரபஞ்சமெங்கும் இன்புற்று வாழ்ந்துவரும் காட்சியைக் காண்கிறோம். இதன் விளைவாகவே உயிர்கள் அனைத்தும் இவ்வையக வாழ்வில் பரம திருப்தி அடைந்திருக்கின்றன. இடையிடையே இடைஞ்சல்களும் இன்னல்களும் துன்பங்களும் உயிர்களுக்கிடையில் வந்து அமைகின்றன என்றாலும் அதிவிரைவில் அந்த இன்னாத சூழ்நிலை மறைந்துபட்டுப் போகிறது. ஆனந்தமும் திருப்தியும் இனிமையும் எங்கும் காட்சிகொடுத்து வருகின்றன. அன்னையின் ஆட்சிக்கு இது பொருத்தமானதே. ஆதலால் அவளைச் சார்ந்திருக்கும் காலமெல்லாம் உயிர் வகைகள் பரம உதாரர்களாக வாழ்ந்து வருவது திண்ணம்.

940. परामोदा பராமோதா—நறுமணத்துக்கும் கீர்த்திக்கும் இருப்பிடமாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அன்னை பராசக்தியின் மஹிமைகளனைத்தும் அவளுடைய விபூதிகளாகப் பிரபஞ்சமெங்கும் வியாபித்து இருக்கின்றன. புஷ்பத்திலே நான் நறுமணமாகவிருக்கிறேன் என்று கிருஷ்ண பரமாத்மா தம்முடைய விபூதியைப் பற்றிக் கீதையிலே விளக்குகின்றார். இக்கோட்பாடு அம்பிகைக்கும் பொருத்தமானதே. மணம் அல்லது நாற்றம் மண்ணின் தன்மாத்திரையாகும். பூமியை வெட்ட வெட்ட அதில் மணம் கமழுவதை நாம் நுகருகிறோம். துர்நாற்றம் எடுக்கக்கூடிய கெட்ட வஸ்துக்களைப் பூமியில் புதைத்து வைத்தாலும் காலக்கிரமத்தில் அது நறுமணமாகத் திகழ்கிறது. இது அம்பிகையின் மகிமையாம். நறுமணத்தை உயிர் வகைகளனைத்தும் அகமகிழ்வுடன் நுகர்கின்றன. அப்படி நுகர்வது ஒருவித வழிபாடாம். இதற்குச் சான்றாக ஆலயங்களில் குறிப்பிட்ட வேளைகளில் சாம்பிராணி தூபம் போடுகிறார்கள். அதை நுகருகிற பொழுதே அம்பிகையினிடத்துப் பக்தி ஓங்குகிறது. இந்தப் பாங்கில் உலகெங்கும் சுகந்தம் அல்லது நறுமணமாகத் திகழ்ந்திருந்து உயிர்களிடத்து அன்னை பராசக்தி பக்தியை வளர்த்து வருகிறாள்.

பகவதியிடம் அமைந்துள்ள ஆறு பகவத் சம்பத்துக்களுள் கீர்த்தி ஒன்று. பூமிமேல் புகழத்தக்க பொருளாகப் பரதேவதை வீற்றிருக்கின்ருள். அவளைப் புகழ்வதின் வாயிலாகப் பக்தர்கள் தாமே தங்களை அறியாது அம்பிகையின் மஹிமைக்குச் சொந்தக்காரர்கள் ஆகிருர்கள். பலப்பல வழிபாடுகளுள் அன்னையின் கீர்த்தியில் வயப்பட்டிருப்பது நல்ல வழிபாடாம்.

ஆனந்தம் பிரம்மம் என்பது உபநிஷத வாக்கியம். அகிலாண்டம் எங்குமுள்ள உயிர் வகைகள் அனைத்தும் ஆனந்தத்தில் திளைத்திருக்கின்றன. ஏனென்ருல் அவைகள் அனைத்துக்கும் மூலப்பொருளாயிருப்பது ஆனந்தம் அல்லது பிரம்மம். பிரம்மமும் சக்தியும் ஒன்றே. ஆதலால் அன்னை பராசக்தி தானே உலகெங்கும் பேரானந்தமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிருள். அவளிடத்திருந்து பொங்கித் ததும்பிக்கொண்டு வருகிற பேரானந்தம் அன்னையின் செல்வர்களும், செல்விகளுமாகிய உயிர்களின் உள்ளத்திலும் அது நிரம்பியிருக்கிறது. அந்தந்த உயிர் அதனதன் நிலையில் இன்புற்று இருப்பதே இக்கோட்பாட்டிற்குச் சான்ருகும்.

உலக வைபவத்தோடு இந்த ஆனந்தத்தை நாம் இணைத்து வைக்கின்றபொழுது அது நிரந்தரமாகவிருப்பதில்லை; தடைப்பட்டுக்கொண்டேவிருக்கிறது. தடைப்படுகிற இன்பம் சிற்றின்பம் எனப்படுகிறது. தடைப்படாத இன்பமோ பேரின்பம் என்னும் பெயர் பெற்றிருக்கிறது. பேரின்பத்தை நாடுவது உயிர்களனைத்தும் செய்துவருகிற செயலாம். பொருந்தாத உலகச் செயல்கள் குறுக்கிட்டு அப்பேரின்பத்தைச் சிற்றின்பமாகச் சிதறடையச் செய்கின்றன. ஆயினும் அதை முன்னிட்டு மனிதன் சளைத்துப் போவதில்லை. காலமெல்லாம் இன்பத்தைப் பேரின்பமாக்கும் பொருட்டு அவன் முயன்று கொண்டேவிருக்கிருன். அந்த முயற்சிக்கு வாழ்வு என்னும் பெயர் வந்துள்ளது. வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் மனிதன் பேரானந்தத்தைத் தேடியலைந்துகொண்டிருக்கிருன். அது யாண்டும் அவனுக்குச் சொந்தமாயிருப்பது ஒன்றே அதைப்பற்றிய உண்மையாம்.

எப்பொழுது அப்பா கரை ஏறுவாய் ?

செம்படவன் ஒருவன் ஒரு குளத்தினுள் இடுப்பளவு ஆழமான நீரில் நின்று கொண்டு வலை வீசி மீன் பிடித்துக்கொண்டிருந்தான். ஒவ்வொரு முறை அவன் வலை வீசியதும் அகன்று வட்டமாய் நீர்ப்பரப்பின்மீது வீழ்ந்து நீரினுள் அது மூழ்கியது. பிறகு நிதானமாக அந்த வலையைக் கொஞ்சம் கொஞ்சமாக இழுத்தான். கடைசிப் பகுதியில் மீன்கள் துள்ளிக்கொண்டு நீருக்கு மேலே வந்தன. அவைகளை ஒவ்வொன்ருக வலையிலின்று விடுவித்து அந்தச் செம்படவன் தன் தலையில் கட்டி வைத்திருந்த கூடைக்குள் போட்டுக் கொண்டிருந்தான்.

அவ்வழியே சென்று கொண்டிருந்த சான்ரோர் ஒருவர் சற்று நேரம் நின்றுகொண்டு அச்செம்படவன் செயலைக் கவனித்துப் பார்த்தார். கிருபா நோக்கத்துடன் 'நீ எப்பொழுது அப்பா கரை ஏறுவாய் ?' என்று கேட்டார். "சுவாமி கூடை நிரம்பியதும் நான் கரைக்கு வருவேன்" என்று பணிவுடன் மீன் பிடித்துக்கொண்டிருந்தவன் விடை விடுத்தான்.

'இங்ஙனம் பிரபஞ்ச வாழ்க்கையில் கொடிய செயலுக்கு ஆளாய்க்கொண்டிருக்கிற நீ பிறவிக் கடலைத் தாண்டி முக்தியாம் கரைக்கு எப்பொழுது வந்து சேருவாய்' என்னும் கருத்து அம்முனிவர் கேள்வியில் அடங்கியிருந்தது.

ஆனல் உலக வாழ்வில் உழன்று கொண்டிருந்த செம்படவனுக்கும் அச்சான்ரோர் கருணைக்கும் வெகுதூரம். தன்னுடைய வாழ்க்கை முறைக்கு ஒப்ப தன் தலையிலிருந்த கூடையிலே அவன் பிடித்த மீன் நிறைந்து போனவுடன் கரைக்கு வருவதாக அவன் உறுதிகூறினன்.

கேள்வியோ சாமானியமானது. அதைக் கேட்ட முனிவருடைய கருத்தோ பிறவிக் கடலைத் தாண்டுவதற்கு ஏற்றதாயிருந்தது. செம்படவன் விடுத்த விடையோ பிறவிப்பிணியைப் பெருக்குவதற்கு ஏற்றதாயிருந்தது.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (314) உள்ளம் பரிபாகம் அடைய உடலை வருத்தித்தான் ஆகவேண்டுமா? உடலை வருத்தாது அடைய முடியுமா?

உள்ளமும், உடலும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவைகள். உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சி உடலின் வாயிலாக விளங்குகிறது. இனி உடலில் உண்டாகும் நலமும் கேடும் உள்ளத்தையும் தொடுகிறது. சூட்சும நிலையிலிருப்பது உள்ளம். ஸ்தூல நிலையிலிருப்பது உடல். உடலுக்கு நோய் வந்தால் உள்ளத்தையும் அது தாக்குகிறது. உள்ளத்தில் சீற்றம், விசனம் போன்ற கேடுகள் அமைந்தால் உடலையும் அவை வாட்டுகின்றன. ஆக, இவ்விரண்டும் ஒன்றோடொன்று இணைந்திருப்பதால் உள்ளத்தைப் பக்குவப்படுத்துவதற்கு ஏற்ற நிலையில் உடலை வைத்திருக்க மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். உடலைத் தகுந்த நிலையில் வைப்பது வேறு. அதைச் சித்திரவதை பண்ணுவது வேறு. தவம்புரிதலில் அசுரத் தபசு என்பது ஒன்று. உடலை வாட்டிவதைப்பதெல்லாம் அசுரத்தபசின் கூறுகளாம். முள்ளின் மீதும், கூர்மையான இரும்பாணிகள் மீதும் படுத்துக்கிடப்பது, கடும்வெயிலில் நின்றுகொண்டிருப்பது, தாங்கவொண்ணாத் தணுப்பு நீரில் நின்றுகொண்டிருப்பது, நண்பகலில் சூரியனைப் பார்த்த வண்ணமாய் நிற்பது, உடலைப் பட்டினி போடுவது ஆகியவைகள் அசுரத் தபசில் அடங்கியிருக்கின்றன. அப்படிச் செய்வதால் மனபரிபாகம் வந்து அமையும் என்று உறுதிகூற முடியாது. உடலை வாட்டுவதும் ஒவ்வாது; சுகஜீவனத்தில் வைத்திருப்பதும் ஒவ்வாது. முள்ளின் மீது படுத்துக்கிடப்பது ஒருவிதக்கொடுமை என்றால் அதைச் சொகுசான மிருதுவான மெத்தையின் மீது சயனித்திருக்கச் செய்வது மற்றொருவிதக் கேடாம். ஆகவே உடலை வதைத்தலும் பொருந்தாது. அதன்மூலம் சொகுசான சுகபோக வாழ்வு வாழ்வதும் பொருந்தாது.

மானுட உடல் கிடைப்பதற்கரிதான கருவியாம். பொருந்தாத உணவு கொடுத்து அதைப் பாழ்படுத்தலாகாது. அறுசுவையோடுகூடிய மிகைபட்ட உணவு கொடுத்தும் அதைக் கெடுத்து விடலாகாது. உடலை வாட்டிவதைத்தல் ஒருவிதக் கேடு என்றால் அதை நோகாது, துன்பப்படுத்தாது, வேலை ஒன்றும் கொடுக்காது பாங்காக வைத்திருப்பது மற்றொருவிதக் கேடு ஆகும்.

சத்து நிறைந்த நல்ல உணவையே உடலுக்குத் தரவேண்டும். உடலைக்கொண்டு மனிதன் நன்றாக உழைத்துப்பாடுபடவேண்டும். சுகபோகத்துக்கு அடிமைப்படலாகாது. பிறர் நலனுக்கு என உடலைக்கொண்டு உழைத்தல் வேண்டும். மிகைபட உழைத்தலும் உழைக்காது சொகுசாக வாழ்ந்திருப்பதும் தகாது. மனதை ஊக்கத்திலும், ஒழுக்கத்திலும், குதூகலத்திலும் செலுத்துதற்கொப்ப உடலை யாண்டும் நல்ல நிலையில் வைத்திருத்தல் வேண்டும். இங்ஙனம் உள்ளத்தையும் உடலையும் முறையாகப் பயன்படுத்தத் தெரிந்துகொள்ளுகிறவனே வாழ்வாங்கு வாழுகிறான். வாழ்வில் அடையவேண்டிய நலன்களனைத்தையும் அன்னவனே அடையப்பெறுகிறான். திண்ணிய உடலும், இனிய நல்ல உள்ளமும் இறைவனால் கொடுக்கப்பட்டுள்ள பெரிய வாய்ப்புக்களாம். அவ்விரண்டையும் நல்வழியில் நடாத்திச் சீரையும் சிறப்பையும் பெற மனிதன் கடமைப்பட்டிருக்கிறான்.

கேள்வி: (315) துன்பமாக மாறியமையும் இந்திரிய சுகங்களில் மக்கள் ஏன் பற்று மிக வைத்திருக்கிறார்கள்?

பஞ்சேந்திரியங்கள் மூமலாக மனிதன் பெறுகிற ஒவ்வோர் இன்பத்துக்கும் துன்பம் என்னும் விலை கொடுக்க மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். இன்பத்திலே மனிதன் வைத்திருக்கும் பற்றுதல் மிக மிக ஆழ்ந்ததாம். ஆதலால் அவன் கொடுக்கிற துன்பம் என்னும் விலை அவன் உள்ளத்தில் பதிவதில்லை. சூதாட்டக்காரன் அந்த நோய்க்கு ஆளாயிருக்கிற பொழுது தன்னிடத்திலிருக்கும் சொத்து முழுதையும் பணயம் வைத்து இழக்கிறான். அதற்கு நிகராகச் சுகத்தில் வைத்திருக்கிற பற்றுதல் ஆழ்ந்திருப்பதால் அதை முன்னிட்டு வரும் துன்பத்தின் கொடுமை அவனுடைய உள்ளத்தைத் தொடுவதில்லை. மானம் போவதோ

அவனுக்கு விளங்காது. நல்லறிவை இழப்பதும் அவனுக்குப் புலனாகாது. இங்ஙனம் பெருங் கேட்டிற்கு ஆளான பிறகு விழிப்பு நிலை அவனுக்கு வருகிறது. தனக்குத்தானே செய்து கொண்ட பாதகம் அப்போது விளங்குகிறது. அத்தகைய சீரிய மனமாற்றம் வந்த பிறகே அவன் நல்வழிக்குத் திரும்புகிறான். மக்களில் பெரும்பான்மையோர் கேட்டில் அகப்பட்டுத்துன்பப்பட்ட பிறகே நல்வழிக்குத் திரும்புகிறார்கள். எப்படியும் நல்வழிக்கு வருவதே வாழ்க்கையின் குறிக்கோளாம்.

கேள்வி : (316) ***மஹாபாரதப் போரில் கண்ணபிரான் அர்ஜுனன் தேரைக் கீழே அமுத்தியது சரியா?***

கிருஷ்ணன் அர்ஜுனனுக்குத் தேரோட்டியாய் அமர்ந்தான். அதன் விளைவாக அர்ஜுனன் பெற்ற உதவி சாமானியமானதன்று. தேரிலிருந்து கொண்டு போர் புரிகிறவனுக்கு எல்லாவிதமான உதவிகளையும் பாதுகாப்பையும் தரத் தேரோட்டிக் கடமைப்பட்டிருக்கிறான். யாருக்காகச் சாரதி தேரோட்டுகிறானோ அவனை ஆபத்தினின்று காப்பாற்றுவது சாரதியின் முதல் கடமையாம்.

இக்காலத்திலே மலைப் பிரதேசங்களில் ஆபத்தான வழிகளில் முரட்டுத்தனமாக மோட்டார் கார் டிரைவர் ஒருவர் கார் ஓட்டுவாராகில் அந்த வாகனத்தில் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள விரும்புகிறவர்கள் ஏறலாகாது.

கிருஷ்ணன் பரமாத்மா. உயிர்களைத் தீமைகளினின்று காப்பாற்றுபவன். அர்ஜுனனும் கர்ணனும் ஒருவனை ஒருவன் போராடிக் கொல்ல தீர்மானித்திருந்தனர். அர்ஜுனனுக்கு வாய்த்த சாரதிக்கு நிகராகத் தனக்கு ஒரு தேரோட்டி வாய்க்கவில்லையே என்னும் மனக்குறைவு கர்ணனுக்கு இருந்தது. ஆயினும் அவன் படைத்திருந்த ஆயுதங்களோ அற்புதமானவைகள். அவைகளைச் சமாளிக்க யாருக்குமே முடியாது. அப்படியிருந்தும் அவைகளில் பெரும்பான்மை பயனற்றுப் போகும்படி கிருஷ்ணன் ஏற்கனவே ஏற்ற முறைகளைக் கையாண்டு விட்டான். அதுவே அவன் அர்ஜுனனுக்குச் செய்த பெரியபாதுகாப்பாம். தன்னைச் சரணடைந்தவர்களைக் காப்பாற்றி வைப்பது கண்ணன் கடமையாயிருந்தது. கர்ணன் கைவசத்தில் ஆபத்தான ஒரே அஸ்திரம்தான் பாக்கியிருந்தது. அந்த ஒன்றைக் கொண்டே அர்ஜுனனை எப்படியாவது மாய்த்துவிடமுடியும் என்ற உறுதி கர்ணனுக்கு இருந்தது. "அர்ஜுனா, இவ்வுலகினின்று விடைபெற்றுப் போ" என்று இயம்பிக்கொண்டு நாகாஸ்திரத்தை அவன் எய்தான். அது அர்ஜுனனுடைய கழுத்தைத் துண்டித்துவிடும். அதை அறிய வந்த கிருஷ்ணன் தேர்த்தட்டைக் கீழே அமுக்கினான். தேரும் கீழே புதைந்து போனதின் விளைவாக நாகாஸ்திரம் அர்ஜுனனுடைய கழுத்தை வெட்டுவதற்குப் பதிலாக அவனுடைய கிரீடத்தை உருட்டிக்கொண்டு போனது. தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையோடு முற்றுப்பெற்றது. இது கிருஷ்ணன் செய்த சூழ்ச்சி. அவன் அப்படிச் செய்யாதிருந்தால் அர்ஜுனன் போர்க்களத்தில் மடிந்து போயிருப்பான். ஆகையினால் அவன் தேரை அந்த நெருக்கடியில் கீழே அமுக்கியதே தலைசிறந்த யுத்த சூழ்ச்சியாம்.

சூதாட்டம்

சூதும் வாதும் வேதனை செய்யும். பிறர் பொருளை முறைதவறிக் கைப்பற்றுவது சூதாட்டம். அப்படிச் சம்பாதித்த செல்வம் நிலைத்திராது. சூதாட்டம் பொல்லாதது.

பழங்காலத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் பகடை என்ற சூதாட்டம் விளையாடி நாட்டைப் பாழ்படுத்தினார்கள். இக்காலத்தில் நம்மவர்கள் பரிசுச்சீட்டு என்ற சூதாட்டத்தையும் குதிரைப் பந்தயம் என்ற சூதாட்டத்தையும் செய்து வருகிறார்கள். இவைகளின் விளைவு கேடு. நல்லார் இத்தீங்குகளினின்று விலகியிருப்பார்களாக. பொதுநலனுக்காகவென்றும் இவைகளில் ஈடுபடலாகாது. இவைகளில் கருத்துச் செலுத்தாதிருக்குமளவு நலத்தை நாம் வளர்த்தவர்களாவோம்.

ஆத்ம போதம்

(திரு V. S. நரசிம்மன்)

पञ्चकोशादि योगेन तत्तन्मय इव स्थितः ।
शुध्दात्मानीलवस्त्रादि योगेन स्फटिको यथा ॥

यथा (யதா) எவ்வாறு नील वस्त्र आदि योगेन (நீல வஸ்த்ர ஆதி யோகேன) நீலம் முதலிய (நிறங்களுடைய) துணிகளின் சேர்க்கையால் स्फटिकः (ஸ்படிக:) ஸ்படிகமானது இருக்கின்றதோ, तथा (ததா) அவ்வாறே, शुध्दात्मा (சுத்தாத்மா) தூய்மையான ஆத்மா पञ्चकोश आदि योगेन (பஞ்சகோச ஆதி யோகேன) ஐந்து கோசங்களுடைய சேர்க்கையால் तत् तत् मय इव (தத் தத் மய இவ) அந்தந்தக் கோசத்தைப் போல स्थितः (ஸ்தித:) இருக்கின்றது.

குறிப்பிட்ட நிறமுடைய துணியை ஸ்படிகத்தின் முன் வைத்தால் ஸ்படிகம் அந்த நிறத்தோடு காணப்படும். தூய ஆத்மாவும் எந்தக் கோசத்துடன் சேர்ந்துள்ளதோ, அதைப் போலவே காணப்படுகின்றது.

சரீரத்ரயம் என்ற உபாதியைப் போல் 'பஞ்சகோசம்' ஓர் உபாதியாகும். அன்ன, ப்ராண, மன, விஞ்ஞான, ஆனந்தமயம் எனப் பஞ்சகோசம் விவரிக்கப்படும். குறிப்பிட்ட ஒரு கோசத்துடன் தொடர்பு (யோகம்) ஏற்படும்போது, ஆத்மா அந்தக் கோசமாகவே காணப்படுகின்றது. ஆத்மா உண்மையில் ஐந்திற்கும் அப்பாற்பட்டது. பளிங்கு நிறமற்றது; துணியின் நிறத்தைப் பளிங்கில் காண்பதே அஞ்ஞானம். சாதகன் இந்த உண்மையை அறிந்து, 'கோசம்' என்ற உபாதியைக் களைந்து சுத்த, தூய, பூரண ஆத்மாவின் ஸ்வரூபத்தில் திளைக்க வேண்டும். தன்னைத் தூயவனுக்குதலும், தூய்மையை நாடிச்செல்லுதலும் சொரூப நிலைக்குச் செல்லும் உபாயங்களாம். சாரதாமணிதேவியார் பிரார்த்தனை புரியும்போது "வெண்ணிலாவிலும் சிறிது களங்கம் உள்ளது; அந்தக் களங்கங்கூட இல்லாது எனது மனம் தூய்மையில் நிலைத்திருக்கட்டும்" என்று உரைத்தார். शुभ्र–சுப்ர என்ற சொல் தூய்மையைக் குறிக்கும். அதில் ஆனந்தம்பெற வேண்டும் எனக் குறிக்க शुभ्रानन्द (சுப்ரானந்த) என்ற பெயரைத் துறவிகள் ஏற்பது உண்டு.

பளிங்கெனத் தூய்மையாக இருத்தலே நமது நிலை.

वपुस्तुषादिभिः कोशैर्युक्तं युक्त्यावघाततः ।
आत्मानमन्तरं शुध्दं विविच्यात्तण्डुलं यथा ॥

यथा (யதா) எவ்வாறு वपुः तुष आदिभिः (வபு: துஷ ஆதிபி:) உமி, தவிடு ஆகியவற்றினின்றும் अवघाततः (அவகாதத:) குத்தி எடுத்து, तण्डुलं (தண்டுலம்) அரிசியை (பிரிக்கின்றோமோ அவ்வாறு) कोशैः युक्तं (கோசை: யுக்தம்) கோசங்களோடு சேர்ந்துள்ளதும், (ஆயினும்) अन्तरं (அந்தரம்) வேறுபட்டும், शुध्दं (சுத்தம்) தூய்மையாகவும் உள்ள आत्मानं (ஆத்மானம்) ஆத்மாவை युक्तिः (யுக்தி:) யுக்தியால் अवघाततः (அவகாதத:) விலக்கி எடுத்து विविच्यात् (விவிச்யாத்) பிரித்துணர வேண்டும்.

உமி, தவிடு ஆகியவற்றை நீக்கி அரிசியைக் குத்தி எடுக்கின்றோம். அங்ஙனம் ஐந்து கோசங்களுக்கு அப்பாற்பட்ட ஆத்மாவை யுக்தியின் மூலம் அவற்றினின்றும் பிரித்துணர வேண்டும்.

15ஆம் சுலோகத்தை ஒட்டிய கருத்து இதில் கூறப்படுகின்றது. ஆத்மாவின் தன்மையைப் பல முறை வலியுறுத்திச் சொல்ல வேண்டும். 'சுத்தாத்மா' என்றும் 'சுத்தம்' என்றும் இரண்டு சுலோகங்களிலும் வலியுறுத்திக் கூறப்படுவதைக் காண்க. 'நித்ய, சுத்த, புத்த, முக்த, பாவம்' என்று ஆத்மா வர்ணிக்கப்படும். ஒரே கருத்தைத் தொடர்ந்து கூறுவது தத்துவத்தை வலியுறுத்துவதற்காகவே.

ஐந்து கோசங்களுடன் அஞ்ஞானத்தால் ஒன்றியுள்ள ஆத்மாவைப் பிரித்து, உண்மையை உணரப் பயன்படுவது யுக்தி, விவேகம். 'நித்ய அநித்ய வஸ்து விவேகம்' என இது முதற்கண் வழங்கப்படும். ஒரு பறவை பறக்கவேண்டுமாயின் இரண்டு இறக்கைகள் அவசியம். அதுபோன்று வைராக்யமும், போதமும் புருஷனுக்கு அமைகின்றன.—விவேக சூடாமணி.

"நான், எனது, இவை அனைத்தும் எனக்குக் கட்டுப்பட்டவை—என்று அசாத்திய பலத்துடன் இயங்குகின்றாய். மனமே, நீயே எனது

முதல் எதிரி. உன்னை நான் கட்டாயம் வெற்றி கொள்வேன். அதற்கு உபாயமாக விவேகத்தைச் சரணடைகின்றேன். "நமோ அஸ்து தே விவேக" என்று ஸ்ரீராமன் மனதைக் குறித்துக் கூறுவதாக யோக வாசிட்டம் விவேகத்தின் பெருமையை உணர்த்துகின்றது.

விவேகத்தின் துணைகொண்டே உபாதிகளைக் களையவேண்டும் என்பதே பாடலின் கருத்து. இங்குக் கையாளப்படும் உதாரணம் அற்புதமானது. உரலில் நெல்லை இட்டு, உலக்கையால் குத்துவார்கள். எத்தனை முறை இடிக்கவேண்டும், எவ்வளவு நேரம் குத்த வேண்டும்? என எவரும் கேட்பதில்லை. உமியும் தவிடும் நீங்கி அரிசி கிடைக்கும் வரை இச்செயல் நடைபெறவேண்டும் அல்லவா? அது போன்று எவ்வளவு நேரம் தியானம் செய்ய வேண்டும், எத்தனை ஆண்டுகள் சாதனம் செய்வது? என்ற வினாக்கள் பொருளற்றவை. அஞ்ஞானம் அழியும் வரை, ஞானம் பெறும் வரை சாதனம் புரியவேண்டும்.

மானிடர்கள் எப்போதும் விளைவை எதிர்பார்த்தே செயலை மேற்கொள்கின்றனர். "குறைந்த உழைப்பு, இயலுமாயின் உழைப்பே இன்றி; ஆயினும் அதிக லாபம். அதுவும் குறுகிய காலத்திலே" என்பதே தற்போது எல்லாத் துறைகளிலும் காணப்படுகின்ற தீய மனப்பாங்கு. கஷ்டப்பட்டு, சிரமப்பட்டு, உழைத்து ஞானத்தையும் பெறுவதில்லை, பொருளையும் அடைவதில்லை. 'லாட்டரியின் மூலம் பணம் சேர்க்கவேண்டும்' என்ற மாயையில் மயங்காத மானுடர் அரிதினும் அரிதே! இத்தகைய மனப்பாங்குடையோர் நல்ல சாதகர்கள் ஆகமாட்டார். எனவே பலன் எப்படி ஆயினும் அமையட்டும்; நான் எனது கடமையைச் செய்வேன் என்பதே சரியான ஆத்ம சாதகனின் மனப்பாங்கு.

நாரதர் விண்ணுலகம் செல்லும் வழியில் இரண்டு தவசிகளைக் கண்டார். 'எங்களுக்கு முக்தி எப்போது கிட்டும் என்று இறைவனிடம் கேட்டு அறிவிக்க வேண்டும்' என அவர்கள் வேண்டினர். நாரதரும் ஒப்புக்கொண்டார். திரும்பிவந்து, 'இன்னும் மூன்று பிறவிகளுக்குப் பிறகு உமக்கு முக்தி' என்று ஒருவரிடம் கூற, 'ஐயோ, இன்னும் மூன்று பிறவிகளா?' என மனம் சோர்ந்து தளர்ந்துவிட்டார் அவர். அடுத்தவரைப் பார்த்து, 'இதோ இருக்கும் மரத்தில் எத்தனை இலைகள் உள்ளனவோ, அத்தனை பிறவிகள் கழிந்த பின்னரே உமக்கு முக்தி' என்றார். 'ஆகா, என்ன பாக்கியம் செய்தேன். எவ்வாறாயினும் எனக்கு முக்தி கிட்டுவது திண்ணம் என்பது அறிந்து மகிழ்ச்சியே' என ஆனந்தக் கூத்தாடினர் அவர். 'தக்க மனபரிபாகம் படைத்த உமக்கு இந்த க்ஷணமே முக்தி' என்று இறைவன் காட்சியளித்து வரம் தந்தார். சாதகர்கள் மனம் தளராது இத்தகைய மனப்பாங்கை மேற்கொள்ளவேண்டும். சாதனை சரியாக அமையுமானால் அதுவே ஆனந்தம் பயக்கும். 'அப்யாஸாத் ரமதே' என்கிறது கீதை. தளராத மனநிலையும், குன்றாத ஊக்கமும் உடையவர்களே இந்தப் பேரின்ப நிலையை எய்த முடியும்.

सदा सर्वगतोऽप्यात्मा न सर्वत्रावभासते ।
बुद्धावेवावभासेत स्वच्छेषु प्रतिबिम्ववत् ॥

आत्मा (ஆத்மா) ஆத்மா, सदा (ஸதா) என்றும், सर्वगत: अपि (ஸர்வகத: அபி) எல்லா இடத்திலும் நிறைந்திருப்பது ஆயினும் सर्वत्र (ஸர்வத்ர) எல்லா இடங்களிலும் न अवभासते (ந அவபாஸதே) வெளிப்படையாகத் தெரிவதில்லை. स्वच्छेषु (ஸ்வச்சேஷு) களங்கமேதுமற்ற (கண்ணாடியில்) प्रतिबिम्ववत् (பிரதிபிம்பவத்) பிரதிபலிக்கும் பிம்பம்போல், बुद्धौ एव (புத்தௌ ஏவ) புத்தியில் மட்டுமே अवभासेत (அவபாஸேத) பிரதிபலிக்கின்றது.

"களங்கமற்ற கண்ணாடியில் மட்டுமே தெளிவான பிரதிபிம்பம் காணப்படும். அதுபோன்று ஆத்மா எங்கும், எல்லாக் காலத்தும் பரந்து கிடந்தாலும், எல்லா இடத்திலும் பிரகாசிப்பதில்லை. தூய புத்தியில் மட்டுமே பிரதிபலிக்கின்றது."

கண்ணாடியில் அழுக்குப் படிந்தால், பிம்பம் தெரியாது. தண்ணீர் கலங்கியிருந்தால் முகம் தெரியாது. அவற்றைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். மாசு படிந்துள்ள மனதைத் தூயதாக்கினால் பரம்பொருள் அங்கே பிரகாசிக்கும். கரடுமுரடான மேற்பரப்பை உடைய கல் ஒன்றை இழைத்து, வழவழப்பாக்கினால் அதன் மேற்பரப்பில் பொருள்களின்

பிரதிபலிப்பு காணப்படும். அங்ஙனம் மரத்தையும் இழைக்கலாம். கல்போன்று இறுகிய மனதையும், மரம் போன்று உணர்வற்ற மனதையும் இங்ஙனம் நாம் இழைக்க வேண்டும். 'Culturing' என்ற ஆங்கிலச் சொல் இங்ஙனம் கல், மரத்தைப் பளபளப்பாக்குவதைச் குறிக்கும். அதே சொல்லை மனிதர்களுக்குப் பயன்படுத்தும்போது, நல்ல பண்பாட்டை உருவாக்குவதைக் குறிக்கும். மனதை உடையவன் மனிதன்; மனதை மாண்புறச் செய்வது பண்பாடு. மனதைப் பண்படுத்தி, எண்ணங்களைச் சீராக்கி, இலட்சியத்தில் இழைத்து, மாசுகளை அகற்றி, மிருதுவாக்கப்பட்ட இதயத்தில் இறைவன் குடிகொண்டுள்ளான். 'ஈச்வர: ஸர்வபூதானாம் ஹ்ருத்தேசே அர்ஜுன திஷ்டதி'—ஈசுவரன் எல்லா உயிர்களின் இதயத்தில் இருக்கின்றார் என்று கண்ணன் உரைக்கின்றார். இதயமும் உள்ளமும் ஒன்றே.

மனம் சாந்த நிலையில் அடங்கி இருப்பது உயர்ந்த பண்பாட்டிற்கு அறிகுறி. சாதனையில் முன்னேற்றம் அடைந்தவர்கள் மன அமைதியோடு இலங்குவர். 'ப்ரசாந்த மனஸம் ஏனம்' என்று அடைமொழியிட்டு யோகியைக் கீதை வர்ணனை செய்கின்றது. இத்தகைய ஞானிகளின் அருகே சென்றால், அத்தகைய சாந்தியை நாமும் சிறிது உணரலாம். 'ஒருவரைப் பார்த்தவுடன் அவர் உயர்ந்த நிலையை எய்தியுள்ளார் என்று எப்படி அறிவது?' என ஸ்ரீ மகாபுருஷ மகராஜ் அவர்களிடம் கேட்டபோது அவர் கூறிய பதிலாவது: "உனது மனம் அவரது சன்னதியில் எப்படி இருக்கின்றது என்று பார். உள்ளத்தே ஆனந்தமும், அமைதியும் குடிகொண்டால், அவர் பெரிய மூர்த்தி" என்று உரைலாம். இரும்பு துண்டைக் காந்தத்தின் அருகில் வைத்தால் அதுவும் காந்தமாகிவிடும். இது Physical Magnetism. மேலே குறிப்பிட்டது Spiritual Magnetism. இத்தகைய காந்த சக்தி ஆன்மீக நிலையிலும் உள்ளது. ஆயினும் அதனைப் பெறுவதற்குச் சாதகனும் தயாராக இருக்கவேண்டும். கல், மரத்துண்டு ஆகியவை காந்தமாகா. அதுபோன்று பண்படாத மனம் காந்தமெனத் திகழும் தெய்விக சக்தியைக் கிரகிக்க இயலாது. ஆத்ம சாதனையில் சிறிது முன்னேறியவர்கள் இதனை நன்கு அறியலாம். ஸ்ரீ ரமண மகரிஷியின் முன் இருக்கும்போது, அவர் பேசாது அமைதியாக இருப்பதே பெரிய நிலை என்பதைப் பலரும் உணர்ந்தனர்.

பண்டிதரும் படகோட்டியும்

ஒரு சமயம் பண்டிதர் ஒருவர் படகில் ஆற்றைக் கடந்துகொண்டிருந்தார். படகில் அவரும் படகோட்டியும் மட்டுமே இருந்தனர். படகு நட்டாறறில் போய்க்கொண்டிருந்தபொழுது படகோட்டியிடம் அவர் சம்பாஷணை செய்யத் தொடங்கினார்.

பண்டிதர்: அப்பா! உனக்கு என்ன வயது?

படகோட்டி: பண்டிதரே! எனக்கு வயது நாற்பது.

பண்டிதர்: நீ சாஸ்திரம் படித்திருக்கிறாயா?

படகோட்டி: படிக்கவில்லை.

பண்டிதர்: உனக்கு ராமாயணம் தெரியுமா?

படகோட்டி: தெரியாது.

பண்டிதர்: உனக்குப் பாரதம் தெரியுமா?

படகோட்டி: தெரியாது.

பண்டிதர்: உனக்குப் பாகவதம் தெரியுமா?

படகோட்டி: தெரியாது.

பண்டிதர்: உனக்கு என்னதான் தெரியும்?

படகோட்டி: ஐயனே! நான் படிக்காதவன். படகோட்டுவதால் வரும் பணத்தைக்கொண்டு வாழ்ந்து வருகிறேன். நான் நன்றாகப் படகு ஓட்டக் கற்றிருக்கின்றேன். நன்றாக நீந்தவும் கற்றிருக்கின்றேன். இவற்றிற்கு மேல் எனக்கு ஒன்றும் தெரியாது.

பண்டிதர்: உன்னுடைய வாழ்நாளில் பாதி நாட்கள் பாழாய்ப் போய்விட்டன.

படகோட்டி: பண்டிதரே! படகில் ஓட்டை விழுந்துவிட்டது. தண்ணீர் படகுக்குள் வருகிறது. இன்னும் சிறிது நேரத்தில் படகு நீருக்குள் மூழ்கிவிடும். உங்களுக்கு நீந்தத் தெரியுமா?

பண்டிதர்: தெரியாது.

படகோட்டி: ஐயோ! உங்களுடைய வாழ்நாள் முழுவதுமே பாழாய்ப்போய்விட்டதே!

படகு நீரில் மூழ்கியது. பண்டிதரும் படகுடன் மூழ்கினார். படகோட்டி நீந்திக் கரை சேர்ந்தான்.

பொருளாதாரக் கொள்கைகள்

(சுவாமி ஸதானந்தர்)

இவ்வுலகம் எப்படி நடந்து வருகிறது, அது எப்படி வேலை செய்கிறது, அதன் இயல்பு என்ன என்கிற விஷயங்களே அதன் தத்துவங்கள் எனப்படுகின்றன. அது எப்படி இருக்கிறதோ அதைப்பற்றிய விளக்கம் தத்துவம் என்று சொல்லப்படுகிறது. இப்பிரபஞ்ச, மானுட, தத்துவங்கள் சிலவற்றை நாம் அறிந்துகொண்டால்தான் பின்னால் சொல்லப்படுகிற விஷயங்களைப் புரிந்துகொள்ளமுடியும். சரிதான் என்று அங்கீகரிக்கமுடியும்.

பேதமே வடிவெடுத்தது சிருஷ்டி. பேதம் இல்லாவிட்டால் சிருஷ்டியே சாத்தியமில்லை. எத்தனை உயிர்வகைகள், அவற்றின் நடை, உடை, உணவு, பாவனைகள் எத்தனை, அறிவு, திறமை, பண்பாடு, ஒழுக்கம், அன்பு இவற்றில் எத்தனை படித்தரங்கள்! இவைகளை எண்ணிப் பார்த்தாலே நம் அறிவு விசாலமாகிறது, வியப்பு உண்டாகிறது. நம் சிறுமைகள், குறுகிய மனோபாவங்கள் போகின்றன. இந்தப் பேதங்கள் ஜீவனிடத்தில் நிரந்தரமாக உள்ளவை அல்ல. இவைகள் மாறி மேன்மையானவைகளாக உரு எடுக்கின்றன. இது சிருஷ்டியின் அதி ஆச்சரியமான உயர் திட்டம் ஆகும். ஆனால் அதற்கு நீண்டகாலம் பிடிக்கிறது. குழந்தைக்கு எழுத்தும்,பாடமும் கற்கச் சற்றுக் காலம்எடுக்கிறது.வயது வரவரப்புரிந்துகொள்ளும் ஆற்றல் அதிகரிக்கிறது. நல்ல அனுபவம் வந்த பிறகு தானே விளங்குகிறது, தோன்றுகிறது. அதேபோன்று பண்பில் கீழ் நிலையில் இருப்பவன் மேலேவரக் காலம் பிடிக்கும். பண்பில் மேலே வரவர அவன் மேலும் உயர்தல் சற்று எளிதாகிறது. பண்படாதவன் என்றும் உலகில் இருந்து கொண்டே இருப்பான். மனிதன் பண்பில் மேலே போய் முக்திநிலை எய்துதலும் நிகழ்ந்துகொண்டே இருக்கும்.

இப்பேதங்கள் கணக்கற்ற துவந்துவங்களாக, (இருமைகளாக) வடிவெடுப்பது சிருஷ்டியின் மற்றொரு பாங்கு ஆகும். இன்பம் துன்பம், மேடு பள்ளம், அறிவு அறியாமை, நன்மை தீமை, பெருமை சிறுமை, செல்வம் வறுமை, மானம் அவமானம், குளிர் வெப்பம் ஆகிய இவைகள் துவந்துவங்கள் எனப்படுகின்றன. விளையாடுவதற்கு இரண்டு கட்சிகளாகப் பிரிந்து நிற்கவேண்டியிருப்பதுபோல எல்லாப் பொருள்களும் பலன் தருவதில் இரண்டாகப் பிரிந்துள்ளன. ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல அவைகள் இருக்கின்றன. அவை பிரிக்க முடியாதபடி ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. ஒன்றை அழித்தால் மற்றதும் அழிந்துவிடும். ஒன்றைத் தோற்றுவித்தால் மற்றதும் சேர்ந்துவரும்.

இந்தப் பேதமும் துவந்துவமும் மனதைச் சார்ந்து நிற்கின்றன. பண்பாட்டில் மேலே போகப் போகத் துவந்துவங்கள் பொருளற்றவை ஆகிவிடுகின்றன, அவை செயலற்றவை ஆகிவிடுகின்றன. ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும் என்பார்கள். பண்பட்டவன் திருஷ்டியில் பேதமே படுவதில்லை. யுதிஷ்டிரன் பார்வையில் இவ்வுலகில் கெட்டவர்களே இல்லை. இறைவனைத்தவிர, அவன் திருவிளையாடலைத் தவிர வேறு எதையும் யுதிஷ்டிரன் காணவில்லை. உண்மையில் பேதமுமில்லை, துவந்துவமும் இல்லை; எல்லாம் கற்பனையே, எல்லாம் கனவு போன்றவையே—இது ஞானியின் உயர்ந்த சம திருஷ்டி. இது சிருஷ்டியின் மிக உயர்ந்த அத்வைத நிலை. இவ்விருகோடிகளுக்கும் இடையில் எல்லா உயிர்களும் இருக்கின்றன. இருக்கிற இடத்திலிருந்து அவை முன்னேற்றம் அடைகின்றன. அதற்கு உதவுவதே நல்ல செயல் திட்டம் ஆகின்றது. நாம் உதவிதான் செய்யலாம், முன்னேற்றமடைவது அதன் உணர்வை, முயற்சியைப் பொறுத்தது. இவ்விபரங்கள் எல்லாம் சிற்றுயிர்களுக்குத் தெரியாது. பகுத்தறிவுள்ள மனிதனுக்கே இவைகள் பொருந்தும். இனி, விஷயத்திற்கு வருவோம்.

எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்பார்கள். வெறும் உடல் அழகு மூன்றாவது ஸ்தானம்தான். அது மனிதனை மேலோன் ஆக்காது. அறிவு தான் மனிதனை மேலோன் ஆக்குகிறது. அதனினும் மேலாக ஒழுக்கம், பண்பு,பக்தி,தியாகம் ஆகிய தெய்வீகக் குணங்

கள் மனிதனை மேன்மைப்படுத்துகின்றன. அறிவும் பண்பும்தான் சிரசு என்கிற பதத்தால் குறிக்கப்படுகின்றன. மனதின் கட்டளைப்படி, தூண்டுதலின்படி உடல் இயங்குகிறது. மனம் சரியானால் உடலால் செய்யப்படுகிற அனைத்தும் மேலானவைகள் ஆகிவிடுகின்றன. ஆனால் அந்தோ! எண்சாண் உடம்பிற்குக் காலே பிரதானம் என்கிற நிலைமை உருவாகி விட்டது. எதையுமே மூடி மறைக்காமல், நாகரிகமாக, நாசுக்காகச் சொல்கிறவிதத்தில் உண்மை புரியாது போகிறநிலை இருப்பதால், உண்மையை உள்ளபடி சொல்லவேண்டும் என்கிற கருத்துடன் எழுதப்படுகிறது. நன்கு சிந்தியுங்கள். சரீரத்தில் கை, கால்கள் எப்படியோ, கர்மேந்திரியங்கள் எப்படியோ அந்த நிலைமையில் உள்ளவன் தொழிலாளி. மண்வெட்டி, இரும்புச்சட்டி, பேரிங், பல் சக்கரம், கத்தி என்று இப்படிப் பலவகை இரும்புச்சாமான்கள் பல விதமான இரும்புகளால் செய்யப்படுகின்றன. மண் கலந்த இரும்பு முதல் மிகவும் சுத்தி செய்யப்பட்ட இரும்புவரை இரும்பு பல படித்தரங்களில் இருந்து அந்தந்த ஆயுதம், சாமான்களாகி உபயோகிக்கப்படுகின்றன. ஒரு காரியத்துக்கு மிகவும் உயர்தரமான இரும்பு வேண்டும். மட்டமான இரும்பு போதும் என்கிற காரியத்துக்கு உயர்ந்த இரும்பை உபயோகிப்பதால் அது வீண் நஷ்டமாகும். சரீர உழைப்பு, கூலி வேலை செய்பவனுக்குச் சரீர திடம் வேண்டும். அப்படிப்பட்டவன் அறிவு, மனோ முயற்சி, பண்பு இவைகளில் சற்று மந்தமாகததான் இருப்பான். அப்படி இருந்தால் தான் சரீர உழைப்புச் சாத்தியப்படும். அசாதாரணமாக ஏதோ ஓர் உதாரணத்தைக் கொண்டு பொதுவான நிலைமையை மறுக்கலாகாது. சம சந்தர்ப்பம் தரப்பட்டால் எல்லாரும் ஒன்று போல் முன்னேற்றம் அடைந்து விடலாம என்பது வெறும் பேச்சு. இன்றைய நடைமுறையில் பள்ளிக்கூடங்களில் போதனை ஒன்றுபோல் செய்யப்படுகிறது. பின் ஏன் பல படித்தரங்களில் மாணவர் இருக்கவேண்டும்? ஒருவன் பரீக்ஷையில் ஏன் தவற வேண்டும்? சம சந்தர்ப்பம் மட்டும் போதாது. ஆசிரியர், உபாயங்களையும் கண்டிப்பான நடவடிக்கைகளையும் எடுத்தால் இன்னும் சில மாணவர் முன்னேறலாம். அப்படியும் கீழ்நிலையில் சிலர் இருப்பார்கள். ஆனால் இன்று மாணவர்கள்மீது ஆசிரியர் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. பையனைப் படிப்பில் கருத்துச் செலுத்தும்படி சொல்ல முடியாது. அடுத்த தலைமுறை எவ்வளவு அறிவும் ஒழுக்கமும் உள்ளதாக இருக்குமோ? செயற்கையாக, வலிய, நாம் செய்கிற ஏற்பாடுகள் பல தோல்வியடைந்துள்ளன. நான் முன்னேற வேண்டும், நானும் நாலு பேரைப் போல அந்தஸ்தாக வாழவேண்டும் என்று தனக்குள்ளேயே எழுச்சி, உணர்ச்சி, ஆர்வம், தூண்டுதல், முயற்சி வேண்டும். இவையொன்றும் இல்லாத மரக்கட்டை ஜன்மத்தை நாம் தலையில் தூக்கிவைத்துக்கொண்டு ஆடினால் அது விபரீத விளைவுகளைத்தருகிறது. இந்தத் திட்டங்கள் எல்லாம் தேசப்பொருளாதாரத்தை எவ்வளவோ பாதிக்கின்றன, சிதைத்துள்ளன. ஆகையால் தொழிலாளிகளுக்குச் சலுகைக்குமேல் சலுகை காட்டப்படுகிறது. அவன் தவறு செய்தால் கண்டிக்க முடியாது, விலக்கமுடியாது. இதன் விளைவு பொருள்களின் விலை ஏறிக்கொண்டே போகிறது. அவனவனுக்குரிய மதிப்புத்தான் தர வேண்டும். கர்ணம், ரெவின்யு இன்ஸ்பெக்டர், தாசில்தார், ரெவின்யு டிவிஷனல் ஆபீஸர், கலெக்டர் என்று அதிகாரத்தில் பலபடித்தரங்கள் வைத்துள்ளார்கள். ஆனால் கீழே உள்ளவனைக் கண்டிக்கமட்டும் அதிகாரம் கிடையாது. தகராறு வந்தால் சாமர்த்தியம் போதவில்லையே என்று மேலதிகாரிதான் கோபிக்கப்படுகிறார். இது நம் பொருளாதாரத்தை நாளடைவில் பெரிதும் பாதிக்கும் என்று சிந்திப்பார் இல்லை. உழைக்காமலேயே சுகஜீவனம் பண்ணவேண்டும் என்கிற மனப்பான்மை வளர்ந்து வருகிறது. ஆடம்பரம், சுயநலம், பொறாமை இவைகளும் வளர்ந்து வருகின்றன. இதன் விளைவு அழிவில்தான் கொண்டுவிடும். நீர்வளம், நிலவளம், எண்ணெய் வளம், கனிவளம், இயற்கை வளம் என்று இயற்கையில் வளங்கள், செல்வங்கள் பல இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் பிரயோஜனமாக்குவது, உருப்படியாக்குவது மனித உழைப்பே, அறிவே ஆகும். அறிவையும்

உழைப்பையும் புறக்கணித்து நாம் க்ஷீணதசை தான் அடையப்போகிறும். உழைப்புத்தான் செல்வம், அறிவுதான் செல்வம், பொறுப்புத் தான் செல்வம், பண்புதான் செல்வம். பொது மக்களே சிந்தியுங்கள். இகலோக வாழ்வில் சுபிக்ஷமும், அமைதியும், நீதியும், நேர்மையும் இல்லாமல் நாம் பாரமார்த்திக வாழ்வில் என்ன முன்னேற்றம் அடைந்துவிடமுடியும்?

இரண்டு சம்பவங்களை இங்குக் குறிப்பிட லாம். காந்திஜி காலத்தில் சேரிகளைக் கூட்டிச் சுத்தம் செய்து அவர்களுக்குச் சுத்த புத்தியை உண்டாக்கவேண்டும், தூண்டிவிடவேண்டும், வளரச் செய்யவேண்டும் என்று ஒரு சேவைத் திட்டத்தை உருவாக்கினர். இச்சேவையில் தொண்டாற்றிய ஒரு கிராம சேவக் தம் அனு பவம் ஒன்றைச் சொன்னர். அவரை வழியில் கண்ட சேரிக்காரன், "ஏனய்யா வெள்ளிக் கிழமைதோறும் சேரிக்கு வந்துகூட்டிச் சுத்தம் செய்து கொண்டிருந்தீர்களே, இப்போது அதை ஏன் விட்டுவிட்டீர்கள்? சேரி அசுத்த மாய்க்கிடக்கிறது. ஒருநாள் வந்து சுத்தம் செய்ய ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொன் ஞனும். இப்படி எல்லாம் சொல்வதால் யாரை யாவது குறை கூறுவதாகவோ, இழிவுபடுத்து வதாகவோ, பழி சுமத்துவதாகவோ கருதக் கூடாது. சொறி, சிரங்கு உள்ளவனைத்தொட்டு வைத்தியம் செய்துவிட்டு டாக்டர் சோப்புப் போட்டுக் கைகழுவினல் அது அவனைக் கேவ லப்படுத்தியதாக அர்த்தமா? ஆசிரியரோ, பெற் ரோரோ பையன் சரியாக நடந்துகொள்ள வில்லை என்று கண்டித்தால், திட்டினல் அது அவனைக் கேவலப்படுத்தியதாக அர்த்தமா? அதேபோன்று உண்மைகளை உள்ளபடி விளக் கிச் சொல்லும்போது இழிவுபடுத்துவது போன்று தோன்றுகிறது. ஆனல் அப்படிச் சொல்லாவிட்டால் உண்மை விளங்காது. பிற் பட்டோர், கீழ் இனத்தார் முன்னேற்றத்திற்கு என்று செய்யப்படும் தேசிய செலவு இனங்கள் யாவும் பாழாகி வருகின்றன.

தொழிலில் உழைப்பு, பொறுப்பு, நல்ல மனப்பான்மை இவைகள் முக்கியமாக இருக்க வேண்டும். தொழிலாளி உழைப்பில் ஏமாற்றி ஞல்,பொறுப்பற்றுப் பண்டங்களை விரயமாக்கி ஞல் தொழில் நசித்து விடும், முதல் போய் விடும், நஷ்டம் வரும். முன்னேற்றம் அடை யச் செய்கிறேன் என்று கோடிக்கணக்கான தொழிலாளிகளின் மனப்பான்மையைக் கெடுத்துவிடலாகாது. சங்கங்கள் அமைத்துக் கொண்டு போராடுகிறுர்கள். எந்தச் சங்க மாவது தொழிலாளியை விசாரித்து, நீ நடந்து கொண்டது சரியன்று என்று சொல்லியது உண்டா? தொழிலாளி தப்பாக இருந்தாலும் நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது தப்பு என்று போராட்டம் நடக்கிறது. ஆகையால் தொழில் சங்கங்கள் செம்மைப்படுத்தப்படவேண்டும், அல்லது அவற்றைக் கலைத்துவிடவேண்டும். மானுட இயல்புகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு கீழ்மையைப் போக்க முயலுங்கள். சங்கிலி போல் வளருகிற தீமை களை எண்ணிப்பாருங்கள். சங்கங்களுக்குத் தலைவனுக வருகிறவன் மட்டும் யோக்கியனு? அவன் எவ்வளவு கைக்கூலி பெறுகிறுன், தொழிலாளிக்குத் துரோகம் செய்கிறுன் என் பது உலகறிந்த விஷயமாகும். இந்தச் சங்கங் களின் தலைவர்களைவிட முதலாளிகள் மோச மானவர்கள் ஆகிவிடவில்லை. அரசியல்வாதி களும் உத்தியோக வர்க்கமும் கெட்டு வரலா யிற்று. சங்கங்கள் போராடிப்பெற்ற சலுகை களைபோனஸ்களை எத்தனை தொழிலாளி உருப் படியாக்கியிருக்கிறுன் என்று ஒரு கணககு எடுத்துப் பாருங்கள். கடனைத் தீர்த்தோம், நகையை மீட்டோம், வீட்டைக் கட்டினேம், பூமியை வாங்கினேம், மகளுக்குக் கல்யாணம் முடித்தோம், வீட்டுக்கு வருஷத் தேவைக்குச் சாமான் வாங்கிப்போட்டோம் என்று எத் தனை பேர் குடும்ப அபிவிருத்திக்குச் செலவு செய்திருப்பார்கள் என்று புள்ளி விவரம் எடுத்துப் பாருங்கள். பெரும்பாலும் வீண் செலவுகளில் பணம் விரயமாகி இருப்பதையே காண்பீர்கள். இது தேசப் பொருளாதாரத் தைச் சிதைக்கும் என்பதை நினைப்பார் உண்டா? எவ்வளவு கொடுத்தாலும் வறுமை நீங்காத ஓட்டைப் பாத்திரமாகவே தொழி லாளி இருப்பான். 'வறுமை என்பது செல் வம் இல்லாமையால் ஏற்பட்டதன்று. அது மனதைப் பொறுத்தது.' திருப்தியுடன் வாழ் வது என்பது செல்வத்தால் ஏற்படுவதன்று. வாழும் முறை தெரிந்து பண்புடன் எளிமை

யாக வாழத் தெரிந்துகொண்டால் திருப்தி உண்டாகும்.

ஒரு பெரிய தொழிற்சாலை நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருந்தது. அதை ஆரம்பித்தவர் ஆரம்பத்தில் சாதாரண மனிதர். நல்வினைப் பயனால் அவருடைய தொழில் அபிவிருத்தியாகி, சிறப்பாக நடந்து வந்தது. அவர் இறந்துவிட்டார். அவர் மகன் நிர்வாகத்திற்கு வந்தான். அந்த இளைஞன் ஆடம்பர வாழ்க்கை உள்ளவன். அவனுக்குக் கெட்ட சிநேகிதர்கள் ஏற்பட்டு விட்டனர். சில வருஷங்களில் தொழிலில் நஷ்டம் ஏற்பட ஆரம்பித்தது. குடும்பத்தின் முதியவர்கள் கவலைப்படலாயினர். தொழிலை ஆரம்பித்தவரின் பால்ய நண்பர் ஒருவர், அவரும் இவரைப் போன்றே சாதாரண நிலையிலிருந்து நல்வினைப்பயனால் மிகப் பெரிய செல்வந்தர் தொழிலதிபர் ஆனவர். அவரிடம் விஷயங்களைச் சொல்லித் தம் நண்பரின் தொழிலைக் கண்காணிக்குமாறு வேண்டிக் கொண்டார்கள். அவர் பழைய நட்பினால் சில நாள் வந்து ஆராய்ந்தார். என்ன செய்யவேண்டும் என்பதைத் தெரிவித்தார். "என் நண்பரின் தொழில் பாழாகி விடாமல் பாதுகாப்பது என் கடமை. நான் பொறுப்பு ஏற்கிறேன். ஆனால் என் நடவடிக்கைகளில் நீங்கள் தலையிடக்கூடாது. உங்கள் குடும்பச் செலவுக்கு நீங்கள் எவ்வளவு கேட்டாலும் தந்துவிடுகிறேன். எல்லாம் சரியான பிறகு ஒப்படைத்து விடுகிறேன் என்று சொன்னார். அங்ஙனமே சம்மதித்து விட்டு விட்டார்கள். நண்பர் நிர்வாகத்தை ஏற்றதும் முதலில் செய்த காரியம் (over staff) அனாவசியமான, அதிகப்படியான வேலைக்காரர்களை வேலையை விட்டுநீக்கினர். அது அநியாயமாய் ஏராளமான பணத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. எல்லாரையும் சரியாகக் காரியம் பார்க்க வைத்தார். நிர்வாகம் சீரடைந்து ஓர் ஆண்டில் தொழிலில் லாபம் ஏற்பட்டது. இச்சம்பவம் உண்மையில் நடைபெற்றது. இந்த நிலைமையில் நம் சர்க்கார் நிர்வாகங்கள் நடைபெறுகின்றன. வேலை வாய்ப்புப் பண்ணுகிற முறையில் உற்பத்தி செய்யப்பட்ட வேலைகள் எல்லாம் வீணே. வேலை வாய்ப்பு உண்டாக்கித் தருவது சர்க்கார் பொறுப்புப் போன்று அது தேசத்துக்குப் பிரயோஜனமாய், நம் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்கிற முறையில் இருக்கிறதா என்று கவனிக்கிற பொறுப்பு சர்க்காருக்கு இல்லையா? தனிப்பட்ட நபர்கள் ஐந்து ரூபாயில் செய்யக்கூடிய காரியத்தைச் சர்க்கார் ஐம்பது ரூபாயில் கூடச் சரியாகச் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறது. அரசாங்கத்தின் மனதில் இவையெல்லாம் படுவதில்லை. அழுத்தமான சுயநலம், அதிகார ஆசை உள்ளவனுக்குத் தேச நலம் எப்படி விளங்கும்? பஸ் காரியாலயங்களில் தேவைக்கு மேல் வேலை ஆட்கள் இருப்பதும், அவர்கள் சரியாக வேலை செய்யாததும், எங்குப் பார்த்தாலும் அழுக்கும் ஒட்டடையும் பிடித்திருப்பதும் மக்கள் கண்ணில் படுவதில்லையா? ஒரு பியூன் கிளார்க்கையும் மேல் ஆபீஸரையும் மிரட்டுகிற நிலையும், லஞ்ச சூழ்நிலையும் மக்கள் கண்ணில் படுவதில்லையா? அரசியல் வாதிகள் சரியாகி விட்டால் நம் தேசப் பொருளாதாரம் சீரடைந்து விடும், பல கஷ்டங்கள் தீரும். சிந்தனைக்குரிய மற்றொரு விஷயம். ஒரு விவசாயப் பண்ணையில் பத்துக் கூலிக்காரர்களின் குடும்பங்கள் வாழ்கின்றன. ஒரு கணவனும் மனைவியும் வாரம் சராசரி ரூபாய் ஐம்பது கூலி பெறுகிறார்கள். அங்கேயே வெளி விலைக்கு அரிசி, காய் தரப்படுகின்றன. வீட்டு வாடகை, கரண்ட் செலவு ஏதும் இல்லை. வாரத் தேவைக்கு உப்பு, புளி, எண்ணெய், பருப்பு ஏதோ வாங்குவான். வருஷம் ஒருமுறை ஏதோ துணி வாங்குவான். இது அவனுடைய பெரும்பாலான நித்திய வாழ்க்கை. இம்முறையில் அவன் வாழ்க்கை ஆடம்பரமின்றி அமைதியாக நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இப்போது சிந்தியுங்கள். அவர்கள் சர்க்காருக்குச் செலுத்திய வரி எவ்வளவு?

குறைந்த வருமானமுள்ள ஏழை எளியவர்கள் கூலிக்காரர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் வருவாய் அவர்கள் ஜீவனத்துக்கே போதவில்லை. அவர்கள் சர்க்காருக்கு என்ன வரி செலுத்த முடியுமா? வரி இன்றி எந்த அரசாங்கம் நடைபெற முடியும்? வரிகள் மூலம் வருமானம் தேடித்தான் அரசாங்கப் பொதுக்காரியங்கள் நடந்தாகவேண்டும்

(தொடரும்)

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

6. தர்மத்தின் தனிமை தீர்ப்பான்

வேறு வேறான இயல்புகளுடைய மனிதர்களைச் சீதை தன் வாழ்வில் சந்திக்கின்றாள். தன்னை மணம் புரிய விரும்பி, தந்தையிடம் விண்ணப்பம் செய்து, தோற்று, அதனால் படையெடுத்து வந்து மிதிலையை அழிக்க முயன்ற வேந்தர்கள்; பொறாமையின் சின்னமாக வந்து ராமனை மிரட்டிய பரசுராமன்; உள்ளமும் கோடிய கொடியவளான கூனி; சுயநலத்தின் மொத்த உருவமாகச் சூழ்ச்சி செய்த கைகேயி; வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல் தசரதன்; தாய்மைக்கு விளக்கமாகத் திகழ்ந்த கோசலை; தபஸ்வினியாக வாழ்ந்துவரும் சொல் மாண்பு உடைய சுமித்திரை; பக்திக் கடலுள் முகிழ்த்த முத்தான குகன்; தியாகத்தின் சிகரத்தில் நின்ற பரதன்; அருள்மழை பொழிந்த ஆச்ரம வாசிகளான ரிஷிகளும் அவர்களுடைய தேவியரும்; நெஞ்சத்தில் வஞ்சம் நிறைந்த சூர்ப்பணகை; தமையனுக்காகத் தாயையும் தாரத்தையும் பிரிந்து கானகம் வந்த இலக்குவன்; காமப்புற்று நோய்க்குப் பலியான ராவணன்; தந்தையின் பாசம் காட்டித் தன் உயிரைப் புகழுக்கு விற்ற கழுகரசன் ஜடாயு; பிறன்மனை விரும்பிய பேதையின் ஆணைப்படி தன்னை வருத்திய அரக்கியர் கூட்டம்; அந்தக் கூட்டத்திலும், அறத்தொடு நின்று அன்புள்ளம் கொண்ட திரிசடை, இவ்வாறாகப் பல்வேறு இயல்புகளுடைய மனிதர்கள் பலரைப் பார்த்தவள் சீதை. இவர்களுள், தனக்கும் தன் நாயகனுக்கும் துணைபுரிந்து அன்பு காட்டியவர்களிடையே அனுமனுடன் ஒப்பிடக்கூடியவர்கள் யாருமேயில்லை என்றே சீதை துணிந்திருக்க வேண்டும். அனுமனுடைய பக்திக்கும் தியாகத்திற்கும் ஈடாக வேறு யாருடையதையும் காட்ட முடியாது. அதனால்தானே அனுமனை அழைக்கும் போதெல்லாம் சீதையின் உள்ளம் நெகிழ்ந்து போகின்றது. அனுமனைப் பற்றிப் பேசும் சீதையின் சொற்களைப் பாருங்கள் :

"வீர ! நீ யாவன் ?"

"நெறி நின்று பொறிகள் ஐந்தும் வென்றவன்"

"நன்று உணர்வு உரையன்"

"தூயன்; நவை இலன்"

"எம்பிரான் நாமம்சொல்லி உருக்கினன் உணர்வை"

"உயிர் தந்தாய் உத்தம!"

"செம்மையாய் உயிர் தந்தாய்"

"அம்மையாய், அப்பனாய அத்தனே !"

"அருளின் வாழ்வே !"

"வாழிய வள்ளலே !"

"விழுமிய குணத்தோய் !"

"மெய்ம்மையோய் !"

"நீதியோய் !"

"மேலோய் !"

"மெய்ம்மை தொடர்ந்தோய் !"

"நாடிவந்து என் இன்னுயிர் நல்கினை, நல்லோய்"

"தாயே அனைய கருணையான் !"

இப்படியெல்லாம் அனுமனைப் பாராட்டிய பிராட்டி, அசோகவனத்தில் முதலில் அனுமனுக்குச் சிரஞ்சீவிப் பட்டத்தையும், யுத்தம் முடிந்த பின்னர் தன் தலையினால் அனுமனைத் தொழும் தன்மையையும் அளித்ததை முன் பகுதிகளில் பார்த்தோம். நிறை தவம் அன்னதோர் செயலாள், தாயினும் தொழத்தக்காள், நற்பெருந் தவத்தள், உலகினை ஈன்ற அன்னை, எல்லை நீத்த உலகங்கள் யாவையும் தன் சொல்லினால் சுடக்கூடிய கற்பின் கனலி, நெடு மனையின் மாசு துடைத்த மனத்தினள், மண் மகளறியாத வண்ணச் சீறடிகள் வருந்த அஞ்சன வண்ணனுடன் அருங்கானடைந்த பெருந் தெய்வம், ஞாலநாயகனின் ஆவியான மிதிலைச் செல்வி, அனுமன் தனக்குச் செய்த உதவிகளுக்காக அவன் பாதங்களில் தன் தலை வைத்து வணங்குவதற்கு முன்வந்தாளென்றால் இதனைவிடப் பெரிய கைம்மாறு வேறு என்ன இருக்க முடியும்? சிரஞ்சீவிப் பட்டத்தை விட இந்தக் கைம்மாறு ஆயிரம் மடங்கு உயர்ந்தது என்பதில் ஐயமுண்டோ? தியாக மூர்த்தியான அனுமன் பெற்றபேறு வேறு யாருக்குக் கிடைக்கும் ?

நன்றி கூறிப் பாராட்டும் கலையில் சீதையை வெற்றிகொள்ள யாராலும் முடியாது என்றே கருதவேண்டியுள்ளது. ஆனால் அனுமனுக்கு

நன்றி சொல்லும்போது ராமன் மேற்கொண்ட முறை சீதையோடு போட்டிபோடுவது போன்றே அமைந்திருக்கின்றது. ராமன் முடி சூட்டுவிழா நிறைவேறிய பின்னர், நண்பர்களுக்கெல்லாம் பல நல்ல பரிசுகள் நல்கிவிடை கொடுத்தனுப்புகின்றான் அயோத்தி வள்ளல். அனுமனுக்கு விடைகொடுக்கும் நேரம் வந்தது; அஞ்சன வண்ணன் அகம் நெகிழ்கின்றது. இப்படி ஒரு தியாக சீலனை இனிக்காணப் போகின்றோமா என்று அறத்தின் நாயகன் உள்ளம் உருகுகின்றான். இவனுடைய பேருதவிக்கு என்ன பரிசு கொடுத்து ஈடுசெய்ய முடியும் என்று திகைக்கின்றான் பெருமான். கோசல நாடுடைய வள்ளல் கொடுத்த பரிசைப் பாருங்கள்:

மாருதி தன்னை ஐயன் மகிழ்ந்து, இனிது அருளின் நோக்கி,

> "ஆர் உதவிடுதற்கு ஒத்தார்,
> நீ அலால்? அன்று செய்த
> பேருதவிக்கு யான் செய் செயல்
> பிறிது இல்லை; பைம்பூண்
> போர் உதவிய திண்தோளாய்!
> பொருந்துறப் புல்லுக!" என்றான்.

—யுத்தகாண்டம. விடைகொடுத்தபடலம்-20

அல்லையாண்டமைந்த மேனி அழகனும், தன் பொற்பாதம் ஏத்துவார் பிறப்பு அறுப்பவனும், வேதமும் அறனும் சொல்லும் மெய் அறமூர்த்தியும், அரசர் உருக்கொண்டமைந்த வேதியனும், வேத முதற்காரணனும், அறம் வளர்த்த நம்பியுமான ராமபிரானைத் தழுவிக் கொள்ளும் கிடைத்தற்கரிய பேற்றைப் பெற அனுமன் முற்றிலும் தகுதியானவன் என்பதில் ஐயமுண்டோ?

கிட்கிந்தாகாண்டத்தில் முதன் முதலில் ராம இலக்குவர்களை மறைந்திருந்து பார்த்தபோது அவர்களைப் பற்றி,

> " தவமெய்யர் "
> " இவரை, யாவர் ஒப்பவர் உலகில்?"
> " தருமமும் தகவும் இவர் "
> " தருமன் அஞ்சுறு சரிதர் "
> " இவர்கயோ தருமம் ஆவார்!"

—கிட்கிந்தா காண்டம். அனுமப் படலம் 4, 5, 7. 8, 12.

என்றெல்லாம் நினைத்துப் பார்த்ததாகப் பாடுவான் கம்பன். அறத்தின் நாயகனாகிய ராமன் தருமத்தின் உருவம் என்றும், அத்தர்மம் இதுவரையில் தனியாக இருந்தது என்றும், அதற்குத் துணை நிற்கவே அனுமன் வந்தான் என்றும் கம்பன் நம்பினான் என்பதை, அவன் அனுமனைப் பற்றிக் கூறும்,

" தர்மத்தின் தனிமை தீர்ப்பான் "

—கிட்கிந்தா காண்டம். அனுமப் படலம் 31.

என்ற வார்த்தைகள் நமக்குத் தெளிவுறுத்துகின்றன. இழைக்கின்ற விதி முன் செல்லத் தர்மம் பின் இரங்கி ஏக, மழைக்குன்றமனைய ராமன், குழைக்கின்ற கவரி இன்றிக் கொற்ற வெண் குடையும் இன்றித் தனியனாக விடப்பட்டான் அயோத்தியில். அவ்வாறு அயோத்தியில் பின்விட்டுவிட்ட தர்மம் கிட்கிந்தையில் வந்து அனுமன் உருக்கொண்டு ராமனுடன் சேர்ந்து கொண்டதாம். சீதையைத் தேடி இலங்கையில் நுழைந்த அனுமனை, அரக்கருலகில் வாடிய தர்மப்பயிர் செழிக்க வந்த மழையென்று கொண்டாடுவான் கம்பன். சீதையைப் பிரிந்த ராமனின் தனிமையைத் தீர்க்க முயன்றவன் அனுமன்; ராமனைப் பிரிந்த சீதையின் தனிமையைத் துடைக்க முயன்று வெற்றி பெற்றவன் அனுமன். 'உய்தல்' வந்து விட்டதாகச் சீதை சொன்னது தனக்காகமட்டுமல்ல. இனி, இந்த உலகுக்கெல்லாம் உய்வண்ணமின்றி வேறோர் துயர்வண்ணம் உறுவது உண்டோ? எனவே தனியாக்கப்பட்டுத் தவிக்கும் தர்மத்தின் தனிமையைத் தீர்க்க வந்தவன் அனுமன் என்று கம்பன் பாடியது பொருத்தம் தானே!

தன் பெருங்குணத்தால் தனக்கு ஒப்பில்லாதவனாகிய அனுமனின் கதையே சுந்தரகாண்டம் முழுவதும் பேசப்படுகின்றது. காவிய நாயகனாகிய ராமன் அருவமாக இருந்துவிடும் இந்தக் காண்டம் அனுமனுக்கே உரியதாகிவிடுகின்றது. இவ்வாறு ஒரு காப்பியத்தின் ஒரு பெரும் பிரிவு முழுவதும் காவிய நாயகனுக்காகவன்றி வேறோர் பாத்திரத்திற்கு ஒதுக்கப்படுவது ராமாயணத்தின் தனிச் சிறப்பு என்று சொல்லலாம்.

7. ' புகழோடும் ஓங்க நிற்பான்"

தனக்கென வாழாப் பிறர்க்குரியவனாகப் படைக்கப்பட்ட அனுமன் பாத்திரம் இந்திய

இலக்கியம் உலகிற்கு அளித்துள்ள ஒப்பற்ற கொடையாகும். அந்தப் பாத்திரத்தை "ஈன்று புறந்தந்த" பெருமை ஆதிகவியான வான்மீகியைச் சாரும் என்ருல், அதனைச் "சான்ரேன்" ஆக்கிய பெருமை கவிச்சக்ரவர்த்தி கம்பனையே சாரும். அதனைச் சிரஞ்சீவியாக்கிய பெருமை சுந்தர காண்டத்திற்குத்தான் உண்டு. அறிவு, அன்பு, ஆற்றல், தியாகம் இவற்றின் உருவக மான அனுமனைச் சிரஞ்சீவியாக்கியதன் கருத்து இப்பண்புகளுக்கு என்றென்றும் அழிவு இல்லை என்பதைக் குறிக்கவேயாகும். அதனுல்தான் வேதங்கள் உள்ளவரையில் அனுமனும் புகழுடன் இருப்பான் என்று கம்பன் பேசுவான்:-

"வேத நல் நூல்,
உய்த்துள காலமெல்லாம்
புகழொடும் ஓங்க நிற்பான்"

—சுந்தர. திருவடிதொழுத படலம் 46

எனவே அனுமனின் அமரத்வம் அறத்தினுலாகிய புகழோடும் உயர்ந்து நிற்பதாகும் என்பது கருத்து.

தர்மத்தின் வாழ்வினைச் சூது கவ்வுவதும், தர்மம் மறுபடி வெல்லுவதும்தானே இயற்கையின் இரகசியங்கள்.மகாபாரதத்தில் தாமனின் வாழ்வைச் சூதாட்டத்தில் கவர்ந்தான் கௌரவர்கோன். அந்தத் தர்மன் வெல்வதற்கு உதவி புரிந்தது கிருஷ்ண பரமாத்மா. ராமாயணத்தில் தர்ம மூர்த்தியாகிய ராமனின் "வாழ்வைக்" கவர்ந்தவன் ராவணன். அந்த ராமன் மீண்டும் தன் "வாழ்வைப்" பெற உதவியவன் ஆஞ்சனேயன். அதர்மத்தை எச்சரித்துத் திருத்த இரண்டு வரலாறுகளிலும் முயற்சி நடந்தது. கிருஷ்ணனும் தூது சென்ருர்; அனுமனும் தூது சென்ருன். விருப்பும் வெறுப்பும் நிறைந்த அதர்ம ஆட்சியினர் இரண்டு தூதுவர்களின் அறவுரைகளை நிராகரித்ததோடு, அறம் கூறவந்த அந்தத் தூதுவர்களை அழித்துவிடவும் முயன்றனர். எனவே கிருஷ்ணன் பாண்டவர்களை வழிநடத்திச் சென்று வெற்றிபெறும்படி செய்தார்; அனுமன் ராம இலக்குவர்க்குப் பணிபுரிந்து அரக்கரை அழிக்கத் துணை நின்ருன். பாரதத்தில் கிருஷ்ணன் தூது நாடகத்தின் இறுதிக் காட்சிக்கு அடிகோலியது போன்று ராமாயணத்தில் அனுமன் தூது ராவண வதத்திற்கு அடிகோலியது.

அவதார புருஷர்கள் தோன்றும்போதெல்லாம் அவர்கள் நோக்கம் நிறைவேறப் புருஷோத்தமர்களும் தோன்றுவது மரபு. மகாபாரதத்தில் பூபாரம் குறைக்க வந்த கிருஷ்ணனுடைய நோக்கத்திற்குத் துணை செய்ய விரத வீரர் பீஷ்மர் வந்தார். ராமாயணத்தில் ராமனுக்குப் பணிபுரிய ஆஞ்சனேயன் தோன்றினுன். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் பணியை நிறைவு செய்ய விவேகானந்தர் வந்தார். பீஷ்மரும், மாருதியும், விவேகானந்தரும் பிரம்மச்சாரிகளாகவேயிருந்து தமக்கென வாழாமல் பிறர்க்கு என்றே வாழ்ந்த பெரியோர்களாக விளங்கினர்.

ராமாயணத்தில், நாடிழந்த வானர மன்னனுடைய அமைச்சர்களுள் ஒருவனுகத் தோன்றிய அனுமன், வேறு எந்தப் பாத்திரமும் அடையாத உன்னத நிலையை அடைந்ததற்குக் காரணம் அறத்தின் மேல் அவன் கொண்ட தன்னலம் இல்லாத பக்தியேயாகும். சிரஞ்சீவித்தன்மை பெற்றுவிட்ட பின்னும், அந்தப் பேற்றினை ராமபக்திக்காகவே அனுமன் அர்ப்பணித்துவிட்டான் என்பது மரபு. "எங்கெல்லாம் ராம நாமம் பாடப்படுகின்றதோ, எங்கெல்லாம் ராமன் கதை பேசப்படுகின்றதோ அங்கெல்லாம், கண்களில் கண்ணீர் மல்க, கூப்பிய கரங்களுடன் ராம சிந்தனையில் மெய்மறந்திருப்பான் அரக்கர் குலம் அழித்த அஞ்சனைச் செல்வன்"

என்று கூறும் ராமாயணத் தியான சுலோகம்:-

यत्र यत्र रघुनाथ कीर्तनं तत्र तत्र कृतमस्तकाञ्जलिम् ।
बाष्पवारि परिपूर्णलोचनम् मारुतिं नमत राक्षसान्तकम् ॥

இந்தக் கர்மயோகியின் பார்வையில் சீதையின் பண்பு நலன்கள் பற்றி ஓரளவு தெரிந்துகொள்ள முயன்ரேம். துணையின்றித் தனித்துவிடப்பட்ட சீதைக்குப் புத்துயிரூட்டிய வீரன் கண்ட சீதையின் மாண்புகளைப் புரிந்துகொள்ள முயன்ரேம். காற்றின் மைந்தன் கண்ட காகுத்தன் மனைவி, கற்பின் கனலியாக மட்டுமின்றிப், பிறந்த, புகுந்த குலப் பெருமையைக் காக்கும் பொறுமையின் சிகரமாகவும், மகளிர் ஆற்றும் தவத்தின் மாட்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும், பெண்மையின் இலக்கணங்களுக்கெல்லாம் அற்புதமான ஓர்

இலக்கியமாகவும் விளங்கியதைக் கண்டோம். அறிவும் ஆற்றலும் நிறைந்த அனுமன், சீதை ராமனை நினைந்து உருகி ஆற்றிய தவத்தைப் பார்த்தபின்தான் பக்தியின் முழுத் தோற்றத்தையும் உணர்ந்துகொண்டான் போலும். கர்ம யோகத்திலும் ஞானயோகத்திலும் நிறைவு பெற்ற மாருதி பக்தியோகத்திலும் நிறைவு பெறுவது சிறை இருந்த செல்வி ஆற்றிய சீரிய தவத்தைப் பார்த்த பின்புதான் என்று கருதுவது மிகையாகாது.

பகவத்கீதையில் கிருஷ்ணபரமாத்மா, தன்னுடைய எல்லையில்லாத பெருமைகளையெல்லாம் பார்த்தனுக்கு விளக்கிக்கொண்டு வரும்போது பெண்மையின் தலைசிறந்த பண்புகளாகத் தான் விளங்குவதாகக் கூறுகின்றார். அவர் விவரித்த பண்புகளாவன :

நெறியான வாழ்க்கையின் நிழலாக வரும் 'புகழ்',
அழியாத அழகுடைய 'திரு',
உள்ளத்தின் உண்மை ஓசையாகப் பரிணமிக்கும் 'சொல்',
மனத்தைப் பண்படுத்தும் நிகழ்ச்சிகளையும் கருத்துக்களையும் தெளிவாக நினைவிலிருத்தும் 'நினைவு',
சாஸ்திரங்களின் உட்கருத்தை உள்ளபடி உணர்ந்துகொள்ளும் 'அறிவு',
துன்பம் வந்தபோது உடலும் உள்ளமும் தடுமாறாமல் இருக்கும் 'திண்மை',
தன் தவற்றைப் போன்று பிறர் குற்றத்தையும் பொறுத்துக்கொள்ளும் 'பொறுமை'

ஆகிய இம்மேலாம் பண்புகள் பெண்மையில் தான் விளங்குவதாகப் பேசுவார் கிருஷ்ண பரமாத்மா. பெண்மையின் இலக்கணங்களான இந்தப் புகழ், திரு, சொல், நினைவு, அறிவு, திண்மை, பொறுமை இவற்றின் இருப்பிடமாகத் திகழ்ந்தவள்தான் அனுமன் கண்ட சீதை. கீதை மொழியுடன் இக்கட்டுரையை நிறைவு செய்வோம்:

कीर्तिः श्रीर्वाक्च नारीणां स्मृतिर्मेधा धृतिः क्षमा

கீர்த்தி: ஸ்ரீர்வாக்ச நாரீணாம் ஸ்ம்ருதிர்மேதா த்ருதி: க்ஷமா

— பகவத்கீதை அத்யாயம் 10, சுலோகம் 34.

இரண்டு நண்பர்கள் ஒரு மாந்தோப்புக்குச் சென்றனர். அவர்களுள் ஒருவன் தோப்பின் பரப்பு என்ன என்பதைக் கணககெடுத்தான். மரங்கள் எத்தனை இருக்கின்றன என்று எண்ணிக் கணக்கு எடுத்தான். மரத்திலுள்ள காய்களையும் எண்ணிக் கணக்கெடுத்தான். மரங்களிலுள்ள இலைகளையும் கணக்கெடுக்க முயன்றான். நாள் முழுவதும் இப்படிக் கணக்கு எடுப்பதிலேயே காலத்தைக் கழித்தான். அவனுடைய நண்பன் தோப்புக்குப் போனதும், தோப்புக்குச் சொந்தக்காரன் யார் என்பதைக் கண்டுபிடித்தான். அவனோடு நட்பும் செய்து கொண்டான். நல்ல மதுரமான மாங்கனிகளைச் சொந்தக்காரனிடமிருந்து பெற்று அருந்தினான். தோட்டக்காரனோடு நட்புப் பூண்டு கனி அருந்தியவன் கெட்டிக்காரனா? அல்லது இலைகளையும் கிளைகளையும் எண்ணிக் கணககுப் பார்த்தவன் கெட்டிக்காரனா ? கனி அருந்தியவன் தான் கெட்டிக்காரன்.

மானுடா ! நீ உலகுக்கு வந்திருப்பது இவ்வுலகத்துக்குச் சொந்தக்காரனாகிய இறைவனோடு நட்புக்கொண்டு ஞானக்கனி அருந்துவதற்காக. இயற்கையை ஆராய்ச்சி செய்து காலமெல்லாம் இயற்கையில் கட்டுண்டு கிடப்பதற்கு நீ வந்தவனல்லன் என்பதை யாண்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். மனதையும், இயற்கையையும் நீ வெல்ல வந்திருக்கின்றாய். அவற்றால் வெல்லப்பட்டவன் ஆகிவிடக்கூடாது. ஞானக்கனி அருந்தி இன்புற்று இரு. வெறும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் காலத்தை வீணாக்காதே.

— *ஸ்ரீ ராமகிருஷ்ணர்.*

குறிப்புகள்

சக்திசங்க முகாம்

விருதுநகரில் தாய்மார்கள் சக்தி சங்கம் அமைத்துச் சிறுமிகளுக்கும் மகளிர்களுக்கும் ஆன்மீகப் பயிற்சி அளித்து வருகின்றார்கள். ஆண்டுதோறும் சக்தி சங்கத்தினர் மூன்று நாட்களுக்குக் கோடை முகாம் ஒன்று அமைத்துச் சிறுமிகளுக்குச் சிறந்த வாழ்க்கைப் பயிற்சி தருகின்றனர். இவ்வாண்டு அம்முகாமை ஏப்ரல் 29, 30, மே 1 ஆகிய தேதிகளில் விருதுநகரில் நடாத்தினார்கள். அதிகாலையில் எழுந்திருந்து இரவு படுக்கப் போகும் வரையிலும் சேவைக்கும் பக்திக்கும் உயர் சிந்தனைக்கும் திட்டம் வகுத்து அதைச் செயல் முறையில் கொண்டு செலுத்தினார்கள். கோடை விடுமுறையை நன்கு பயன்படுத்துவதற்கு இதுபோன்ற பயிற்சி முகாம் பல இடங்களில் நடப்பது அவசியமாகிறது. இந்த முகாமில் பயிற்சி பெறுகின்ற சிறுமிகள் காலத்தை நன்கு பயன்படுத்தக் கற்றுக்கொள்வதோடு இந்தியப் பண்பை மற்றவர்களுக்கு வழங்கும் சிறந்த பெண்மணிகளாக மாறி அமைவார்கள்.

இவ்வாண்டு முதல்நாள் முகாமில் முகாம் நடத்துகின்றவர்களும், முகாமில் கலந்து கொண்ட அறுபது சிறுமிகளும

சிவாய நமஓம் சிவாய நம:
சிவாய நமஓம நமசிவாய

என்ற நாம உச்சாரணை செய்துகொண்டு ரோசல்பட்டிக் கிராமத்திற்கு நடந்து சென்றனர். ரோசல்பட்டி மக்கள் அவர்களை அன்புடன் வரவேற்றனர். சிறுமிகள் மட்டற்ற மகிழ்ச்சியுடன் ரோசல்பட்டி ஊரிலுள்ள கோவில் ஒன்றைத் துப்புரவு செய்வதிலும், தெருக்களைத் துப்புரவு செய்வதிலும் ஈடுபட்டனர். ஒரு மணிநேரம் அவர்கள் மகிழ்ச்சியுடன் செய்த தொண்டு பாராட்டுதற்குரியதாக இருந்தது. பின்பு அனைவரும் கோவிலில் ஒன்றுகூடிப் பஜனை செய்தனர். பஜனையின் மூலம் அவ்வூர் மக்களின் உள்ளத்தில் பக்தியை ஊட்டினர். பஜனையில் கலந்துகொண்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கி ஈசனுடைய அருளுக்கு அனைவரையும் பாத்திரமாக்கினர். அதன் பிறகு ஊர் மக்களுக்கு விளங்குகின்ற பாங்கில் சிறந்தகருத்துக்களை நாடகங்களாக நடித்துக் காட்டினர். அக்கிராம மக்களுடைய உள்ளத்தில், துப்புரவு வேலை செய்ததன் மூலம் சேவை மனப்பான்மையையும், பஜனை செய்ததன் மூலம் பக்தி மனப்பான்மையையும், உயர்ந்த கருத்துக்களை நாடகங்களாக நடித்துக் காட்டியதின் மூலம் நல்லறிவையும் வளர்க்கும் தொண்டில் அம்முகாம் சிறுமிகள் அன்று ஈடுபட்டிருந்தது யாவருக்கும் ஆனந்தமாக இருந்தது.

முகாம் நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறுமிகளுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதாகவும், அதே நேரத்தில் மனதைப் பண்படுத்துவதாகவும், சிந்தனா சக்தியை வளர்ப்பதாகவும், மன இயல்பை வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருந்தன. இம் முகாமை நேரில் பார்த்துப் பயனடைவதோடு இம்முகாம் போன்று இன்னும் பல இடங்களில் தாய்மார்கள் நடத்துவதற்கு முயல்வார்களானால் இந்தியப் பண்பும் கலாச்சாரமும் மக்களிடையே நல்ல முறையில் வளர்ந்து வருவதற்கு உதவியாக இருக்கும். ஒவ்வொரு நாளும் சீரிய கருத்தை மையமாகக் கொண்டு சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும் அக்கருத்தை விளக்குவதற்கு முகாம் சிறுமிகள் பயிற்சி பெறுகின்றனர். இவ்வாண்டு முதல்நாள் செய்தியாகச் சேவை என்ற கருத்துத் தரப்பட்டது. அக்கருத்தைச் செயல்படுத்துவதற்கு ரோசல்பட்டிக் கிராமத்துக்குப் பாதயாத்திரையாகச் சென்று சரீரச் செயல்களாலும், சொல்லாலும், நாடகத்தாலும் ரோசல்பட்டி கிராமமக்களுக்குச் சேவை என்றால் என்ன என்பதை விளக்கிக் காட்டினார்கள். இரண்டாம்நாள் செய்தியாக நம்பிக்கையும், மூன்றாம்நாள் செய்தியாக இன்பமும் அவர்களுக்குத் தரப்பட்டிருந்தன. இச்செய்திகளை மையமாகக் கொண்டு அவர்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் வாழ்க்கைப் பயிற்சியை அமைத்து அவற்றிற்கு விளக்கம் தந்தார்கள். ஆன்மீகப் பயிற்சி எப்படி அமையவேண்டும் என்பதற்கு இம்முகாம் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கி வருகிறது.

பாதயாத்திரை—10

மே மாதம் 2ஆம் தேதி பெரியார் மாவட்டத்திலுள்ள சென்னிமலையில் இவ்வாண்டுப் பாதயாத்திரை துவங்கியது. காவேரியோடு பவானிஆறு சங்கமமாகும் பவானியில் இவ்வாண்டுப் பாதயாத்திரை முடிவுபெற்றது. தபோவனம் நடத்திய இப்புனித பாதயாத்திரையில் இவ்வாண்டு எண்பத்தாறுபேர்கலந்து கொண்டனர். பாதயாத்திரை அன்பர்கள் அனைவரும் மே மாதம் முதல்தேதி மாலை 5 மணிக்கு முன்பு சென்னிமலையிலுள்ள கைலாச நாதர் கோவிலுக்கு வந்து சேர்ந்தனர். கைலாசநாதர் கோவிலில் சென்னிமலை அன்பர்கள் பாதயாத்திரை அன்பர்களைப் பூரண கும்பத்துடன் வரவேற்று ஆலய வழிபாடு செய்து வைத்தனர். அங்கிருந்து நாம பஜனையுடன் சென்னிமலையிலுள்ள அருணகிரிநாதர் நற்பணி மன்றத்துக்குப் பாதயாதரிகர்களை அழைத்துச் சென்றார்கள். பாதயாத்திரை அன்பர்கள் தங்குதற்கும், உணவுக்கும் அங்குதான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கிருந்து இருபது மைல் தூரத்திலுள்ள சிவன் மலைக்குப் பாதயாத்திரை அனபர்களை அழைத்துச் செல்ல இரண்டு பஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பஸ்களில் பஜனையுடன் சென்று சிவன மலைமீது ஏறி முருகன் சந்நிதி முன் அமர்ந்து பாதயாத்தரை அன்பர்கள் ஐக்கிய வணக்கம் செய்து முருகனை வழிபட்டு வந்தனர். வழியில் முருகனுடைய அருளால் ஏற்பட்ட கிணறு ஒன்றில் தீர்த்தம அருந்தும் வாய்ப்பு பாதயாத்திரை அன்பர்களுக்குக் கிடைத்தது.

சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னிமலையைச் சுற்றிலும் ஒரே மேட்டாங்காடாக இருந்தது. அங்குச் சாது ஒருவர் சென்னிமலையின் தென் சாரலில் சாலை ஓரத்திலிருந்த மரத்தடியில் பித்தனைக் கமண்டலத்துடன அமர்ந்திருந்தார். நெடுந்தூரத்துக்கப்பாலிருந்து ஓர் ஆள் ஓடிவந்தான். 'சுவாமி ஒருவாய் தணணீர்' என்று நாவறட்சியுடன் கேட்டான். 'என்னிடம் இருப்பது வெறுங் கமண்டலம்; அதில் நீர் இல்லை' என்று சாது அதைத் தூககிக் குப்புறககவிழ்த்துக் காட்டினார். 'தாகத்தால் உயிர் போகிறது' என்று அவன் சோர்ந்து கீழே உட்கார்ந்தான். அக்காட்சி சாதுவின் உள்ளத்தைப் பற்றிப் பிடித்தது. இங்கு ஒரு கிணறு வெட்டாது வாழ்ந்திருப்பதில் என்ன பயன் என்று எண்ணினர். இரவும் பகலும் அவ்வெண்ணமே அவரிடத்தில் குடிகொண்டிருந்தது. ஒவ்வோர் இரவும் படுக்கப்போவதற்கு முன்பு 'முருகா' என்று முருகனை வழுத்தி விட்டுப் படுப்பார். ஆனால் தூக்கம் பிடிக்காது. கிணறு வெட்ட வேண்டுமென்ற சிந்தனையில் பித்துப் பிடித்தவர் போன்று ஆய்விட்டார். ஒருநாள் இரவு குழந்தை வேலாயுதன் அவர் கனவில் தோன்றி ஓணன் கொடியை ஓர் இடத்தில் வட்டமாகச் சுற்றிக் கட்டி அவ்விடத்தில் பதினறு முழம் தோண்டினல் தெளிந்த நீர் கிடைக்கும் என்று கூறிவிட்டு மறைந்தான். காலையில் எழுந்தவுடன் கனவில் சுட்டிக் காட்டப்பட்ட இடத்தைச் சாது சென்று பார்த்தார். ஓணன் கொடியால் ஓர் இடம் எல்லைகட்டப்பட்டிருந்தது. கிணறு வெட்டும் செயலில் அவர் இறங்கினர். திங்கட்கிழமை தோறும்சென்னிமலையின் மலைப்படியில்யாசகத்துக்கு அமர்ந்தார். யாசகமாகக் கிடைத்த தொகையைக் கொண்டு மண்வெட்டி, கூடை, கடப்பாரை, பிக்காசு ஆகியவைகளை விலைக்கு வாங்கினர். அவற்றைக்கொண்டு அல்லும் பகலும்கிணறு வெட்டும் வேலையில் முனைந்தார். மலைவாசற்படியில் கிடைத்த பொரிகடலையை மாட்டுக்காரப் பையன்களுக்குக் கூலியாகக் கொடுத்துக் கிணறு வெட்டும் வேலைக்கு அவர்களையும சேர்த்துக் கொண்டார். சில மாதங்கள் சிரத்தையோடு அவ்வேலையைச் செய்து பதினறு முழ ஆழத்திற்குக் கிணற்றைத் தோணடினர். ஓர் இரவு நிலா வெளிச்சததில் பிக்காசால் கிணற்றைத் தோண்டிக்கொண்டிருந்தபொழுது அவருக்குத் துயரம் வந்துவிட்டது. 'முருகா, உன்னை நம்பி இந்த வேலையில் இறங்கி வ்ட்டேன். உன் ஆணைப்படி பதினறு முழம் உயிரைப் பிடித்துககொண்டு வெடடி விடுகின்றேன். பதினறு முழததுக்குள் நீர் அகப்படாவிட்டால் இந்தக குழியலேயே விழுந்து உயிரைமாய்த்துக்கொள்வேன்' என்று உணர்ச்சி ததும்பச் சொல்லிக்கொண்டு பதினறுவது முழத்தின் பெரும்பகுதியை வெட்டி முடித்தார். நீர் ஊற்றின் அறிகுறி எதுவும்

தென்படவில்லை. வெட்ட வேண்டியது ஒரு மூலையில் கொஞ்சம் பாக்கியிருந்தது. அந்த இடத்தில் ஓங்கிப் பிக்காசை நாட்டினர். பிக்காசு பொத்துக்கொண்டு கீழே போக அங்கிருந்து நீர் குபு குபு என்று குமிழி இட்டுக் கொண்டு மேலே வந்தது. அந்தச் சாது நீரை அள்ளி அள்ளிக் குடித்து உள்ளிருக்கிற ஆத்மாவுக்கு அபிஷேகம் செய்தார். முருகன் அருளால் தோன்றிய அக்கிணற்றைப் பார்க்கும் பாக்கியம் பாத யாத்திரை அன்பர்களுக்குக் கிடைத்தது. பாத யாத்திரை அன்பர்களும் தங்கள் உள்ளே இருக்கும் ஆத்மாவுக்கு அக்கிணற்று நீரை அள்ளிக் குடித்து அபிஷேகம் செய்தார்கள். பாத யாத்திரைக்கு முதல் நாள் பாதயாத்திரை அன்பர்கள் எல்லாரும் இங்ஙனம் முருகன் திருவருளுக்குப் பாத்திரமானார்கள்.

2—5—82 காலை 4-30 மணிக்குள்ளாக ஸ்நானம் முடித்துவிட்டுப் பாத யாத்திரை அன்பர்கள் 5-30 மணிவரையில் பிரார்த்தனை செய்தார்கள். காலை 5-30 மணிக்கு ஸ்கந்தர் சஷ்டி சொல்லிக்கொண்டு சென்னிமலைப் படியின்மீது ஏறினர். 6-30 மணிக்கு மலை உச்சியை அடைந்தனர். ஆங்குள்ள சுப்பிரமணியர் சந்நிதியின் முன் அமர்ந்து ஐக்கிய வணக்கம் செய்தனர். பிறகு சுவாமி தர்சனம் செய்துகொண்டு 8-15 மணிக்குத் தங்கியிருக்குமிடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். காலை 10-00 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரையில் சென்னிமலை அருணகிரி நாதர் நற்பணி மன்றத்தில் நிகழ்ந்த அந்தர் யோகத்தில் பாதயாத்திரை அன்பர்கள் கலந்து கொண்டனர். மாலை 5-30 மணிக்கு அங்கிருந்து,

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண
ஹரே ஹரே

என்ற நாம உச்சாரணையுடன் பாத யாத்திரையைத் துவக்கினர்கள். சென்னிமலை அன்பர்கள் ஊர் எல்லை வரையில் பாத யாத்திரை அன்பர்களுடன் வந்து இன்முகத்துடன் வழியனுப்பி வைத்தனர். சென்னிமலையிலிருந்து ஆறுமைல் நடந்து அன்று இரவு 7-45 மணிக்கு மாடுகட்டிப்பாளையம் என்னும் ஊரைப் பாத யாத்திரை அன்பர்கள் அடைந்தனர். கணவனைத் தெய்வமாக வைத்து வழிபட்ட ஓர் அம்மையார் கணவன் இறந்தபின் தான் உடன் கட்டை ஏறித் தன் கற்பின் திறமையை வெளிப்படுத்தினர். அந்த அம்மையாருக்குக் கோவில் அமைத்துள்ளார்கள். ஆங்கு நேர்த்திக் கடன் செய்வதற்கும் வழிபாடு செய்வதற்கும் நாய்க்கன்மார்கள் பௌர்ணமி அன்றும், ஸ்ரீ ராமநவமி அன்றும் வருகின்றனர். அமைதியான இடம். பக்கத்திலுள்ள சிறு சிறு கிராமங்களிலிருந்து சுமார் நூறுபேர் அன்று ஆங்குக் கூடியிருந்தனர். இமயமலையிலுள்ள பத்ரிநாத், கேதாரநாத் க்ஷேத்திரங்களும், கங்கை சமவெளியை அடையும் இடமாகிய ஹரித்துவாரும், சமவெளியில் கங்கைக் கரையிலுள்ள பிரயாகையும் காசியும் கல்கத்தாவும் திரைப்படக் காட்சியில் அவர்களுக்குக் காட்டப்பட்டன. மானுடனாகப் பிறந்தவன் கங்கையையும் காசியையும் பார்த்தாகவேண்டுமென்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார். அக்கிராம மக்கள் திரைப் படத்தின் மூலம் காசியையும், கங்கையையும் பார்க்கும் பேறு பெற்றார்கள். அப்பேற்றைத் தவிர நேரில் சென்று காணும் பேறு அவர்களுக்கு எங்கே கிடைக்கப் போகிறது! கிராமத்தைத் துப்புரவாக எப்படி வைத்துக்கொள்ள வேண்டும் என்பதைத் திரைப் படம் மூலமாக அன்று அவர்களுக்குக் காட்டப்பட்டது.

3—5—82 அன்று காலை 4 மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்து பானம் அருந்தி,

சிவாய நம ஓம் சிவாய நம:
சிவாய நம ஓம் நம சிவாய

என்ற நாம உச்சாரணையுடன் பாத யாத்திரையைக் காலை 5 மணிக்குத் தொடர்ந்தனர். காலை 7-30 மணிக்கு அங்கிருந்து ஆறுமைல் தூரத்திலுள்ள விஜயமங்கலத்தை அடைந்தனர். விஜயமங்கலத்தில் ஸ்ரீ நாகேஸ்வரர் ஆலயத்தில் பாதயாத்திரை அன்பர்களைப் பூரண கும்பம் கொண்டு வரவேற்றனர். சிறப்பான முறையில் சுவாமி தரிசனம் செய்துவைத்தனர். ஆறுமுகப் பெருமான் அலங்காரக் கோலத்துடன் காட்சி கொடுத்தார். பாத யாத்திரை அன்பர்களுக்குச் சித்திரான்னத்துடன் அங்குச் சிற்றுண்டி ஆயத்தமாக இருந்தது. சிவப்பிரசாதமாக அதை ஏற்றுப் பாத

யாத்திரை அன்பர்கள் உடல் உற்சாகமும் உள்ளத்தெளிவும் பெற்றார்கள்.

சுவாமி விவேகானந்தர் மேறைநாடுகளில் நான்கு ஆண்டுகள் தங்கி ஆன்ம ஞானத்தைப் புகட்டினார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு தாய் நாட்டுக்குத் திரும்பினார். அப்பொழுது மேனாட்டுப் பிரமுகர்கள் "நான்கு ஆண்டுகள் மேனாட்டு வாழ்க்கைக்குப் பிறகு தாங்கள் இந்தியாவைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்"? என்று கேட்டார்கள். "மேனாட்டுக்கு வருவதற்கு முன்பு இந்தியாவை ஒரு சாதாரண நாடாக எண்ணியிருந்தேன். ஆனால் இப்பொழுது இந்தியாவின் தூசியும் புனிதம் நிறைந்ததாக எனக்குத் தென்படுகிறது" என்று இந்தியாவின் பெருமையை எடுத்து விளக்கினார். பாதயாத்திரை அன்பர்கள் விஜயமங்கலம் என்னும் ஊருக்குள் நுழையும்பொழுது அவ்வூரைப்பற்றிச் சாதாரணமாக எண்ணியிருந்தார்கள். அவ்வூரின் வரலாறு கல்வெட்டு ஆராய்ச்சியாளராகிய திரு ராஜு என்பவரால் விளக்கப்பட்ட பின்பு அதன் புனிதத் தன்மையை அறிந்து உவகை அடைந்தார்கள். விஜயமங்கலம் என்னும் ஊர் கொங்குநாட்டில் குறுக்கு நாட்டைச் சார்ந்தது. கொங்கு நாட்டின் பரப்பு தமிழ்நாட்டின் ஐந்தில் ஒருபங்கு ஆகும். ஆனால் இக்கொங்கு நாட்டில் பாடல் பெற்ற தலங்கள் கருவூர் (கரூர்), வெஞ்சமான்கூடல், கொடுமுடி, திருச்செங்கோடு, பவானி, அவினாசி திருமுருகன்பூண்டி முதலிய ஏழு ஸ்தலங்களாகும். விஜயமங்கலத்திலுள்ள சிவன்கோவிலில் 24 கல்வெட்டுக்கள் உள்ளன. அக்கல்வெட்டுக்களில் விஜயமங்கலத்தின் நிகழ்ச்சிகளெல்லாம் எழுதப்பட்டுள்ளன. கோவிலுக்குச் சொந்தமாயுள்ள நிலங்களைப் பயிரிடுவோர் கோவிலுக்கு நெல் குத்தகை அளந்து வந்தார்கள். மழையில்லாது வறட்சியினாலும், மழை ஏராளமாகப் பொழிந்து வெள்ளப் பெருக்கினாலும் பயிர் செய்வது தடைபட்டாலும் கோவிலுக்குரிய குத்தகை நெல் தடைபடாது கொடுக்கப்பட்டு வந்தது. குத்தகை கொடுப்பவர் குத்தகை கொடுக்கத் தவறினால் 'மண்கலம் தகர்த்து வெண்கலம் பறிக்க' என்று அக்கல்வெட்டில் காணப்படுகிறது. அதாவது குத்தகைக்காரர் வீட்டிலுள்ள மண்கலங்களை உடைத்துவிட்டு வெண்கலப் பாத்திரங்களை ஜப்தி செய்யவேண்டும் என்பது பொருள். ஆனால் இக்கொள்கையைச் சிறிது காலத்துக்குப் பிறகு தோன்றிய நல்லடியார் என்பவர் 'மண்கலம் தந்து வெண்கலம் கொள்க' என்று மாற்றியமைத்துள்ளார். இந்த வாசகமும் கல்வெட்டில் காணப்படுகிறது. அக்கல்வெட்டுக்களில் பசு தானம் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அது அக்கால மக்களுடைய பெருமையை விளக்குவதாக இருக்கிறது. கல்வெட்டுக்களில் பன்னிரண்டரைப் பசு தானம் கொடுத்ததாக எழுதப்பட்டிருக்கிறது. அரைப்பசு என்பது வாசகர்களுக்கு ஒரு வியப்பைத் தரலாம். ஒரு பசு தானம் என்றால் பசுவும் கன்றும் சேர்ந்ததாகும். முக்கால் பசு தானம் என்றால் சினையுடன்கூடிய பசுவைக் குறிக்கும். ஊட்டுமறந்து சினையாகாத நிலையிலிருந்தால் அது அரைப்பசு எனப்படும். கன்றுக்குட்டி நிலையிலுள்ள பசுவைத் தானம் கொடுத்தால் அது கால் பசு தானம் எனப்படும். இங்ஙனம் அக்காலத்து விஜயமங்கல மக்களின் தானச் சிறப்புக்கள் விஜயமங்கலக் கல்வெட்டுக்களில் இருக்கின்றன என்று கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு ராஜு விளக்கினார். மேலும் தமிழ்ப் புலவர்கள் பலர் தோன்றியது விஜயமங்கலத்தில்தான் என்பதையும் கூறினார். தமிழில் பெருங்கதை எழுதிய கொங்குவேளிர், நன்னூல் எழுதிய பவணந்தி முனிவர், நேமிநாதர், அடியார்க்கு நல்லார், கொங்குமண்டல சதகம் பாடிய கார்மேகக் கவிஞர் ஆகிய தமிழ்ப் புலவர்கட்கு ஆங்குச் சிற்பங்கள் இருக்கின்றன. விஜயமங்கலத்தின் மகிமையைக் கல்வெட்டு ஆராய்ச்சியாளரான புலவர் திரு ராஜு அவர்கள் இங்ஙனம் தெளிவாக எடுத்து விளக்கினார். அந்தப் பரம்பரை இன்னும் அழிந்துபட்டுப் போகவில்லை என்பதற்கு அறிகுறியாக அவ்வூரில் ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் இருக்கின்றார். அப்பெருமகனார் அப்பகுதி மக்களுக்குச் சிறந்த சமயப்பணி செய்து வருகின்றார். பாதயாத்திரை அன்பர்களுக்கு அவர் சிறந்த ஏற்பாடுகள் செய்திருந்தார். அவர் அவ்வூரிலுள்ள பெருமாள் கோவிலுக்குப் பாதயாத்திரை அன்பர்களை அழைத்துச் சென்று தரிசனம் செய்து வைத்தார். அவ்வூரில் சமணக் கோவில்

ஒன்றும் இருக்கிறது. ஆங்குச் சிற்ப வேலைகள் நன்கு அமைந்திருக்கின்றன. ஆதிநாதர் என்ற முதல் தீர்த்தங்கரரின் வரலாற்றுச் சிற்பங்கள் ஆங்கு அமைந்திருக்கின்றன. தொல்பொருள் பாதுகாப்புத் துறையினரிடம் இப்பொழுது அக்கோவில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆங்குள்ள சிற்பங்களைப்பற்றியும் கல்வெட்டுக்களைப்பற்றியும் திரு ராஜு அவர்கள் பாதயாத்திரை அன்பர்களுக்குத் தெளிவாக எடுத்து விளக்கினர். பாதயாத்திரை அன்பர்கள் திரு ராஜுவின் மூலம் கொங்கு நாட்டின் மகிமையை நன்கு அறிந்துகொண்டார்கள்.

இங்கிருந்து விஜயமங்கலம் சேரிக்குப் பாதயாத்திரை அன்பர்கள் சென்றனர். சேரித் துப்புரவு ஆங்குச் செய்வதற்குப் பாதயாத்திரையில் திட்டம் போடப்பட்டிருந்தது. ஆனால் என்ன நிகழ்ந்தது என்பதைச் சொல்லியாக வேண்டும். அச்சேரி மக்கள் எத்தனைய மகிழ்ச்சியோடு பாதயாத்திரை அன்பர்களை வரவேற்றார்கள் தெரியுமா! அவர்கள் காட்டிய அன்பைப் பாதயாத்திரைக்கு வந்திருந்தவர்கள் தாம் அனுபவித்திருக்கமுடியும். அச்சேரியில் நாற்பத்தொன்பது வீடுகள் இருக்கின்றன. ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் பாதயாத்திரை அன்பர்கள் சென்று அன்பைப் பெற்றார்கள். வீட்டின் உள்ளும் புறமும் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. வீட்டுச் சுவர்களுக்கு உள்ளும் புறமும் வெள்ளையடித்தும், தரைக்குச் சாணமிட்டு மெழுகியும், வீட்டின் பொருள்களை ஒழுங்காக அடுக்கி வைத்தும் அவர்கள் துப்புரவு செய்திருந்த காட்சி பாதயாத்திரை அன்பர்களுக்கே படிப்பினை ஊட்டுவதாக இருந்தது. துப்புரவு செய்யப்போன பாதயாத்திரை அன்பர்கள் துப்புரவு எப்படிப் பண்ணவேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டார்கள். அச்சேரி மக்கள் அவர்களுடைய மதுரைவீரன் கோவிலுக்கு அழைத்துச் சென்றார்கள். ஆங்குப் பூஜை செய்து மதுரைவீரன் தரிசனம் செய்து வைத்தார்கள்.

''வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு நீங்கள் நன்கு அறிந்திருக்கிறீர்கள். அதே போன்று உங்கள் உள்ளத்தையும் சுத்தமாக நீங்கள் வைத்துக்கொள்ளவேண்டும். வாரம் ஒரு முறையோ, இருமுறையோ மதுரைவீரன் கோவிலின் முன் சேரிமக்கள் அனைவரும் ஒன்றுகூட வேண்டும். எல்லாரும் இப்பொழுது உங்களுக்குக் கற்றுக் கொடுத்த ராம நாம பஜனையைச் செய்யவேண்டும். உங்களுக்கிடையில் படித்திருக்கிற அன்பர் ஒருவர் இருக்கிறார். அவர் உங்களுக்கு ராமாயணம், மஹாபாரதம் சொல்லுவார். அதை நீங்கள் தினந்தோறும் கேட்கவேண்டும்'' என்று அறிவுரை கூறப்பட்டது. அவர்கள் அதை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டார்கள். அவர்களுக்கு இஷ்ட தெய்வம் எது என்று கேட்கப்பட்டபொழுது பெரும்பாலோர் முருகன் என்று சொன்னார்கள். ஒவ்வொரு வீட்டுக்கும் முருகன் படம் வாங்கித்தரப் பாதயாத்திரை அன்பர்களால் தீர்மானம் செய்யப்பட்டது. அங்கிருந்து பாதயாத்திரை அன்பர்கள் கினிப்பாளையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். கினிப்பாளையத்து அன்பர்கள் பாதயாத்திரை அன்பர்களை உற்சாகமாக வரவேற்று உபசரித்தார்கள். கினிப்பாளைய அன்பர்கள் பாதயாத்திரை அன்பர்கட்கும், விஜயமங்கலம் சேரி மக்களுக்கும் சமபந்தி போஜனத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

கினிப்பாளையம் அன்பர் ஒருவர் தோட்டத்தில் சேரிமக்களும், பாதயாத்திரை அன்பர்களும் அவ்வூர்மக்களும் ஒன்று கூடினர். தென்னந்தோப்பின் நிழல் மிக அருமையாக இருந்தது. பெரிய தொட்டியில் நீர் நிரப்பி வைத்திருந்தார்கள். பாதயாத்திரை அன்பர்கள் அதைப் பார்த்து என்ன மகிழ்ச்சி அடைந்தார்கள் தெரியுமா! அந்நீரை மொண்டு குளித்து வெய்யிலின் கொடுமையைப் போக்கிக்கொண்டார்கள். விஜயமங்கலம் சேரியில் வாழ்ந்த மக்கள் ஏழைகளாவார்கள். அவர்களுக்குச் செய்யும் உதவி பரமனுக்குத் திருப்தியளிக்கும். ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு வேஷ்டியும், மேல்துண்டும், ஒரு புடைவையும், சிறுவர்களுக்குக் கால்சட்டையும், துண்டும் வழங்கப்பட்டன. இப்பாதயாத்திரையில் ஓர் அன்பர் ஆயிரம் ரூபாயும், மற்றோர் அன்பர் ஐந்நூற்றொரு ரூபாயும், மற்றோர் அன்பர் இருநூறு ரூபாயும், பாதயாத்திரையில் கலந்துகொண்டவர்கள் தலைக்கு இருபது ரூபாயும் தந்து அச்சேரி மக்களுக்கு உடையும் ஒவ்வொரு வீட்

டுக்கு ஒரு முருகன் படமும் வழங்கி அச்சேரி மக்களின் இகலோக வாழ்வுக்கும் பரலோக வாழ்வுக்கும் உதவி செய்யும் பாக்கியத்தைப் பெற்றார்கள். இறைவன் அருளால் அவர்களை அறியாமல் அவர்களுக்கு அப்பாக்கியம் கிடைத்தது. உடை வழங்கும் நிகழ்ச்சி முடிந்ததும் உணவு வழங்கும் செயல் நிகழ்ந்தது. அச்சேரி மக்களுக்கும் பாதயாத்திரை அன்பர்களுக்கும் உணவு வழங்கும் பொறுப்பைக் கிளிப்பாளைய அன்பர்கள் ஏற்றுச் சிறப்பாகச் செய்தார்கள். திருக்கூட்டத்துக்கு உணவு வழங்கும் வாய்ப்பைப் பெரும்பேறாகக் கருதினவர்கள் அடியார்கள் கூட்டமாவார்கள். அந்த மரபு இன்னும் அழியாது இருக்கிறது என்பதைப் பாதயாத்திரை அன்பர்கள் நேரில் கண்டு அனுபவித்தார்கள்.

கிளிப்பாளையத்திலிருந்து மாலை 4-30 மணிக்கு

ஹரேராம ஹரேராம ராமராம ஹரே ஹரே
ஹரேகிருஷ்ண ஹரேகிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண
ஹரேஹரே

என்ற நாம ஜபத்துடன் பாதயாத்திரையைத் தொடர்ந்து மேற்கொண்டார்கள். இரவு 9-15 மணிக்குப் பாதயாத்திரை அன்பர்கள் பெருந்துறையை அடைந்தனர். பெருந்துறை அன்பர்கள் மேளவாத்தியத்துடன் வரவேற்று சோளீசுவரர் கோவிலுக்கு அழைத்துச் சென்றனர். சோளீசுவரர் தரிசனம் முடிந்த பிறகு பெருந்துறை அரசு மேல்நிலைப்பள்ளியில் உணவுக்கும் தங்குவதற்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

4—5—82 காலை 5 மணிக்குள் ஸ்நானம் முடித்துக்கொண்டு பாதயாத்திரை அன்பர்கள் பெருந்துறையிலுள்ள சோளீசுவரர் ஆலயத்தை அடைந்தனர். அங்கு அரை மணி நேரம் வழிபாடு நிகழ்ந்தது. 'பாதயாத்திரை அன்பர்களும், பெருந்துறை அன்பர்களும், தாய்மார்களும் சுமார் நூற்றிருபது பேர் 'ஓம் நமசிவாய' என்னும் பஞ்சாக்ஷரஜபம் ஒருமணி நேரம் செய்தனர், அந்த ஜபம் கோவிலின் அருள் சக்தியை வளர்ப்பதாக அமைந்தது. அமைதியான முறையில் ஆலய வழிபாடு நிகழ்ந்தது. பெருந்துறை அன்பர்கள் ஏற்பாடு செய்திருந்த சிற்றுண்டியை எடுத்துக்கொண்டு

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஆதிசக்தி மஹாசக்தி பராசக்தி ஓம்

என்ற நாமத்துடன் அங்கிருந்து பாதயாத்திரையைத் தொடர்ந்தார்கள். பெருந்துறை மக்கள் ஊர் எல்லை வரையிலும் பாதயாத்திரை அன்பர்களுடன் வந்து வழியனுப்பி வைத்தார்கள். இன்றுதான் பாதயாத்திரிகர்களுக்கு ஒரு பெரியசோதனை ஏற்பட்டது. சகிப்புத் தன்மைக்குச் சிறந்த பயிற்சி தரப்பட்டது. இறைவனது நாமத்தைச் சொல்லிக்கொண்டு அன்றைய வெய்யிலின் கொடுமையைப் பொருட்படுத்தாமல் பாதயாத்திரை அன்பர்கள் மன உறுதிப்பாட்டையும் சகிப்புத்தன்மையையும் பெற்றனர். 'கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமசிவாயவே' என்று சொல்லிக்கொண்டு நாவுக்கரசர் கடலில் மிதந்து வந்ததாகப்படிக்கின்றோம்.

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஆதிசக்தி மஹாசக்தி பராசக்தி ஓம்

என்று நாமம் சொல்லிக்கொண்டு கோடையின் உச்சி வேளை சூரியனுடைய வெப்பத்தைத் தாங்கி வந்த பாதயாத்திரை அன்பர்களை அன்று காண முடிந்தது. வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் மாறி மாறி அமையக் கூடியது என்பதை அன்று பாதயாத்ரிகர்கள் அனுபவத்தில் உணர்ந்தார்கள். வெயிலில் நடந்த பாதயாத்திரை அன்பர்களுக்கு நிழலின் சுகம் அன்றுதான் விளங்கியது. இடையிடையே சர்பத்தும் நீர்மோரும்கொடுத்து உபசரித்த அன்பர்கள்அமிர்தத்தையே கொடுத்தது போன்று தென்பட்டார்கள். நண்பகல் 11-45 மணிக்குப் பாதயாத்திரை அன்பர்கள் காஞ்சிக் கோயிலை அடைந்தனர். ஆங்குள்ள நீலகண்டேசுவரர் ஆலயத்திற்கு அவ்வூர் அன்பர்கள் அழைத்துச் சென்று தரிசனம் செய்து வைத்தார்கள். மதிய உணவு அவ் அன்பர்கள் சிறந்த முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

அங்கிருந்து மாலை 4 மணிக்குப் பாதயாத்திரை தொடரப்பட்டது. இடையில் அன்பர் ஏற்பாடு செய்திருந்த சிற்றுண்டியை எடுத்துக் கொண்டு சக்தி நாமாவளியுடன் பாதயாத்திரை நிகழ்ந்தது. வழியில் சிற்றாறுபோன்று ஒரு வாய்க்கால் ஓடியது. அதில் ஓடிய நீர் கங்கையின் பிரவாஹம்போன்று தோன்றி

யது. இறைவனுடைய கருணையை என்னென் பது! நண்பகலில் சூரிய வெப்பத்தை அனுப வித்த பாதயாத்திரை அன்பர்கள் கங்கை நதி போன்று ஓடிய வாய்க்காலைப் பார்த்த தும் அவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு ஓர் எல்லையே இல்லை. நாமாவளி நிறுத்தப் பட்டுப் பதினைந்து நிமிடங்கள் ஆங்கு நீராட லாம் என்று சொன்னவுடன் பாதயாத்திரை அன்பர்கள் பெரிய பேறு பெற்றதாக எண்ணினர்கள். தங்களை மறந்து உலகை மறந்து நீரில் நீராடி ஆனந்தம் அடைந் தார்கள். மேலும் பாதயாத்திரை தொடர்ந்தது. மாலை 6-15 மணி சுமாருக்குச் சித்தோட்டின் எல்லைப்புறத்துக்கு வந்து சேர்ந்தார்கள். ஆங்கு ஒரு திறந்தவெளியில் சித்தோடு அன் பர்கள் சிற்றுண்டிக்கு ஏற்பாடு செய்திருந்தார் கள். ஆங்குப் பஜனை செய்து சிற்றுண்டி அருந் தினர்கள். அங்கிருந்து மேளவாத்தியத்துடன் சித்தோட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். சித் தோட்டு மககள் பெருந்திரளாகக்கூடிப் பாத யாத்திரை அன்பர்களை உற்சாகமாகவரவேற்றார் கள். நாதஸ்வர இன்னிசையும், அதையடுத்து நாம பஜனையும், அதையடுத்துத் தேவாரம்பாடு தலும் முறையாக நிகழ்ந்தன. பக்திப் பரவசத் தில் பாதயாத்திரை அன்பர்களும் சித்தோட் டுப் பெருமக்களும் அன்று மெய்மறந்து இருந் தார்கள். முதலில் அவ்வூர் பால தண்டாயுத பாணி ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார்கள். பக்தர்கள் கூட்டம் அப்பொழுது பெருங்கூட்ட மாக இருந்தது.அதுபார்ப்பதற்கு ஓர் அற்புதக் காட்சியாக இருந்தது. அமைதியான முறை யில் பக்தர் குழாமும் பாதயாத்திரை குழாமும் தண்டபாணியைத் தரிசனம் செய்த காட்சி ஓர் அற்புதக் காட்சியாகும். வாழ்க்கையில் அது போன்ற காட்சி அமைவது மிகவும் அரிதாகும். அவ்வூரிலுள்ள எல்லா ஆலயங்களுக்கும் பாத யாத்திரை அன்பர்கள் அழைத்துச் செல்லப் பட்டனர். மிகச் சிறப்பாக வழிபாடு முடிந் தது.அதன் பின் ஊர்ப் பொது இடத்தில் அவ் வூர் மக்களுக்குப் பத்ரிநாத்,கேதாரநாத் படக் காட்சியும்,மதுரைக்கோவிலின் படக்காட்சியும் திரையிட்டுக்காட்டப்பட்டன.

5—5—82 ஆம் தேதி காலை நான்குமணிக்குப் பாதயாத்திரை அன்பர்கள் அங்கிருந்து

"ஸ்ரீ நாராயண ஹரி நாராயண
ஸ்ரீ ஹரி நாராயண நாராயண"

என்ற நாமத்துடன் பாதயாத்திரையை மேலும் தொடர்ந்தார்கள். காலை ஆறரை மணிக்குப் பவானியை அடைந்தார்கள். பவானி அன்பர் கள் மேள வாத்தியத்துடன் பாதயாத்திரை அன்பர்களை வரவேற்றனர். பாதயாத்திரை அன்பர்கள் தங்குவதற்கு ஐயப்ப சேவாசங்கக் கட்டடத்தில் ஏற்பாடு செய்திருந்தார்கள். நாதஸ்வர இன்னிசையும் நாம பஜனையும் தேவார இன்னிசையும் மாறிமாறி உள்ளத்தைக் கவரும் பாங்கில் அமையப் பாதயாத்திரை அன்பர்கள் பவானி ஆற்றுப் பாலத்திலிருந்து தங்குமிடத்துக்கு அழைத்துச் செல்லபபட்ட வர். ஆங்கு ஓர் ஐக்கிய வணக்கம் நிகழ்ந்தது.

அன்றிரவு 7½ மணிககு ஓர் ஊர்வலததுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஸ்ரீ ராமகிருஷ் ணர், ஸ்ரீ சாரதா தேவியார், ஸ்ரீ விவேகானந் தர் ஆகிய மூவர் படங்களை ஒரு வண்டியில் வைத்து நன்கு அலங்காரம் செய்தனர். மின் விளககு அலங்காரமும் அதில் இடம் பெற்றி ருந்தது. கண்ணுககு அது நல்ல காட்சியாக அமைந்திருந்தது. ஊர்வலத்தில் முதலில் தேவாரப் பஜனைக் கோஷ்டியும், அதற்கடுத்து நாதஸ்வர இன்னிசையும், அதற்கடுதது நாம பஜனை செய்யும் பாத யாத்திரை அனபர்கள் கோஷ்டியும், அதற்கடுத்து ஸ்ரீ ராமகிருஷ்ணர், சாரதா தேவியார், விவேகானந்தர் ஆகியவர் களின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நடித்துக் காட்டும் நடிகர்கள் வண்டியும், அதற்குப் பின் மூவர் படங்கள் அலங்கரிக் கப்பட்ட அலங்கார வண்டியும் இடம் பெற்றன. இது ஓர் அற்புத அமைப்பாகப் பார்ப்பவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தது. ஊர்வலத்தின் போது தேவாரக் கோஷ்டி யினர் தேவாரமொன்றை உருக்கத்துடன் இசையோடு பாடினர்கள். அவர்கள் பாடி முடிந்ததும், நாதஸ்வரத்தில் அந்த இசையை அமைத்து வாசித்தார். அவ் இன்னிசைகள் கேட்பவர்கள் உள்ளத்தில் பக்தி உணர்வை எழுப்பின. நாதஸ்வரம் வாசித்து முடிந்ததும் பாதயாத்திரை அன்பர்கள் மூன்று முறை நாம உச்சாரணை செய்தார்கள். அது முடிந்ததும் வண்டியின்மீது வேடம் புனைந்திருந்த மாண

வர்கள் நிகழ்ச்சிகளை நடித்துக் காட்டினார்கள். முதல் நிகழ்ச்சி ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு நடந்த உபநயனக் காட்சியாகும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபநயனம் ஆனவுடன் கொல்ல மாது என்னும் சூத்திர மாதுவிடம் முதல் பிச்சை ஏற்று ஜாதிப் பிரச்னையை ஒழிப்பதற்கு அன்றே வித்தை விதைத்து இருந்தார். இந்நிகழ்ச்சியை மாணவர்கள் சிறப்பாக நடித்துக் காட்டினர்கள். விவேகானந்தர் காசியில் போய்க்கொண்டிருந்த பொழுது குரங்குக் கூட்டம் ஒன்று அவரைத் தாக்க வந்தது. 'மிருகங்களை எதிர்த்து நில்' என்ற வாசகம் அவர் காதில் விழுந்தது. அவர் குரங்குக் கூட்டத்தைப் பார்த்து நின்றபொழுது அவைகள் பின்வாங்கத் தொடங்கின. அப்பொழுது அவர் மிருகங்களை மட்டுமன்றி மிருக இயல்புடைய அனைத்தையும் எதிர்த்து நிற்கவேண்டுமென்று தீர்மானித்தார். இதை இரண்டாவது காட்சியாக மாணவர்கள் சிறப்பாக நடித்துக் காட்டினர்கள். ஒரு சமயம் தக்ஷிணேச்வரக் கோயிலை அமைத்த ராணி ராசாமணி அம்மையார் வழிபாட்டுக்காக ஆலயத்துக்கு வந்திருந்தார். வழிபாடு நிகழ்ந்து கொண்டிருக்கும் பொழுது அவருடைய உள்ளம் நியாய ஸ்தலத்திலிருந்த வழக்கு ஒன்றைப்பற்றி நினைத்தது. இதை அறிந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவ்வம்மையாரின் கன்னத்தில் அறைந்தார். அவ்வம்மையார் அவ்வறையை மகிழ்ச்சியோடு ஏற்று ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய செயலைப் பாராட்டினர். இந்நிகழ்ச்சியை மூன்றாவது காட்சியாக மாணவர்கள் நடித்துக் காட்டினர்கள். ஒரு சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் அறையில் காளிகா பூஜை செய்தார். அறையில் பூஜை பீடம் நன்கு அமைத்து அப்பீடத்தில் ஸ்ரீ சாரதா தேவியாரை எழுந்தருளச் செய்து ஸ்ரீ சாரதாதேவியாரைப் பராசக்தி சொரூபமாக வைத்து வழிபட்டார். இந்நிகழ்ச்சியை மாணாக்கர்கள் சிறப்பாக நடித்துக் காட்டினார்கள். மனைவி கணவனைத் தெய்வமாக வைத்து வழிபட்டால் மட்டும் போதாது; கணவன் மனைவியைத் தெய்வமாக வைத்து வழிபட வேண்டுமென்ற உண்மையை ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்வழிபாட்டின் மூலம் விளக்கினர்.

ஊர்வலத்தின்பொழுது வீதியின் இருபுறங்களிலும் மக்கள் திரளாக இருந்து ஊர்வலத்தைக் கண்டும், ஊர்வலத்தின்பொழுது கூறிய வாசகங்களைக் கேட்டும் பயனடைந்தார்கள். இரவு 9 மணிக்கு ஊர்வலம் ஐயப்ப சேவாசங்கத்தை அடைந்தது. மங்கலம் பாடி ஆரதி செய்யப்பட்டு ஊர்வலம் இனிதே முடிந்தது.

6—5—82 அன்று பாதயாத்திரை திட்டத்தில் விட்டுப்போன துப்புரவு வேலையைப் பாதயாத்திரை அன்பர்கள் பவானியில் தங்கியிருந்த இடத்தைத் துப்புரவு செய்வதன் மூலம் நிறைவேற்றி வைத்தனர். ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் ஒட்டடை அடிக்கும் பணியிலும், கழிவறை சுத்தம் செய்வதிலும், தங்கியிருந்த இடத்தைக் கழுவுவதிலும் பொது வழியைத் துப்புரவு செய்வதிலும் ஈடுபட்டனர். ஒருமணி நேரத்துக்குள் சிறந்த கர்மயோகம் செய்து சித்த சுத்தி பெற்றார்கள். அன்று நிகழ்ந்த அந்தர்யோகத்தில் பாதயாத்திரை அன்பர்களும் கலந்து கொண்டார்கள். பிற்பகல் 3-30 மணிமுதல் 4-30 மணிவரையிலும் பாதயாத்திரை அன்பர்கள் பாதயாத்திரையைப்பற்றித் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். பாதயாத்திரையின்பொழுது நாமாவளி சொல்லுவது பாதி பாதியாகப் பிரித்துச் சொல்லவேண்டும் என்ற கருத்து நிறைவேற்றப்பட்டது. பாதயாத்திரை முழுவதும் அறிவு தானம் சிறந்த முறையில் செய்யப்பட்டது. ஓர் அன்பர் ரூபாய் ஐந்நூறு அறிவு தானத்துக்கு அன்பளிப்புச் செய்திருந்தார். தபோவன வெளியீடுகள் அந்தத் தொகைக்கு ஆங்காங்குள்ள மக்களுக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டன. இவ்வாண்டுப் பாதயாத்திரை அன்னதானம், அறிவு தானம், அருள்தானம் ஆகியவற்றுடன் சிறப்பாக நடந்தேறியது.

செய்திகள்

நிகழ்பவை

குற்றாலம் ஐந்தருவி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமத்தில் ஜூன் மாதம் 16ஆம் தேதி பருவ அந்தர்யோகம் ஆரம்பித்துள்ளது. தொடர்ந்து நடந்து ஆகஸ்டு 15ஆம் தேதிக்குப் பதில் 12ஆம் தேதியே அவ் அந்தர்யோகம் முடிவடையும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

மஹாபாரதம் பிரசார விலை ரூ.	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,, ...	6-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி ,, ...	5-50
இராமாயணம் ,, ...	5-00
தினசரி தியானம் ,, ...	4-00
கர்மயோக விளக்கம் ...	10-00
ஞானயோக விளக்கம் ...	8-00
ராஜயோக விளக்கம் ...	8-00
பரமஹம்சரின் பெருமை ...	6-00
விவேகானந்தர் ஜீவிதம் ...	6-00
விவேகானந்த விவரணம் ...	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	3-50
அனுஷ்டான வேதாந்தம் ...	3-00
எதிர்கால இந்தியா ...	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் ...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை ...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	2-50
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்	2-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை ...	3-50
பரிபூரணானந்தம் ஷை ...	3-00
சின்மயானந்த குரு ஷை ...	3-00
ஆனந்தமானபரம் ஷை ...	3-00
சுகவாரி ஷை ...	3-00
மௌனகுரு வணக்கம் ஷை ...	3-00
எங்குநிறைகின்றபொருள் ஷை ...	2-50
பரசிவ வணக்கம் ஷை ...	1-00
கண்ணன் என்னும் கடவுள் ...	2-50
ஹரிச்சந்திரன் (நாடகம்) ...	2-00
விரதவீரர் பீஷ்மர் ஷை ...	1-50
விபீஷணன் சரணாகதி ஷை ...	1-50
பரமஹம்சர் பாமாலை ...	1-50
காயத்ரீ ...	1-50
நன்மக்களைப் பெறுதல் ...	1-50
அமரநாத யாத்திரை ...	1-25
சந்நியாசி ...	1-25
இறைவணக்கம் ...	1-00
குழந்தைகளின் களிக்கூடம் ...	1-00
சகோதரி நிவேதிதை ...	1-00
இராவண தத்துவம் ...	1-00
வாலி மோட்சம் (நாடகம்) ...	1-00
தவப்புதல்வர்கள் ,, ...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி ,, ...	1-00
தானவீரன் கர்ணன் ,, ...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் ...	1-00
மார்க்கண்டேயன் (நாடகம்) ...	1-00
பிரஹ்லாதன் நாடகம் ...	1-00
தபோபலன் ,, ...	1-00

இந்துமதமும் கிறிஸ்துவ மதமும் ரூ.	1-00
நோய்க்கு இடம் கொடேல் ...	1-00
ஆத்ம சக்தி ...	1-00
*ஆலய வழிபாடு ...	0-75
*சக்தி தத்துவம் ...	0-70
*சிவதத்துவம் ...	0-70
*மனிதனது நிஜசொரூபம் ...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு ...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும் ...	0-60
சைவன் யார்? ...	0-50
*முருகக் கடவுள் ...	0-50
*விஷ்ணு தத்துவம் ...	0-50
தெய்வீக மகிமைகள் ...	0-50
கர்மகாண்டம்எது? ஞானகாண்டம்எது?	0-50
வர்ணாச்ரம தர்மம் ...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும் ...	0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை ...	0-30
கந்தர் அநுபூதி ...	0-25
The Bhagavad Gita (11th Imp.) ...	24-00
Tirukkural (with plastic cover) ...	8-00
The Indian National Education ...	8-00
Ramakrishna Lives Vedanta ...	8-00
Facets of Brahman or The Hindu Gods ...	5-00
Daily Divine Digest (DELUXE) ...	4-50
Daily Divine Digest (Ordinary) ...	2-50
Mahabharata (with plastic cover) ...	6-00
Sri Krishna-The Manifest Divinity ,, ...	6-00
Ramayana ,, ...	4-00
Sri Vishnu Sahasranama Stotram ...	4-00
The Bhagavad Gita (Small Size) ...	4-00
Siva Sahasranama Stotram ...	3-50
Bheeshma The Superman ...	3-50
Hinduism Hosts Christianity ...	3-00
Holy Bible—In the Light of Vedanta ...	1-50
Reminiscences of Master Mahashaya ...	1-50
*Introducing the Gita ...	1-50
The Garland of Paraaparam ...	1-50
Key to Higher Life ...	1-25
The Student ...	1-25
TAT TVAM ASI *That Thou Art* IN *Tayumana Swami* ...	1-00
The Nursery School ...	1-00
The School ...	1-00
The Teacher ...	1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக மஞ்ஜரிக்கு ரூ. 1-80ம் இராமாயணத்திற்கு ரூ. 1-60ம் மஹாபாரதத்திற்கு ரூ. 1-80ம் தினசரி தியானத்திற்கு ரூ 1-40ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 3-00 முதல் ரூ. 4-00 வரையும் சேர்த்து அனுப்புங்கள். * இப்புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

பிரசார நோக்கத்துடன் தர்ம சக்கரம் அடக்க விலைக்கே மாதந் தோறும் வெளியாகி வந்துகொண்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாகக் காகித விலை உயர்ந்தும், ஆள் சம்பளம் உயர்ந்தும் வந்தபொழுதிலும் தர்மசக்கர சந்தாவை இதுவரையிலும் உயர்த்தாதிருந்தோம். ஆனால் இப்பொழுது தர்ம சக்கர சந்தாவை உயர்த்தவேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதுவரையிலும் தர்ம சக்கரப் பிரதி ஒன்றைத் தபாலில் அனுப்புவதற்கு ஐந்து பைசா மட்டுமே தபால் கட்டணமாக இருந்தது. 1—6—82 முதல் தர்ம சக்கரப் பிரதி ஒன்றை அனுப்பத் தபால் செலவு பதினைந்து பைசா ஆகின்றது. ஆகையால் தர்ம சக்கர ஆண்டுச் சந்தாவை ரூ. 12/-லிருந்து ரூ. 15/-க்கும், சகாய சந்தாவை ரூ 8/-லிருந்து ரூ. 10/-க்கும், டிபாசிட் சந்தாவை ரூ. 100/-லிருந்து ரூ. 150/-க்கும் உயர்த்தியுள்ளோம். இந்நிலையில் இதைத் தவிர வேறு வழி இல்லை. எனவே சந்தாதாரர்கள் இச்சிறு கூடுதலைப் பொருட்படுத்தாது தொடர்ந்து சந்தாதாரர்களாக இருப்பதோடு புதிய சந்தாதாரர்களையும் சேர்த்துத் தருவதில் ஊக்கம் காட்டிப் பயன்பெறக் கோருகிறோம்.

புதிய சந்தா விவரம் வருமாறு :

உள்நாடு டிபாசிட் சந்தா	ரூ.	150-00
உள்நாடு வருட சந்தா	ரூ.	15-00
உள்நாடு சகாய சந்தா	ரூ.	10-00
வெளிநாடு வருட சந்தா	ரூ.	35-00

வெளிநாட்டிற்கு டிபாசிட் சந்தாமுறை இல்லை.
வெளிநாடு வருட சந்தாவில் மாறுதல் இல்லை.

மாத வருவாய் ரூ. 200க்குக் குறைவாக உள்ளவர்கள் மட்டுமே சகாய சந்தாத் திட்டத்தில் சேர்ந்து பயன் அடையக் கோருகிறோம்.

டிபாசிட் சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

டிபாசிட் சந்தா ரூ. 100/-லிருந்து ரூ. 150/-க்கு உயர்த்தப்பட்டுள்ளதால் ஏற்கனவே ரூ. 100/-கட்டி டிபாசிட் சந்தாதாரர்களாக இருப்பவர்கள் மேற்கொண்டு ரூ. 50/-ஐ மணியார்டர் மூலமாகவோ, டிராப்ட்மூலமாகவோ அனுப்பித்தர வேண்டுகிறோம். டிராப்ட் அனுப்புபவர்கள் திருச்சியில் மாற்றத்தகுந்தவாறு டிராப்ட் வாங்கி அனுப்பவும். ரூ 50/-ஐ அனுப்பும்பொழுது ஏற்கனவே உங்களிடமுள்ள ரூ. 100/- டிபாசிட் ரசீதையும் அனுப்பித்தந்தால் ரூ. 150/-க்கான ரசீதை உங்களுக்கு அனுப்பிவைப்போம்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.